# கார்காத்தார் ஒப்புரவு

புத்தேள் உலகத்தும் ஈண்டும் பெறல் அரிதே
ஒப்புரவின் நல்ல பிற.

# KARKATHAR OPPURAVU

மலர்–17, இதழ் – 2
Volume - 17, Issue - 2

தைத் திங்கள்
January 2026

விலை ரூ. 25/–
Price Rs. 25/-

ஆண்டு சந்தா ரூ. 300/–
Annual Subscription Rs. 300/-

தமிழ் மாத இதழ்
Tamil Monthly




தொடர்ச்சியான
கால்வலி மற்றும் எரிச்சலை
சாதாரணம் என தவறாக
எண்ண வேண்டாம்
இது வெரிகோஸ்
வெயினின் ஆரம்ப
அறிகுறியாக இருக்கலாம்!
பிரத்தியேக
வாஸ்குலர் துறை
வடு, வலி, தையல்
இல்லா சிகிச்சை
சிகிச்சையின் நாளிலேயே
வீடு திரும்பும் வசதி
பார்வதி
மருத்துவமனை
044 2238 2248
www.parvathyhospital.com
241, GST Road, near MIT Bridge, Chromepet,
Chennai, Tamil Nadu 600044


MARUTHI®
LET THE SUN
PAY YOUR
EB BILL
29 YEARS OF EXCELLENCE
INSTALL SOLAR
ROOFTOP SYSTEM
GET ₹0
ELECTRICITY
BILL
KEY FUTURE
BEST RETURN ON INVESTMENT - 19% TO 26%
NON POLLUTING - REDUCES GLOBAL WARMING.
EXCESS POWER GENERATED CAN BE SOLD.
28 YEARS PANEL WARRANTY.
CALL US
98418 28077
www.maruthipower.com
ANANDHAM SELVAKUMAR - CEO

# MALAR HOMES

**Ongoing projects | Ready for sale | Enquire now**

## ADYAR
PADMANABHA NAGAR
2 BHK - 960 Sq.Ft
3 BHK-1920 Sq.Ft

- Prime Location
- Stlit + 3 Floors
- Premium Finishes including Interiors
- Solar Panel with Net Metering

## MADIPAKKAM
RAM NAGAR (near Ramar temple)
2 BHK - 1050 Sq.Ft
@89 Lakhs INR + Other charges

- Calm residential area
- Stlit + 3 Floors
- Close to Velacherry MRTS station
- Total 6 flats. All 2BHK

***"For happy and peaceful living - Precision you can feel"***



**Turnkey Construction**
*From Design to Approval to Delivery.*

**Landowners Welcome**
*Profitable Joint-Venture offered.*

**25+ Years experience**
*Highly skilled core team. Big on care and craftsmanship*

**Client Satisfaction, Our True Foundation**

**CONTACT**
+91 9444070108
+91 7010941135
+91 9363701080

malarflats@yahoo.com



Kalyan Grand is a 3 Star Business Class Hotel, well equipped with modern amenities that blend comfort with functionally to provide comfortable, restful stays.

KALYAN GRAND
a business hotel

**108 Rooms & Suites | 03 Banquet Halls**

**[For Weddings & Receptions, Birthday Parties and Corporate Events]**

Ph: 044 66289999 | Mob: 7812009999
reservations@kalyangrand.com | www.kalyangrand.com




**Thiruvasantham**
PURE VEG

**A Traditional South Indian Pure Vegetarian Restaurant**

**Authentic Indian Sweets, Savouries and Outdoor Catering**

Ph: 044 22752999 | Mob: 9884092244
hotelthiruvasantham@gmail.com | www.thiruvasantham.com

No. 247, GST Road, Vandalur, Chennai, Tamil Nadu - 600048
(Adjacent to Kilambakkam New Mofussil Bus Terminus)

# மணமகள் தேவை

| | |
|---|---|
| பெயர் | செல்வன் N. ஸ்ரீராம் |
| படிப்பு | M.E. (Structural Engineering) |
| | University of British Columbia, Canada |
| வேலை | Structural Engineer, |
| | Konstant Racking, Vancouver, Canada |
| | Rs. 60,00,000 / PA |
| பிறந்த தேதி | 07.02.1998 |
| உயரம் | 168 cm |
| நட்சத்திரம் | மிருகசீரிஷம் |
| கோத்திரம் | வஞ்சனமுட |
| பூர்வீகம் | தலச்சங்காடு, தரங்கம்பாடி தாலுக்கா |
| தகப்பனார் | R. நடராஜன், |
| | உ.பொ (ஓய்வு) வேளாண் பொறியில் துறை |
| தாயார் | N. சாந்தி (நெடுவாசல்) |
| முகவரி | 381/2, திருமலை நகர், |
| | பூம்புகார் ரோடு, |
| | மயிலாடுதுறை - 1. |
| | Cell : 94425 51924, 91235 95703. |



| | |
|---|---|
| பெயர் | செல்வன் C.N. SIVA SUBRAMANIYAM |
| படிப்பு | BE (EEE), M.S (EE), Ph.D (EE) – |
| | Pursuing presently at IIT Madras |
| வேலை | PROJECT ASSOCIATE AT IIT MADRAS |
| | Rs 6 LACS/PA |
| பிறந்த தேதி | 03/07/1995 |
| உயரம் | 172 cm |
| நட்சத்திரம் | POORAM |
| கோத்திரம் | PONNAMUDAIYAN |
| பூர்வீகம் | ARASUR, KUDAVASAL, KUMBAKONAM |
| தகப்பனார் | NATARAJAN .C (Late) |
| தாயார் | RAJALAKSHMI .N (Thirunagairi) |
| முகவரி | 54/46, DURAISWAMY STREET, |
| | LAKSHMIPURAM, THIRUVANMIYUR, |
| | CHENNAI - 600 041. |
| | Cell : 9444953016/8144953016 (WhatsApp) |
| விருப்பம் | CHENNAI-WORKING WOMAN |




Santa Clara
by DAC
TNRERA/35/LO/2844/2025
DATED 29.07.2025
www.rera.tn.gov.in
DAC
DREAM ASCEND CONQUER
STRICTLY NO OFFERS!
Except
LUXURY
LAUNCHING
3&4 BHK
INDEPENDENT VILLAS
From ₹1.5 Cr.
PERUMBAKKAM
Near Sholinganallur
AMENITIES
GYM
INDOOR GAMES
MULTIPURPOSE HALL
SWIMMING POOL
TERRACE
WHY CHOOSE?
• Located in a fast-growing area, Santa Clara offers excellent connectivity to Medavakkam, Pallikaranai, Velachery, and OMR – combining city access with peaceful living.
• Well-connected via Velachery–Tambaram Road, Medavakkam Main Road, and 200 Ft Radial Road, with easy access to all mode of transport.
• The upcoming Metro Phase 2 (Sholinganallur Lake Metro & Semmenchery Metro) will boost connectivity and increase property value.
• Easy access to Medavakkam , OMR, ECR, vandalur Kelambakkam road.
• With strong connectivity and upcoming metro access is a rising real estate hotspot with high appreciation and rental demand.
• Well-planned layout with green spaces and amenities for a peaceful, secure community lifestyle.
Most Awarded Developer in the Recent Days
MALAR MAGUDAM 2023
PRIDE OF INDIA - 2022
Member CREDAI
FOR MORE DETAILS | VISIT OUR MODEL VILLA
93003 93003
www.dacdevelopers.com
110+ PROJECTS
4.5M+ SQFT CONSTRUCTION
3000+ HAPPY FAMILIES

# CHIDAMBARAM SPIRITUAL STAY

**146/18A, KANAGASABAI NAGAR, CHIDAMBARAM**

சிதம்பரம் நடராஜர் திருவருளால் சிதம்பரம் கனகசபை நகரில் ஆன்மீக சுற்றுலா பயணியர் மற்றும் திருமணம் போன்ற சுபநிகழ்ச்சிகளுக்கு குழுவாக வருபவர்களுக்கும் மேலும் குடும்பத்துடன் வருகைபுரியும் அன்பர்களுக்கும் குளிர்சாதன வசதியுடன் (A/c) தங்குவதற்கு விடுதி அமைந்துள்ளது. திருமண விசேஷங்களுக்கு மணமகன், மணமகள், வீட்டார் உறவினர்கள் ஒரே இடத்தில் 50 நபர் வரை தங்குவதற்கு சிறந்த இடம் **"Chidambaram Spiritual Stay"**

**குறிப்பு : இங்கு தங்குபவர்களுக்கு காலை & இரவு சிற்றுண்டி வழங்கப்படுகிறது.**





**மேலும் விபரங்களுக்கு தொடர்புகொள்ள வேண்டிய அலைபேசி எண்.**

**9790292444, 9790215833, 9884004550**

**முன்பதிவிற்கான கட்டண விபரங்களுக்கு "Booking.com" மற்றும் Google இணைய தளத்தில் காணலாம்**

**Free Driver Accommodation Available, SPL A/c. Cottages Available**

## ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் சேவை மையம்

சித்திரை மாதம் 2025 தொடங்கி உங்களின் ஆதரவுடன் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

**சிறப்பம்சங்கள் :**

- தனி நபர் கட்டணம் ரூ. 200/– மட்டும்
- Locker Facility உள்ளது.
- காலை வேளை மட்டும் சிற்றுண்டி வழங்கப்படும்.
- காது குத்துவது / குடும்ப சுப நிகழ்வு கொண்டாடுவோர் / குலதெய்வ வழிபாடு செய்வோர்
- தனி அறைகள் மற்றும் 20 நபர் தங்கும் வசதியுள்ள பொது இடம்.
- குறைந்த கட்டணம், நிறைவான சேவை
- 30 பேர் வரை தங்க சிறந்த இடம்

தொடர்பு 1 : **A. கோவிந்தராஜன்**
சாரதா உணவகம், அமைப்பாளர்
89731 63434

தொடர்பு 2 : **தில்லை ப. செல்வம்**
ஒருங்கிணைப்பாளர்
98403 17346

இதழின் உள்ளே....



சங்க நிகழ்வுகள்........................................................11 – 23
இளமை எனும் பூங்காற்று!...........................................24
சந்தர்ப்ப சாட்சியம் ......................................................26
சங்கப்பலகை ................................................................37
சிறுவர் பகுதி ......................................................... 41–44
மணமகன் / மணமகள் தேவை........................45–47
இயலாமை.......................................................................49

**கார்காத்தார் ஒப்புரவு**
**கார்காத்தார் சங்கம் (சென்னை)**
64, சௌராஷ்டிரா நகர் 10வது தெரு,
சூளைமேடு, சென்னை – 600 094.
தொலைபேசி : 044–2472 4882
Whatsapp : 82484 49204

**ஆயுள் சந்தா ரூ. 2000/-**
**ஆண்டு சந்தா ரூ. 300/-**

வெளியீட்டாளர் : **கைலை. சண்முகம்**

ஆசிரியர் : மேலையூர் S. **அன்பழகன்**

அச்சிடுவோர் :
**மீ. நடராஜன்**
**மயூர் பிரிண்டர்ஸ்**
எண். 72/88 காமராஜ் காலனி 8வது தெரு,
(பாளையகாரன் தெரு) கோடம்பாக்கம்,
சென்னை – 600 024. போன் : 4204 6533

கதை, கட்டுரைகள், கவிதைகள் மற்றும் செய்திகள், மணமகன்/மணமகள் பற்றிய விபரங்கள், மற்றும் விளம்பரங்களில் வரும் தகவல்களை வாசகர்கள் சரிபார்த்து தீர விசாரித்து முடிவுகள் எடுக்கப்பட வேண்டும். இவைகளுக்கு "கார்காத்தார் ஒப்புரவு" நிர்வாகம் பொறுப்பேற்காது.

## ஏடு இட்டோர் இயல்



உயிரினும் மேலான கார்குலச் சொந்தங்களுக்கு 2026–ஆம் ஆண்டின் புத்தாண்டு வாழ்த்துக்களும், இனிய பொங்கல் நல் வாழ்த்துக்களும் கூறிக்கொள்வதில் கார்காத்தார் ஒப்புரவும், சென்னை கார்காத்தார் சங்கமும் மிக்க மகிழ்ச்சி கொள்கிறது.

அன்பு பொங்க ; ஆனந்தம் பொங்க ;
இன்பம் பொங்க ; ஈசனருள் பொங்க ;
உழைப்பு பொங்க ; ஊரெல்லாம் மகிழ ;
என்றும் வீடுகளில் வளம் பொங்க
ஏற்றத்துடனே வரும் தைத்திங்கள் நன்னாளாம்
பொங்கல் திருநாளை வாழ்த்தி வரவேற்போம் !

மொரீஷியஸ் பாதுகாப்பு ஆலோசகராக இந்திய முன்னாள் ஐ.பி.எஸ். அதிகாரி ராகுல் ரஸ்கோத்ரா நியமிக்கப்பட்டுள்ளார். எல்லை மேலாண்மை, உள்நாட்டு பாதுகாப்பு, மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளிலும் திறம்பட பணியாற்றியவர். தற்சமயம் இவரது முக்கிய பொறுப்பு மொரீஷியஸின் பாதுகாப்பு படைகளுக்கு பயிற்சி அளிப்பதும், இருநாடுகளுக்கிடையே உளவுத்துறை தகவல்களைப் பகிர்ந்துகொள்வதுமாகும் என கூறப்படுகிறது. அவரது பணியினைச் செவ்வனே நிறைவேற்ற வாழ்த்துகிறோம்.

காற்று மாசுபாடு என்பது ஒரு தீவிர சுற்றுச்சூழல் பிரச்சனை. நமது தலைநகரத்தில் இது மிகவும் அதிகமாக உள்ளது. கிழக்கு ஆப்பிரிக்க நாடான எத்தியோப்பியாவின் அபார் மாகாணத்திலுள்ள ஹேலிகுப்பி எரிமலை 10,000 ஆண்டுகளுக்குப் பின் வெடித்து சிதறியதில், அதன் சாம்பல் புகை நம் நாடு வரை பரவி காற்றுமாசினை ஏற்படுத்தியதுடன் பல விமானங்கள் ரத்தும் செய்யப்பட்டன. அவ்வமயம் டில்லியின் காற்று மாசு மிக அதிக அளவினைத் தொட்டதால், டில்லி அரசு பல ஆணைகள் பிறப்பித்தது. டீசல் ஊர்திகள், கட்டிடங்கள் இடிப்பது போன்றவைகள் தடை செய்யப்பட்டு, ஞாயிற்றுக்கிழமை (22, டிசம்பர்) யிலிருந்து காற்றுமாக 400 லிருந்து 470 க்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. முக்கியமாக சாந்தினிசௌக், ரோகிணி, ஆனந்த் விகார் போன்ற பகுதிகள் மிகவும் பாதிக்கப்பட்டன. மக்களின் மூச்சுக்குழாய், நுரையீரல் பாதிக்கப்படுவதுடன் கண் எரிச்சல், இருமல் போன்றவைகளாலும் பாதிக்கப்படுகின்றனர். நம் சென்னையில் அதன் அளவு 190 ஆக உள்ளது. அதனையும் குறைப்பதற்கு அரசு மட்டுமல்ல நாமும் இயன்றதைச் செய்வோம்.

இலங்கையில்டிட்வாபுயலின்கோரத்தாண்டவம் நம்மைத் திகைக்க வைத்தது. இதுவரை கண்டிராத அளவுமழைப்பொழிவும்,நுவேரலியாவில்மலைச்சரிவும் ஏற்பட்டுள்ளது. அவ்வரசுக்கு உதவி புரிய இந்தியா உட்பட பல நாடுகளும் முன் வந்துள்ளன. இந்தியா இலங்கைக்குரூ.4050கோடிநிதிஉதவிஅளித்ததுடன், கிளிநாச்சியில் சேதமடைந்த பாலத்திற்கு பதிலாக ஒரு தற்காலிக பாலத்தை 'ஆப்பரேஷன் சாகர் பந்து' திட்டத்தின் கீழ் கட்டிக் கொடுத்துள்ளது.

அர்ஜென்டினாவின் கால்பந்து அணிகேப்டன் உலகப்புகழ் பெற்ற லியோனல் மெஸ்ஸி மூன்று நாள் சுற்றுப்பயணமாக இந்தியா வந்துள்ளார். அவர் ஹைதராபாத், கல்கத்தா, மும்பை போன்ற நகரங்களில் விளையாட்டு வீரர்களைச் சந்தித்ததுடன், மும்பை வான்கடே மைதானத்தில் இந்திய கால்பந்து வீரர் சுனில் செத்ரி, முன்னணி பாலிவுட் நட்சத்திரங்கள் பங்கேற்ற கண்காட்சி கால்பந்து போட்டியிலும் கலந்துகொண்டார்.

இந்திய அணி சென்னையில் நடைபெற்ற 5 ஆவது ஸ்குவாஷ் உலக சாம்பியன் போட்டியில் முதன் முறையாக 3–0 என்ற கணக்கில் வெற்றி பெற்று உலக சாம்பியன் பட்டத்தைப் பெற்றது. பட்டம் பெற்ற குழு வீரர்கள் வேலவன், ஜோஷ்னா, அனாஹத், அபேசிங் ஆவர். அவருக்கு நம் அனைவரின் பாராட்டுக்களும், வாழ்த்துக்களும்!

2026–ஆம் ஆண்டு நமக்கு நல்லதாக அமைய எல்லாம் வல்ல ஈசனைப் பிரார்த்திப்போம். உள்ளத்தில் அன்பும், எண்ணத்தில் உயர்வும் கொண்டு நட்பு பெருகிட இப்புத்தாண்டில் மனம் திறந்து பேசுவோம்! மாற்றங்கள் ஏற்போம்! நல்லன போற்றுவோம்! அல்லன மறப்போம்!

வாழ்க வையகம் ! வாழ்க வளமுடன் !

நன்றி ! வணக்கம் !

## கார்குலச் சொந்தங்களுக்கு ஓர் அறிவிப்பு திருவிளக்கு பூஜை

சென்னை கார்காத்தார் சங்கம், 2026 ஆம் ஆண்டு ஜனவரி 23–ஆம் நாள், தை வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணி அளவில் அபிராமி அந்தாதி பாராயணமும், லலிதா சஹஸ்ரநாமம் பாராயணமும் செய்து, அதனைத் தொடர்ந்து திருவிளக்கு பூஜையும் நடைபெற உள்ளது. பூஜையில் கலந்து கொள்பவர்கள் தங்களின் பெயர்களை ஜனவரி மாதம் 18–ஆம் தேதிக்குள் பதிவு செய்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். முதலில் பெயர் கொடுத்தவர்களுக்கே முன்னுரிமை வழங்கப்படும். அந்த இடத்தில் சுமார் 60 மகளிர் வரை அமர்ந்து பூஜை செய்ய இயலும் என்பதால் உங்களின் பங்கேற்பினை உரிய காலத்தில் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

**எடுத்து வர வேண்டிய பொருட்கள் :**

1) குத்து விளக்கு 2) துணை விளக்கு 3) சூடத்தட்டு 4) மணி 5) பஞ்சபாத்திரம், உத்தரணி. மற்ற தேவையான பொருட்கள் சங்கத்தில் வழங்கப்படும்.

**பதிவு செய்ய :**

சங்க அலுவலகம் : 044–24724882, 8248449204
திருமதி. R. குந்தவி : 9840488823
திருமதி. வனஜா இளங்கோவன் : 6369291286
திருமதி. கிருஷ்ணவேணி : 9445414181

**இடம் : சென்னை கார்காத்தார் சங்க வளாகம், 64, சௌராஷ்டிரா நகர், 10–ஆவது தெரு, சூளைமேடு, சென்னை-600094.**

திரு. கைலை. சண்முகம்,
செயலர் .

## வேலை வாய்ப்பு அறிவிப்பு

சென்னை சூளைமேடு கார்காத்தார் இல்ல வளாகத்தில் செயல்பட்டு வரும் கார்காத்தார் ஒப்புரவு அலுவலகத்தில் பணியிடம் நிரப்பப்பட உள்ளது. கணினியில் பயிற்சி பெற்றவர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம். ஓய்வு பெற்ற அலுவலர்களும் விருப்பமிருப்பின் விண்ணப்பிக்கலாம். வெளியூரிலிருந்து வரும் மகளிர்க்கு தங்குமிட வசதி செய்து தரப்படும். விருப்பமுள்ளவர்கள் கீழ்கண்ட நமது சங்க முகவரிக்கு தொடர்பு கொள்ள வேண்டுகிறோம்.

**– கைலை. சண்முகம்,**
செயலாளர்,
சென்னை கார்காத்தார் சங்கம்.

முகவரி : **கார்காத்தார் இல்லம்,** 64, சௌராஷ்டிரா நகர்,
10–வது தெரு, சூளைமேடு, சென்னை–600 094.
தொலைபேசி : 044–24724882, அலைபேசி : 8248449204

# சங்க நிகழ்வுகள்

**சங்கச் செய்திகள் அனுப்புவோர் கவனத்திற்கு**

தமிழ்நாட்டில் சுமார் 150 க்கும் மேற்பட்ட சங்கங்கள் செயல்படுவதை நாம் அறிவோம். அனைத்து சங்கங்களும் தங்களது சிறப்பான செயல்பாடுகளை சங்க செய்திகளாக அனுப்பி வருவதை வெளியிட்டு வருகிறோம். அதற்கு உதவும் வகையில், சங்கச் செய்திகளை அனுப்புபவர்கள் செய்திகளை சுருக்கமாகவும், முக்கிய தீர்மானங்களையும் சுருக்கமாக மூன்று பாராக்களுக்கு மிகாமல் அனுப்பி வைக்க வேண்டுகிறோம். அதிகமான பாராக்களுடன் வரும் செய்திகள், சுருக்கி கொடுக்கவோ அல்லது நிராகரிக்கவோ ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு என்பதை கனிவுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

## நங்கநல்லூர்

14–12–25 அன்று சங்கத்தின் செயற்குழு கூட்டம் சங்க தலைவரது தலைமையில் திரு. S. வீரராஜ்குமார் மலர்ச்சி இறைவணக்கம் பாட கூட்டம் துவங்கியது.

தலைவர் தனது வரவேற்புரையில் செயற்குழு கூட்டங்களில் தவறாது கலந்து கொண்டு நல்ல பல ஆரோக்கியமான ஆலோசனைகளை வழங்கி கூட்டங்கள் சிறப்பாக நடந்திட ஒத்துழைத்தமைக்கும் சங்கம் மேற்கொண்ட சமுதாயப்பணிகளில் கலந்து கொண்டுசிறப்பாகபணியாற்றிய அனைத்துசெயற்குழு உறுப்பினர்களுக்கும் மகளிரணியினருக்கும் நன்றி தெரிவித்து கொண்டார்கள்.

முதல் நிகழ்வாக புமுதிவாக்கம் மறைந்த சங்க உறுப்பினர் தெய்வத்திரு. M. சத்தீஷ்குமார் அவர்களது அன்பு துணைவி நித்யா அவர்களது அகால மரணத்துக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது. இவர்களது பூர்வீகம் மல்லியகொல்லை.

சென்ற மாதத்திய கூட்ட அறிக்கை செயலாளரால் வாசிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

2024–2025–ம் ஆண்டுக்கான தணிக்கையாளரால் தணிக்கை செய்யப்பட்ட தணிக்கை அறிக்கை செயற்குழுவில் பொருளாளரால் சமர்ப்பிக்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டது. இந்த ஆண்டுக்கான தற்போதையவரவு–செலவுகையிருப்பு விவரம் சமர்ப்பிக்கப்பட்டது.

ஆண்டு விழா பணிகள் செயற்குழு உறுப்பினர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது.

திருமதி. விஜயாள் மதிவாணன் அவர்கள் நன்றி நவில கூட்டம் இனிது நிறைவடைந்தது.

திரு. R. தில்லை கோவிந்தன் மற்றும் திரு. B.M. சொர்ணமுர்த்தி இணைந்து ஸ்வீட், காரம், காபி மற்றும் இரவு உணவு வழங்கினர்.

– க. சரவணன்

## அண்ணாநகர் :

கூட்டம் 14–12–2025 அன்று அண்ணாநகர் ஆடிட்டர் முத்தையா அவர்களின் அலுவலகத்தில் நடைபெற்றது. ஆண்டுவிழா கொண்டாட இருக்கும் ஒய்எம்கேஏ. நங்கநல்லூர் – குரோம்பேட்டை சங்கங்களுக்கு வாழ்த்து தெரிவிக்கப்பட்டது.

புதிய முயற்சியாக எல்லோரையும் அவரவர் கதைகளை சொல்ல வைக்க முடிவு செய்து முதலில் திரு. இரோஜேந்திரன் அவர்கள் நெய்க்குப்பை என்ற கிராமத்திலிருந்து சென்னை வந்ததைப் பற்றியும் டிஐ சைக்கிள் கம்பெனியில் வேலை செய்ததை பற்றியும் பேசினார். அடுத்து அறிவொளி அவர்கள் நச்சினார்குடியில் பிறந்து ஆயங்குடிபள்ளத்தில் இருந்து படித்து வளர்ந்து பெஸ்ட் அண்டு கிராம்ப்டன் கம்பெனியில் வேலைபார்த்து பிறகு தனியாக இண்டஸ்ட்ரியல் பில்டிங் கட்டும் கம்பெனியை ஆரம்பித்தது பற்றியும் பேசினார்.

திரு. பாலசுப்பிரமணியன் அவர்கள் ஹரிகரன்கூடல் என்ற ஊரிலிருந்து சென்னை வந்து பிடிசியில் வேலைக்கு சேர்ந்ததை பற்றியும் அதற்கு உறுதுணையாக இருந்த தெய்வத்திரு. சூரியமூர்த்தி அவர்களையும் நினைவு கூர்ந்து பேசினார். அடுத்து திரு. இராஜசேகரன் அவர்கள் திருமணஞ்சேரியில் இருந்து வந்து ஏவிசியில் கல்லூரி படிப்பை முடித்து வங்கிப் பணியில் சேர்ந்தது பற்றி பேசினார்.

திரு. கோபாலகிருஷ்ணன் அவர்கள் ஐயனூரில் பிறந்து வளர்ந்து கல்லூரிபடிப்பை சிதம்பரத்தில் படித்து டிஎன்எஸ்சி வங்கியில் சேர்ந்து பணி செய்தது அவர் காலத்தில் முகப்பேர் மேற்கு, கிழக்கு, கொரட்டூர் பகுதி வங்கி கிளைகளுக்கு சொந்த இடம் வாங்கியது பற்றியும் விரிவாக பேசினார்.

செயலாளர் பேசும்போது, இனி வரும் மாதங்களிலும் இது போல அனுபவங்களை படித்த கதைகளை கேட்ட கதைகளையும் பேசுவது தொடரவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். நிறைவாக திரு. இராஜசேகரன் அவர்களின் நன்றியுரையுடன் கூட்டம் நிறைவு பெற்றது.

என். ஆனந்தகணபதி,

செயலாளர்.

**9994682981**

## குரோம்பேட்டை

**28.12.2025** அன்று குரோம்பேட்டை கார்காத்தார் சங்கத்தின் **2025** ஆண்டுக்கான மங்கல சந்திப்பு காலை **8.30** மணி முதல் **12.30** மணி வரை வெகு விமரிசையாக நடைபெற்றது. இதில் **326** கார்குல குடும்பங்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர். இந்நிகழ்வை திரு. R. ஜவஹர் சிறப்பாக அமைத்தார்.

அதே நாளில், குரோம்பேட்டை ஸ்ரீ ராம் கணேஷ் மஹால் (ஏ/சி) மண்டபத்தில் சங்கத்தின் முப்பெரும் விழா – 2025 தலைவர் திரு. மனோகர் தலைமையில் நடைபெற்றது. மதியம் **2.00** மணி முதல் குழந்தைகளுக்கான விளையாட்டு, போட்டிகள் மற்றும் மகளிர்களுக்கான கோலப் போட்டி நடைபெற்றது.

பின்னர் நடைபெற்ற பொதுக் குழு கூட்டத்தில் திரு. B. தியாகராஜன் (தலைவர்), திரு. V. ஆறுமுகம் (துணை தலைவர்), திரு. J. தீபன் (செயலாளர்), திரு. R.M. சத்யமூர்த்தி (துணை தலைவர்), திரு. R. சந்திரகுமார் (பொருளாளர்) ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மாலை **4.00** மணிக்கு சங்க கவுரவ ஆலோசகர்கள் திரு. சபா. சிவகுமார் மற்றும் Dr. M. செல்வகணபதி வழிகாட்டுதலுடன், சங்க தலைவர் திரு. S. மனோகர் தலைமையில் விழா தொடங்கியது. சங்க பொருளாளர் திரு. J. தீபன் வரவேற்புரை ஆற்றினார். இதை தொடர்ந்து தலைவர் மனோகர் தலைமையுரை ஆற்றினார்.

மேயர் மாண்புமிகு திரு. G. இராமகிருஷ்ணன் (எ) கிட்டு அவர்களுக்கு எழுச்சி நாயகன் விருதும், திரு. T.N. முத்துக்குமாரசாமி அவர்களுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருதும் வழங்கப்பட்டது.

விழாவில் திருநெல்வேலி மேயர் மாண்புமிகு. திரு. G. இராமகிருஷ்ணன் (எ) கிட்டு அவர்கள் சிறப்புரையாற்றினார். கார்குல வளர்ச்சிக்கு பெரிதும் உதவியது அந்த காலமே – இந்த காலமே என்ற தலைப்பில் நடைபெற்ற பட்டிமன்றத்தில் சங்க மேனாள் தலைவர் திரு. D. திருஞானசம்பந்தம் நடுவராக பணியாற்றினார், திருமதி.கிருத்திகா திருவரசன், செல்வி. K. மகேஸ்வரி அந்த காலமே எனவும் செல்வி. யாழினி தியாகராஜன், திரு. M. சண்முகம், இந்த காலமே எனவும் வாதிட்டனர்.

திருமதி. கோமதி மனோகர் ஆசை சீரமைத்தல் பற்றி உரையாற்றினார். செல்வி V. ஷர்மிதாவின் பரதநாட்டியம் சிறப்பாக நடைபெற்றது. சங்கத்தின் டிஜிட்டல் டைரக்டரியை மேயர் அவர்கள் QR Code மூலம் வெளியிட, சென்னை கார்காத்தார் சங்க தலைவர் திரு. S. சோமசுந்தரம் பெற்றுக்கொண்டார்.

மேலும், குரோம்பேட்டை சங்கம், சென்னை கார்காத்தார் சங்கம், KBF மற்றும் கார்காத்தார் நல அறக்கட்டளை இணைந்து நடத்தும் ஒரு ஆண்டு மகளிர் தொழில் முனைவோர் பயிற்சியை திரு. S. சோமசுந்தரம் தொடங்கி வைக்க சங்க மேனாள் தலைவர் திரு. T. முருகேஷ், KBF தலைவர் திரு. M. பாலமுருகன் வாழ்த்தினர்கள். திருநெல்வேலி கார்காத்தார் சங்க நிர்வாகிகள் மற்றும் சென்னை பகுதி இணை சங்க நிர்வாகிகள் பலரும் கலந்துகொண்டு விழாவை சிறப்பித்தனர்.

அன்றைய தின நிகழ்வுகள் அனைத்தும் சிறப்பாக நடைபெற பொருளுதவி செய்த CREW தலைவர் திரு.வெங்கடேசன் பிள்ளை மற்றும் சங்க வளர்ச்சி நிதி வழங்கிய அனைவருக்கும் நன்றி தெரிவிக்க பட்டது.

நிகழ்ச்சி வெற்றி பெற பெரிதும் உதவிய மேனாள் தலைவர்கள், செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் மகளிர் அணியினர் மற்றும் இளைஞர் அணியினர் ஆகியோரின் ஒத்துழைப்புக்கு பாராட்டு தெரிவித்து, கல்வியில் சிறந்து விளங்கிய மாணாக்கருக்கு பரிசுகள், பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் மற்றும் நிகழ்ச்சிக்கு வந்திருந்த அனைவருக்கும் நினைவு பரிசு வழங்கி விழா நிறைவு பெற்றது.

## பெருங்களத்தூர் :

சங்கத்தின் செயற்குழு கூட்டம் 21–12–2025 அன்று சிவாலிஹாலில் தலைவர் திரு. R. கார்த்திகேயன் தலைமையில் அனைவரும் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாட நடைபெற்றது. மாநில கார்காத்தார் சங்க கூட்டமைப்பின் தலைவர் திரு. KKR.K. சுரேஷ் அவர்களின் துணைவியார் ஆனந்தி அவர்களின் மறைவுக்கு இரங்கல் தீர்மானம் நிறைவேற்றி அனைவரும் இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தினார்கள். இக்கூட்டத்தில் திருவாளர்கள் R. முருகேசன், B. நாகலிங்கம், S. நடராஜன், S. முத்துக்குமார் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டனர். சங்கத்தின் பொதுக்குழு மற்றும் ஏழாவது ஆண்டு விழாவினை சிறப்பாக நடத்திட அனைவரின் கருத்துக்களையும் கேட்டு பொறுப்புகள் அனைத்தும் பிரித்து பகிர்ந்தளிக்கப்பட்டது. உதவி பொருளாளர் பதவி ஒன்றினை ஏற்படுத்தி அதற்கு திரு. B. நாகலிங்கம் அவர்களை நியமிக்கலாம் என்றும் வரும் பொதுக்குழுவில் இதனை பின்னேற்பு கொள்ளலாம் என்றும் முடிவு செய்யப்பட்டது. செயலாளர் திரு. கோ. ராஜகோபாலன் நன்றி நவில அனைவரும் இணைந்து தேசிய கீதம் பாட கூட்டம் இனிதே நிறைவுற்றது.

21–12–2025 அன்று மாலை ஏழாம் ஆண்டு விழாவின் ஒரு பகுதியாக நடத்தப்பட்ட ஷெட்டில் கார்க் போட்டியில் 12 வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

25–12–2025 ஆண்டு மாலை சிவாலிஹாலில் ஏழாம் ஆண்டு விழாவின் விளையாட்டுப் போட்டிகள் மற்றும் கோல போட்டி நவதானிய உணவு போட்டி சிறப்பாக நடைபெற்றது. இதில் 120 சிறுவர் சிறுமியர்கள் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். போட்டிகளில் கலந்து கொண்ட அனைவருக்கும் சங்கத்தின் சார்பாக பிஸ்கட், குளிர்பானம் மற்றும் இஞ்சி டீ வழங்கப்பட்டது.

போட்டிகளுக்கு நடுவர்களாகவும் அவர்களுக்கு உறுதுணை புரிந்த அனைத்து உறுப்பினர் நல் உள்ளங்களுக்கும் சங்கத்தின் சார்பாக நன்றி தெரிவிக்கப்பட்டது. போட்டிகளின் முடிவில் அனைவருக்கும் நன்கொடையாளர்களால் சிற்றுண்டி வழங்கப்பட்டது.

கோ. ராஜகோபாலன், செயலாளர்.

## புதுச்சேரி :

04–12–2025 வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு பாரதிதாசன் நகர் திரு. N. சிதம்பரம் அவர்கள் இல்லத்தில் தலைவர் திரு. J. ராஜன்பாபு அவரகள் தலைமையில் மாதக் கூட்டம் நடைபெற்றது.

மகளிர் அணியினரின் இணைவணக்கத்தை தொடர்ந்து மகளிர் அணி தலைவி A. சுந்தரவள்ளி அவர்கள் பேசுகையில் கீழ்கண்ட நம் சொந்தங்கள் மறைவுக்கு மௌன அஞ்சலி செலுத்த கேட்டுக்கொண்டார்கள். 7–10–25 அன்று பூர்வீகம் நெடுங்காடு மறைந்த திருவேங்கடம் பிள்ளை அவர்கள் மனைவியும், புதுச்சேரி, கோரிமேடு, சிவாஜி நகர், திரு. T. ஜெய்சங்கர் அவர்கள் தாயாருமான திருமதி. T. மரகதம் அம்மாள் மறைவுக்கும், 9–11–25 அன்று பூர்வீகம் ஆக்கூர் மறைந்த N. ஜம்புலிங்கம் பிள்ளை மனைவியும், புதுச்சேரி சங்கத் தலைவர் திரு. J. ராஜன் பாபு அவர்கள் தாயாருமான திருமதி. J. சரோஜா அம்மாள் மறைவுக்கும், பூர்வீகம் காட்டுமன்னார்குடி புதுச்சேரி கிருஷ்ணா நகர் திரு. S. கார்த்திகேயன் அவர்கள் தகப்பனார் திரு. N. சரவணன் பிள்ளை அவர்கள் மறைவுக்கும் இரங்கல் தெரிவிக்கப்பட்டது

புதுச்சேரி, ரெட்டியார்பாளையம் சுதாகர் நகர் +2 படிக்கும் மாணவருக்கு கல்வி உதவித்தொகை ரூ. 5000/– (ஐந்தாயிரம்) மட்டும் வழங்கப்பட்டது.

புதுச்சேரி சங்க தேர்தல் ஆணையர் திரு. வி. ஞானசேகரன் 2025–2028–ம் ஆண்டிற்கான புதிய பொறுப்பாளர்கள் மற்றும் மகளிர் அணிக்கான பொறுப்பாளர்கள் மற்றும் பகுதி செயலாளர்களாக G. ஞானசேகரன், V. ஆனந்தன், V. சந்திரமோகன், M. கார்த்திகேயன், N. சிதம்பரம், M. சிவானந்தம், C. வடிவேல், S. சந்திரகுமார் ஆகியோர்க்கு சால்வை அணிவித்து சான்றிதழ் வழங்கினார்கள்.

பொருளாளர் S. இராமலிங்கம் வரவு – செலவு அறிக்கை சமர்ப்பித்தார்கள். கூட்டம் நடத்திய N. சிதம்பரம் – C. ஜெயலட்சுமி தம்பதியினர் கௌரவிக்கப்பட்டார்கள். செயலாளர் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

S. தமிழ்ச்செல்வன்

செயலாளர்

## செந்துறை :

சங்கக்கூட்டம் 02–11–2025 அன்று திருஞானசம்பந்தர் மடாலயத்தில் தலைவர் திரு. T. வைத்தியநாதன் தலைமையில் நடைபெற்றது.

இரங்கல் : நமது சங்க உறுப்பினர்கள் (1) திருமதி. அகிலாண்டம் ஆச்சி W/o லேட் சண்முகசுந்தரம் பிள்ளை

(2) திருமதி. மணிமேகலை ஆச்சி W/o லேட். சிதம்பரம் பிள்ளை ஆகியோர் இயற்கை எய்தியதற்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

சிதம்பரத்தில் நடைபெற்ற சிறப்புப் பொதுக்குழு நிகழ்வுகள் பற்றி எடுத்துரைக்கப்பட்டது. ஜெயங்கொண்டத்தில் நடைபெற்ற மாநில சங்கக் கூட்டமைப்புத் தேர்தல் பற்றி எடுத்துரைக்கப்பட்டது. இதில் மாநில அமைப்புச் செயலாளர் பதவிக்கு மட்டும் தேர்தல் நடைபெற்றது. மற்ற அனைத்து பொறுப்புகளுக்கும் பொறுப்பாளர்கள் ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். மாநில அமைப்புச் செயலாளர் பதவிக்கு கொத்தட்டை திரு. S. பழமலை பிள்ளை அவர்கள் தேர்தலில் வெற்றி பெற்றார். பிறகு அனைத்துப் பொறுப்பாளர்களும் பதவி ஏற்றுக் கொண்டனர். பொங்கல் விழாவை சிறப்பாக கொண்டாடுவது பற்றியும், இதில் பள்ளி மாணவ/ மாணவியருக்கு போட்டிகள் நடத்தி பரிசளிப்பது பற்றியும் விவாதிக்கப்பட்டது.

24–10–2025 அன்று பெண்ணாடம் சரா. இரத்தின மஹாலில் நடைபெற்ற திரு. வீ. சிதம்பரம் பிள்ளை – திருமதி. சுபாஷினி தம்பதியரின் மகன் ஹரிஹரன் – மனோன்மணி இவர்களின் திருமணத்திற்கும்,

31–10–2025 அன்று செந்துறை ஸ்ரீ வரதராஜபெருமாள் கோவிலில் நடைபெற்ற திரு. இரா. இராஜ்குமார் – திருமதி. ஜெயந்தி தம்பதியினரின் மகள் நந்தினி – அபிஜித் இவர்களின் திருமணத்திற்கும் நமது சங்கத்தின் சார்பில் 'பல்லாண்டு சீரும் சிறப்புமாக வாழ்க' என வாழ்த்து தெரிவிக்கப்பட்டது.

திரு. அ. கார்த்திகேயன் அவர்கள் நன்றி நவில கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

சங்க கூட்டம் 07–12–2025 அன்று திருஞானசம்பந்தர் மடாலயத்தில் மண்டல தலைவர் திரு. R. ரவீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. சங்கத்தலைவர் திரு. T. வைத்தியநாதன் அவர்கள் அனைவரையும் வரவேற்றார்.

வரும் பொங்கல் விழாவில் சிறப்பு விருந்தினர்களை அழைப்பது எனவும், மாணவச்செல்வங்களை ஊக்கப்படுத்தும் விதமாக தனித்திறன் மற்றும் விளையாட்டுப் போட்டிகள் நடத்தி அவர்களுக்கு பரிசுகள் வழங்க தீர்மானிக்கப்பட்டது. மேலும் இவ்விழா சிறப்பாக நடைபெற இளைஞர்கள் அனைவரும் தங்கள் பங்களிப்பை அளிக்க வேண்டுமென கேட்டுக்கொள்ளப்பட்டது.

புதிய முயற்சியாக வரும் 2026–ம் ஆண்டின் காலண்டர் (Daily sheet) அச்சிடுவது பற்றி ஆலோசிக்கப்பட்டது.

வருட சந்தா மற்றும் உறுப்பினர் படிவம் அளிக்காதவர்கள் உடனடியாக அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டது.

கடந்த 30–11–2025 அன்று திரு. பா. ஒளிவண்ணன் – திருமதி. மு. சுந்தர் இல்லத்திருமணம் MNCR Grand Palace-ல் சிறப்பாக நடைபெற்றது. மணமக்கள் ஒ. மதுமிதா – சே. ரிஷப் இருவரும் சீரும் சிறப்புமாக அனைத்து வளங்களுடன் பல்லாண்டு வாழ்க என செந்துறை கார்காத்த வேளாளர் சங்கம் வாழ்த்து தெரிவித்தது.

இறுதியாக, துணைச்செயலாளர் சு. பன்னீர்செல்வம் அவர்கள் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவுற்றது.

- S. ஜெயராமன்,
செயலாளர்.

## இளையபெருமாள் நல்லூர்

கார்காத்தார் சங்க கூட்டம் அமாவாசை அன்றும், மகளிர் அணி கூட்டம் பௌர்ணமி அன்றும் சிறப்பாக நடைபெற்றது. கும்பகோணத்தில் கார்குல கலாச்சார சங்கமத்தில் திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தமைக்கு மாநில மகளிர் சங்க நிர்வாகிகள் நன்றி தெரிவித்தனர் அத்தோடு யாரோ தவறவிட்ட நகையுடன் எடுக்கப்பட்ட கைப்பையை பொறுப்புடன் ஒப்படைத்து உரியவருக்கு சேர செய்த மகளிர் அணியைச் சேர்ந்த பவித்ரா ஆனந்த் அவர்களுக்கு மாநில மகளிர் சங்க ஐவர் குழு பாராட்டுகளை தெரிவித்தனர். ஜெயங்கொண்டத்தில் நடைபெற்ற

மாநில கார்காத்தார் சங்க தேர்தலில் கலந்து கொண்டு அனைத்து உதவிகளையும் நல்கிட்ட கார்குல சொந்தங்களுக்கும், புதிய பொறுப்பாளர்களுக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டது. காணும் பொங்கல் அன்று விளையாட்டுப் போட்டிகளை வழக்கம்போல் சிறப்பாக நடத்த இளையோர் பேரவையை கேட்டுக்கொள்ளப்பட்டது

– கு.கோவிந்தராசு
தலைவர்

## சீர்காழி :

சங்கத்தின் செயற்குழு கூட்டம் 6–12–25 அன்று தலைவர் திரு. K. ஜெயச்சந்திரன் பிள்ளை அவர்கள் தலைமையில் சங்க கட்டிடத்தில் நடைபெற்றது. ஆண்டு விழா மற்றும் 2026–க்கான மங்கல சந்திப்பு இரண்டையும் மாநில சட்ட சபை தேர்தலுக்கு பின் நடத்தலாம் என்று தீர்மானிக்கப்பட்டது. பொருளாளர் திரு. S. ரவிச்சந்திரன் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

– சி. அகோரம், செயலாளர்.

## மணிக்கிராமம் :

சங்க கூட்டம் 02–12–25–ம் தேதி செவ்வாய்க்கிழமை சிவன் கோவிலில் பிரதோஷ வழிப்பாட்டுக்கு பிறகு சங்க தலைவர் திரு. G. அன்பழகன் தலைமையில் நடைபெற்றது. கௌரவ தலைவர் திரு. M. சிங்காரவேலன் சிவபுராணம் வாசிக்கவும் செயலர் திரு. T. கபிலன் ஆண்டறிக்கையும் சென்ற மாத அறிக்கையும், பொருளர் திரு. S. பரமநாதன் வரவு – செலவு கணக்குகளை படிக்கவும் சங்கம் அதை ஏற்றுக்கொண்டது.

கார்த்திகை மாதங்களில் சிவன் கோவிலில் சோமவாரம் கார்குல சொந்தங்களால் சிறப்பாக நடைபெற்றது. கல்வி உதவிதொகை வழங்கிய CREW அறக்கட்டளைக்கு நன்றி சொல்லும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பொங்கல் விழா சிறப்பாக கார்குல சொந்தங்களால் நடத்த தீர்மானிக்கப்பட்டது. திரு. K. முரளிதரன் நன்றி சொல்ல கூட்டம் இனிதே முடிந்தது.

– கோ. அன்பழகன், தலைவர்.

## இளந்தோப்பு :

சங்க கூட்டம் இளந்தோப்பு சிவன் கோவில் வளாகத்தில் 19–12–25 அன்று மாலை நடைபெற்றது தலைமை செல்வநாயகம் பிள்ளை முன்னிலை G. பாலமுருகன் அவர்கள், கூட்டம் இனிதே தொடங்கியது.

15–12–25 அன்று சிவன் கோயிலில் கார்த்திகை மாதம் கடைசி சோமவாரம் திங்கள்கிழமை அன்று சிறப்பாக நடைபெற்றது. ருத்ரம் படிக்க சென்னை, திருச்சி, சிதம்பரம், மயிலாடுதுறை, ஆகிய ஊர்களில் இருந்து வந்து சிவன் கோவிலில் சுமார் மூன்று மணி நேரம் படித்து, 108 சங்கு அபிஷேக பூஜையில் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்து கொடுத்தமைக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

இளந்தோப்பு சங்க பொறுப்பாளர்கள் தலைவர் V. ராமமூர்த்திப் பிள்ளை, செயலாளர். V. குருநாதன் பிள்ளை துணைதலைவர் M. பாலசுப்ரமணியன் அவர்களும் முன்னாள் பொறுப்பாளர்கள், பெரியோர்கள், தாய்மார்கள், மற்றும் கிராமவாசிகள், பொருள் உதவி தந்து ஒத்துழைப்பு கொடுத்து விழாவினை சிறப்பாக நடத்தி கொடுத்த அனைவருக்கும் இளந்தோப்பு கார்காத்தார் சங்கம் பாராட்டுகளையும், நன்றியையும் தெரிவித்து கொள்கிறது.

விழா முடிந்து அன்னதானம் அளித்த பட்டவர்த்தி கிராமத்தை சேர்ந்த திரு. சுப்ரமணியன் பிள்ளை அவர்கள் மகன் கண்ணன் பிள்ளை குடும்பத்தினர், அனைவருக்கும் வாழ்த்துகளையும் நன்றியையும் தெரிவித்து கொள்கிறோம். மேலும் சிவன் கோயில் & அய்யனார் கோவில் மற்றும் வினாயகர் மூன்று கோயில்களிலும் மார்கழி மாத திருப்பள்ளி எழுச்சி தினந்தோறும் நடைபெற ஏற்பாடு செய்து தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இம்மாத கூட்டம் பொருளாளர் திரு. ஞானசேகரன் பிள்ளை அவர்கள் நன்றியுரையுடன் முடிவுற்றது.

- V. குருநாதன்,
செயலாளர்.

## மயிலாடுதுறை மகளிரணி

மயிலாடுதுறை மகளிரணியினரால், நகரச் சங்கக் கட்டிடத்தில் **10–12–25** அன்று ''ஸ்ரீ ஏகாதச ருத்ர பாராயணம்'' மிகவும் சிறப்பாக நடைபெற்றது. காலை **9.30** மணிக்கு மேனாள் மகளிர் அணி தலைவிகள் திருமதி. கோமதி ரத்னகுமார், திருமதி. இந்துமதி அன்பழகன் இருவரும் குத்து விளக்கேற்றி பாராயணத்தைத்துவக்கிவைத்தனர்.ஸ்ரீருத்ரம்பயின்ற நம் குல மகளிர் பதினெட்டு பேர் ருத்ர பாராயணம் செய்தனர். மகளிர் அணி இணைச்செயலர், திருமதி. சுந்தரி கணேசன் மேடையில் வைக்கப்பட்டிருந்த நான்கு பாண லிங்கங்களுக்கும் அனைத்து விதமான அபிஷேகங்களும் செய்தார்கள். **3** மணி நேரம் மகளிரணி சகோதரிகள், தோழிகள் பாராயணம் செய்ய, பாண லிங்கங்களுக்கு அபிஷேகமும், **11** முறை தீபாராதனையும் செய்யப்பட்டது. இறுதியில் நைவேத்தியங்கள் படைக்கப்பட்டு, திருமதி. சிவகாமசுந்தரி அவர்கள் தீபாராதனை காட்டினார்கள். அனைவருக்கும் பிரசாதங்கள் வழங்கப்பட்டது.

விழாவில் கலந்து கொண்ட பலரும் பொருளாகவும் பணமாகவும் நன்கொடை வழங்கினார்கள். இவ்விழா சிறக்க ஒத்துழைப்பு நல்கிய நகரச் சங்க முன்னாள், இந்நாள் பொறுப்பாளர்கள் அனைவருக்கும் எங்கள் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

– செயலர்,

மகளிரணி

## செம்பனார் கோயில் :

சங்க கூட்டம் **06–12–2025** அன்று நமது சங்க துணைத்தலைவர் திரு. வி. பாலாஜி அவர்கள் தலைமையில் திரு. அகோரம் பிள்ளை அவர்கள் இல்லத்தில் செல்வி. சஞ்சனா பாலா இறைவணக்கம் பாடிட, செல்வன் ஆதித்தியா வரவேற்பு கூற, சென்ற மாத கூட்டறிக்கை திரு. குரு முத்துகுமார் அவர்கள் வாசிக்க சென்ற மாத வரவு – செலவு கணக்கை சங்க பொருளாளர் திரு. C. செல்வராஜ் அவர்கள் கூற கூட்டம் இனிதே தொடங்கியது.

நமது சங்க நகைச்சுவை ''மன்னன்'' திரு. மதியழகன் அவர்கள் சிரிக்கவும் – சிந்திக்கவும் பல அரிய நகைச்சுவைகளை கூறினார்கள்.

மேலும் திரு. வாசன் பிள்ளை அவர்கள் பேசுகையில் நமது பாரத பூமி புண்ணிய பூமி என்றும் அக்காலத்தில் ஆட்சி செய்த லெட்சுமி நாராயணன் – கிருஷ்ணர் ஆகியோர் காலத்தில் எவ்வாறு இருந்தது என்றும் பல அறிய கருத்துக்களை கூறினார்கள்.

மேலும் திரு. கணபதி நடனம் அவர்கள் பேசுகையில் கூட்டம் ஏற்று நடத்திய இல்லத்தாருக்கு வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்து கொண்டார்கள். நமது சங்கத்திற்கு புதிய ஆண்டில் புதிய பொறுப்பாளர்கள் தேர்ந்து எடுக்கப்பட வேண்டும் என்றும் அதை அனைவரும் ஏற்று கொண்டு புதிய பொறுப்பாளராக சங்கத்தலைவர் திரு. கி. இராமநாதன், துணைத்தலைவர் திரு. ச. நெடுஞ்செழியன், செயலாளர் திரு. குரு முத்துகுமார் ஆகியோர் இணைச்செயலர் திரு. G. முத்துகுமார் பொருளாளராக திரு. C. செல்வராஜ் ஆகியோர் தேர்ந்து எடுக்கப்பட்டார்கள்.

மகளிர் அணி பொறுப்பாளராக

மகளிர் அணி தலைவர் திருமதி. தாமரைசெல்வி ஜவகர், மகளிர் அணி செயலர் திருமதி. கார்த்திகா சௌந்தரராஜன். மகளிர் அணி பொருளர் திருமதி. துர்க்கா பிரியா சந்தோஷ் மற்றும் இளைஞர் அணி தலைவர் செல்வன். S. இராகுல் அவர்களும், இளைஞர் அணி செயலர் செல்வன் A. அபிஷேக், ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கூட்டம் ஏற்று நடத்திய இல்லத்தார்க்கு சங்கத்தின் சார்பாக சிறப்பு செய்யப்பட்டது. கூட்டம் ஏற்ற இல்லத்தாரால் அளிக்கப்பட்ட இரவு விருந்தில் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

– கி. இராமநாதன்,

தலைவர்.

## பரசலூர் :

07–12–25 அன்று சங்க கூட்டம் பரசலூர் பிரதான சாலை ராமு நகர் S. செந்தில்குமார் – அகிலா தேவி இல்லத்தில் அகிலாதேவி இறைவணக்கம் பாட, S. செந்தில்குமார் பிள்ளை வரவேற்புரை நிகழ்த்த தலைவர் க. கோவிந்தராஜன் தலைமையில் கூட்டம் துவங்கியது.

செயலர் சென்ற மாத அறிக்கையையும், பொருளர் சென்ற மாத மாதாந்திர நிதிய அறிக்கையையும், தலைவர் மு.அ. நிதிய அறிக்கையையும் வாசிக்க

நிதிய சம்மந்தமான பதிவேடுகள் உறுப்பினர்களின் பார்வைக்கு விடப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டது.

சங்க வளர்ச்சிக்கு உறுப்பினர்கள் தங்களது கருத்துக்களை எடுத்துக் கூறினார்கள்.

25–12–25 வியாழன் அன்று பரசலூர் பிரதான சாலை சங்க மூத்த உறுப்பினர் திரு. K.S. சீனுவாசம் பிள்ளை அவர்களது இல்லத்தில் ஒப்புதலின் பேரில் சங்க ஆண்டு விழா கொண்டாடுவது என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தருமபுரம் ஆதீனத்துக்குச் சொந்தமான பரசலூர் ஸ்ரீ பாலாம்பிகை உடனுறை ஸ்ரீ வீரட்டேஸ்வரர் திருக்கோயில் காலையில் நடைபெற்ற தீர்த்தவாரி நிகழ்ச்சியிலும், மாலையில் நடைபெற்ற திருவிளக்கு பூஜை வழிபாட்டிலும் தருமபுரம் ஆதீனம் நட்சத்திர குருமணிகள், மணிவிழா நாயகர் 27–வது ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் கலந்து கொண்டு விழாவினைச் சிறப்பித்தனர். கார்குலச் சொந்தங்கள் (பரசலூர் கார்காத்தார் சங்கம்) பெருமளவில் கலந்து கொண்டனர். குருமகா சந்நிதானம் அவர்களிடம் அருளாசி பெற்றனர்.

செம்பனார் கோயில் கார்காத்தார் சங்கம் தோன்றுவதற்கு முக்கிய காரணமாக இருந்தவர்களுள் ஒருவரான மூத்த உறுப்பினர் தலைச்சங்காட்டைச் சார்ந்த தலைமையாசிரியர் (ஓய்வு) பேசுகையில் கார்குல மக்களுக்கே உரித்தான பஞ்சாங்கம் வாசித்தல், ஆன்மீகச் சுற்றுலா, மு.அ. நிதி போன்ற பணிகள் சிறப்பாக நடைபெறுகிறது என்று பாராட்டி பேசினார்கள்.

கூட்டத்திற்கு வருகை புரிந்த அனைவருக்கும் இனிப்பு, காரம், காபி வழங்கப்பட்டது.

சிறப்புக் குலுக்கலுக்கான ஆண்களுக்கான பரிசு N. சிவக்குமார், பெண்களுக்கான பரிசு S. ரேணுகா தேவிக்கு முறையே திரு. சி. கருணாநிதி, S. செந்தில்குமார், அகிலா தேவி வழங்கினார்கள்.

கூட்டம் நடத்திய இல்லத்தார் திரு. C.K., திரு. செந்தில்குமார், அகிலாதேவி இவர்களுக்கு A. ஜெயக்குமார், G. சேகர் பிள்ளை, S. ரேணுகா தேவி சால்வை அணிவித்தனர்.

முதுகலை ஆசிரியர் திருமதி. ஜெயசுதா அமிர்தகணேசன் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவேறியது.

சங்க ஆண்டு விழா பரசலூர் பிரதான சாலை சங்க மூத்த உறுப்பினர் K.S. சீனுவாசம் பிள்ளை இல்லத்தில் S. ரேணுகாதேவி சுவாமிநாதன் இறைவணக்கம் பாட K.S. சீனுவாசம் பிள்ளை சங்க கொடியை ஏற்ற தலைவர் க. கோவிந்தராஜன் பிள்ளை தலைமையில் கூட்டம் துவங்கியது.

செயலர் வீ. கண்ணன் பிள்ளை 2025–ம் ஆண்டு, ஆண்டு அறிக்கையையும் பொருளர் S.M. விஜய் பிள்ளை ஆண்டு நிதிய அறிக்கையையும் வாசிக்க கூட்டத்தில் ஒப்புதல் பெறப்பட்டது.

“உணவுகளும் கனவுகளும்” என்ற தலைப்பில் செம்பனார் கோயில் (பரசலூர்) மருத்துவர் V. ஓவியா M.B.B.S., M.S., அவர்கள் பேசுகையில் உணவு முறையில் இருந்து தொடங்குவது கனவு. அகத்தியர் பாடலை மேற்கோள்காட்டி பல பிரச்சனைகளுக்கும் காரணம் உணவு முறை தான் என்று கூறியுள்ளார். இரவு 7 மணிக்குள் குறைவான உணவை மேற்கொள்ள வேண்டும். சங்க இலக்கியமான ஆசாரக் கோவை உணவு பழக்க வழக்கங்களைப்பற்றி கூறுகிறது என்றார். கீரைகள், பழ வகைகள் குறைந்த அளவு எண்ணெய் உணவாக உட்கொள்ள வேண்டும். புரதசத்து உணவை அதிகம் உண்ண வேண்டும் – பிளாஸ்டிக்கை தவிர்க்க வேண்டும். திருப்புகழ் பாடலை மேற்கோள் காட்டி முதுமையைப் பற்றி பேசினார்கள்.

அளவான உணவு, ஆரோக்கியமான உணவு, இயற்கையான உணவு, ஈ மொய்க்காத உணவு, உப்புகுறைந்த உணவு, ஊட்டச்சத்து மிகுந்த உணவு, எண்ணெய்யில் பொறிக்காத உணவு, ஏப்பம் வராத அளவில் உணவு, ஐயமின்றி உண்ணும் உணவு, ஒன்றாகக் கூடி, ஓடிப்போகுமே நோய்கள், ஔடதம் தேவையில்லை என்று அருமையான சொற்பொழிவு ஆற்றினார்.

இன்றைய வாழ்க்கைக்கு மிகவும் அவசியம் கல்வியா செல்வமா என்ற தலைப்பில் நடுவர் S. செந்தில்குமார் B.E. அவர்கள் முன்னிலையில் கல்வியே என்ற தலைப்பில் R. சபிதா, V. பிரியா, செல்வமே என்ற தலைப்பில் A. ஜெயசுதா, B. அகிலாண்டேஸ்வரி தங்களது கருத்துக்களை எடுத்துக் கூறினார்கள். நடுவர் S. செந்தில்குமார் தனது உரையில் கலையாத கல்வி என்ற படிநிலையில் 1. அறிவு 2. அன்பு 3. அருள் வரை செல்ல கல்வி வேண்டும். செல்வம் வேண்டும். ஞானம் என்ற கடை நிலை செல்ல இரண்டும்

வேண்டாம். ஆனால் முதல் மூன்று நிலையை கடக்க கலையாத கல்வியும் செல்வமும் வேண்டும் என்று தீர்ப்பு அளித்தார்.

சிறப்பு அழைப்பாளர், கொடி ஏற்றிய மூத்த உறுப்பினர் திரு. K.S. சீனுவாசம் பிள்ளை, பட்டி மன்ற நடுவர், பேச்சாளர்கள், வரவேற்புரை நிகழ்த்திய R. அமிர்தகணேசன், முதுகலை தமிழாசிரியர் திருமதி. சிந்தாமணி, தொகுப்பாளர் பேராசிரியர் V. சிவக்குமார் பிள்ளை ஆகியோருக்கு சங்கத்தின் சார்பில் சால்வை அணிவிக்கப்பட்டது.

நன்றியுரையை துணைசெயலர் E. ராமலிங்கம் கூற கூட்டம் இனிதே நிறைவேறியது.

– வீ. கண்ணன்,

செயலர்.

## மேலப்பெரும்பள்ளம்

மேலப்பெரும்பள்ளம், கீழப்பெரும்பள்ளம் & தலைச்சங்காடு சங்கம் : சங்க கூட்டம் 06–12–2025 அன்று தலைவர் திரு. B, இலட்சுமணன் அவர்கள் இல்லத்தில் இறைவணக்கத்துடன் இனிதே தொடங்கியது.

சங்க உறுப்பினர்களை தலைவர் திரு. B. இலட்சுமணன் அவர்கள் வரவேற்று பேசிய போது, கல்லூரி மாணவ மாணவியர்களுக்கு "CREW" அறக்கட்டளை சென்னை மூலம் பெறும் கல்வி உதவித்தொகை வரவு வைக்கப்படுகின்றது என்ற செய்தி வந்துள்ளது. எனவும், சம்பந்தப்பட்டவர்கள் தங்கள் வங்கி கணக்கில் கல்வி உதவித்தொகை வரவு வைக்கப்பட்ட தகவல்களை தெரிவிக்கவும் கேட்டுக் கொண்டார். சங்க நடவடிக்கைகளை பற்றி விரிவாக பேசியபின்னர், பொருளாளர் G. பாஸ்கரன் அவர்கள் நன்றி கூற கூட்டம் இனிதே முடிவுற்றது.

- B. இலட்சுமணன்,

தலைவர்.

**9443783743**

## 80. இராதாநல்லூர் :

சங்க கூட்டம் 14–12–2025 அன்று சங்க செயலர் அ. இராஜா முத்தையா அவர்கள் இல்லத்தில் தலைவர் T. முத்துக்குமரசாமி அவர்கள் தலைமையில் சங்க உறுப்பினரும் சீர்காழி மண்டல செயலருமான N. சிதம்பரநாதன் அவர்கள் வரவேற்க கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. டிசம்பர் மாதத்தில் பிறந்த நாள் காணும் உறுப்பினர்களுக்கு வாழ்த்து தெரிவிக்கப்பட்டது. 2026–ம் ஆண்டிற்கான சங்க மாதாந்திர நாட்காட்டியினை அச்சிட்டு சங்க உறுப்பினர்களுக்கும், விளம்பரதாரர்களுக்கும் வழங்கிய சங்க செயலர் அ. இராஜா முத்தையா அவர்களுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது. சங்கத்திற்கு ரப்பர் ஸ்டாம்புகள் 3 (மூன்று) புதிதாக வாங்கிக்கொள்ள ஒப்புதல் அளிக்கப்பட்டது. 2026–ம் ஆண்டு சந்தாதொகை செலுத்திய உறுப்பினர்களுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது. சந்தாதொகை செலுத்தாத உறுப்பினர்கள் நிலுவைத் தொகையினை செலுத்த கேட்டுக்கொள்ளப்பட்டது. சங்க செயற்குழு உறுப்பினர் A. சண்முகநாதன் சங்க மகளிரணி பா. ஜெயஸ்ரீ அவர்களின் மகள் ச. ஸ்ரீஉமா பார்வதி என்பார் மாநில அளவில் நடைபெற்ற தமிழ் இலக்கிய திறனாய்வு தேர்வில் மயிலாடுதுறை மாவட்ட பதின்ம பள்ளி அளவில் முதலிடம் பெற்றமைக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

சங்க தலைவர் திரு. T. முத்துக்குமரசாமி – திருமதி. விமலா தம்பதியரின் சதாபிஷேகம் 22–12–2025 திங்கள்கிழமை அன்று திருக்கடையூர் ஸ்ரீ அபிராமிஅம்மன் உடனாகிய ஸ்ரீ அமிர்தகடேஸ்வரர் சுவாமி கோயில் மார்க்கண்டேயர் மண்டபத்தில் – தருமை ஆதீனம் 27–வது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் ஆசியோடு நடைபெற உள்ள விழாவில் சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டு ஆசிபெற்றுக்கொள்ள தீர்மானிக்கப்பட்டது. சங்க இளைஞர் அணி ஹ. ரெத்தினவேல் சுப்ரமணியன் அவர்கள் நன்றி கூற கூட்டம் இனிதே முடிவுற்றது.

- T. முத்துக்குமரசாமி,

தலைவர்.

**9443645646**

## பூம்புகார் - மேலையூர்.

சங்க கூட்டம் தலைவர் திரு. N. பாண்டியன் அவர்கள் தலைமையில் உறுப்பினர் திரு. பரணிதரன் இல்லத்தில் 7–12–2025 அன்று நடைபெற்றது.

கூட்டத்திற்கு வந்திருந்த உறுப்பினர்கள் அனைவரையும் தலைவர் அவர்கள் வரவேற்று பேசினார். பொருளாளர் திரு. R. வெங்கடேசன் அவர்கள் இந்த மாத பிறந்த நாள் மற்றும் திருமணநாள் விழா கொண்டாடும் உறுப்பினர்களுக்கு வாழ்த்து தெரிவித்தார். கூட்டத்தில் டிசம்பர் 28–12–2025 அன்று நடைபெறும் நமது சங்க ஆண்டு விழா பற்றி கலந்து ஆலோசிக்கப்பட்டது. CREW அறக்கட்டளையில் விண்ணப்பம் செய்த நமது சங்க மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை கிடைத்ததற்காக அறக்கட்டளைக்கு நன்றி தெரிவித்து கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. உறுப்பினர்களுக்கு சிற்றுண்டி வழங்கிய செயலாளர் திரு. G. விஜயராகவன் அவர்களுக்கு சங்கம் சார்பாக நன்றி தெரிவிக்கப்பட்டது. இறுதியில் அமைப்பு செயலாளர் திரு. B. சிவநேசன் அவர்களின் நன்றியுரையுடன் கூட்டம் இனிதே நிறைவுற்றது.

- G. விஜயராகவன்,

செயலாளர்.

Cell : 9994635306

## இலையமுது கூடம் :

கூட்டம் 21–12–2025 அன்று நம் சங்க உறுப்பினர் ஹேமலதா டிரேடர்ஸ் உரிமையாளர் திரு. V. அம்பலவாணன் அவர்கள் இல்லத்தில் இறைவணக்கத்துடன் தொடங்கியது.

கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சங்க வரவு செலவு கணக்குகள் பொருளர் திரு. S. சிவகடாட்சம் பிள்ளை அவர்களால் படிக்கப்பட்டு ஏற்பளிக்கப்பட்டது.

நம் சங்க உறுப்பினர்கள் அனைவருக்கும் தினசரி காலண்டர் கூட்டமைப்பு பெயரிட்டு சொந்த செலவில் வழங்கிய திருவெண்காடு சிட் பண்ட் உரிமையாளர் M.D. திரு. S. கணபதி அவர்களுக்கு அனைவர் சார்பிலும் நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சங்க உறுப்பினர்கள் அனைவருக்கும் தினசரி காலண்டர் வழங்கப்பட்டது.

நம் சங்க மாநில தலைவர் மனைவி தெய்வதிருமதி. ஆனந்தி அவர்கள் அகாலமரணம் அடைந்த செய்தி கேட்டு உறுப்பினர்கள் அனைவரும் அதிர்ச்சியுற்று, மௌனம் அனுசரிக்கப்பட்டு அவர்கள் குடும்பத்தை சேர்ந்த அனைவரும் துயரத்தில் இருந்து மீளவும், நீடுழி வாழவும் அனைவர் சார்பிலும் இறைவனை வணங்கி கொண்டோம்.

நம் ஊரை சேர்ந்த கண்ணாடி பிள்ளை என்கிற மாணிக்கம் பிள்ளை மனைவி திருமதி. யோகத்தம்மாள் மறைவுக்கும் மௌனம் அனுசரிக்கப்பட்டது.

தேநீர் வழங்கிய திரு. V. அம்பலவாணன் அவர்களுக்கு சங்க உறுப்பினர்கள் அனைவரின் சார்பிலும் நன்றி தெரிவித்து தேசிய கீதத்துடன் கூட்டம் முடிவுற்றது.

- A. நடனம், தலைவர்.

## நெடுங்காடு :

சங்க கூட்டம் திரு. S. கோபு, S. நெடுஞ்செழியன் அவர்கள் இல்லம், காரைக்கால். தலைவர் மு. மோகன்தாஸ் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

இறைவணக்கம் : திரு. K.S. கணபதி சுப்பரமணியன் சார் அவர்கள் பாடினார்கள்.

நெடுங்காடு கார்காத்தார் தெரு, திரு. சண்முகம் பிள்ளை அவர்கள் மறைவிற்கு இரங்கல் தெரிவித்து மவுன அஞ்சலி செலுத்தப்பட்டது.

CREW அறக்கட்டளைக்கு 17 No அப்ளிகேஷன் வழங்கப்பட்டது. 17 பேருக்கும் பணம் வந்துவிட்டது.

CREW அறக்கட்டளைக்கு சங்கத்தின் சார்பாக நன்றி தெரிவிக்கப்பட்டது.

இந்த மாத கூட்டத்தை நடத்தி கொடுத்த இல்லத்தலைவர் திரு. S. கோபு S. நெடுஞ்செழியன் மற்றும் அவர்களின் துணைவியார் அவர்களுக்கு பொன்னாடை போற்றி மரியாதை செய்யப்பட்டது.

இந்த மாத குலுக்கல் நடைபெற்றது. பரிசு விழுந்தவர்களுக்கு சங்க தலைவர் திரு. K. மோகன்தாஸ் அவர்கள் பரிசு வழங்கி சிறப்பித்தார்கள். பிறகு நன்றி தெரிவிக்கப்பட்டது.

இந்த மாத பரிசு குலுக்கல் I. S. கோபு அவர்கள் – காரைக்கால், II R. முரளி அவர்கள் – கதிராமங்கலம், III S. பத்மநாதன் அவர்கள் – நெடுங்காடு.

S. ரெங்கநாதன், செயலாளர்.

## குத்தாலம் :

சங்க செயற்குழு கூட்டம் 07–12–2025 அன்று குத்தாலம் 144 அருணகிரிநாதர் தெரு, M.R. சாமு இல்லத்தில் உள்ள இராமச்சந்திரன் நினைவரங்கில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தலைவர் J. வேதநாயகம் முன்னிலையில், மகளிர் அணி தலைவி T. பர்வதம் வரவேற்பு நிகழ்த்தினார். இக்கூட்டம் தலைவர் R. சுவாமிநாதன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மண்டல பொறுப்பாளர்கள், செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் செயலாளர் M. கண்ணன், பொருளாளர் M.K. பலராமன் மற்றும் மகளிர் அணி பொறுப்பாளர்கள் உட்பட அனைத்து பொறுப்பாளர்களும் கூட்டத்தில் கலந்து கொண்டனர். மேலும் இக்கூட்டத்தில் 04–01–2026 அன்று குத்தாலம் மகளிர் அணி சார்பிலும் குத்தாலம் கார்காத்த வேளாளர் சங்க சார்பிலும் "கார்குல மகளிர் கூட்டுப் பொங்கல் விழா" குத்தாலம் சோழீஸ்வர கோயிலில் நடத்துவது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

R. சுவாமிநாதன்,
தலைவர்.

## தஞ்சாவூர் :

சங்கத்தின் 40–வது ஆண்டு விழா, தஞ்சாவூர் கோல்டன் ஜுபிலி ஹாலில் தொடங்கியது.

குத்து விளக்கு ஏற்றப்பட்டு, செல்வி. லயா இறைவணக்கம் பாட விழா தொடங்கியது. திரு. R. இராஜசேகர் (கௌரவத் தலைவர்) அவர்கள் அனைவரையும் வரவேற்று உரை நிகழ்த்தினார். தஞ்சை நகர கார்காத்தார் சங்கத் தலைவர் திரு. S. ஜெயச்சந்திரன் அவர்கள் தலைமையுரையாற்றினார்கள். சங்கச் செயலர் திரு. S. மதியழகன் அவர்கள் ஆண்டறிக்கை வாசிக்க, பொருளாளர் திரு. R. சண்முகம் அவர்கள் 2024 ஆண்டு செலவு அறிக்கை சமர்ப்பித்தார்கள். காமதேனு அறக்கட்டளை தலைவர் திரு. S. மோகன்குமார் அவ்வறக்கட்டளையின் செயல்பாடுகளை விளக்கினார்கள்.

Dr. திரு. ரவி. அவர்கள் ரூ. 50,000/– முன்னாள் தஞ்சாவூர் சங்கத்தலைவர் திரு. R. தண்டபாணி அவர்கள் ரூ. 10,000/– திரு. R. சண்முகம் அவர்கள் ரூ. 5,000/– திரு. D. சுகுமார் ரூ. 5,000/– ஆகியோர் காமதேனு அறக்கட்டளைக்கு நன்கொடை அளித்தார்கள்.

சிறப்புரை : முனைவர் திரு. P.S. குமார் அவர்கள் மிக எளிய தலைப்பாக இளைஞர்கள் ஏன் நம் சங்கக் கூட்டங்களில் ஆர்வம் காட்டவில்லை என்பதை எடுத்துரைத்தார்கள். மனித உறவுகள் மிக முக்கியம் "Network is Net Worth" என விளக்கினார்கள்.

திரு. முனைவர் தங்க. பசுபதி. அனைவரும் மெய்மறந்து சிரிக்கும்படியான நகைச்சுவை செய்திகளைக் கூறினார். பின்னர் பிச்சையிடுதல், ஐயம் இடல் ஆகிய இரண்டு நிகழ்வுகளுக்கும் உள்ள வேறுபாட்டினை ஆத்திச்சூடி, திருக்குறள், திருப்பாவை மற்றும் சிலப்பதிகாரம் ஆகிய பாடல்களைக் கொண்டு இனிமையாகவும், எளிமையாகவும் தனது அற்புத பேச்சினால் விளக்கினார்கள்.

ஐயம் என்பது வீடு தேடிச் சென்று பொருளோ, உணவோ கொடுப்பது. பிச்சை என்பது நமது வீடு தேடி வருபவர்களுக்கு அளிப்பது என விளக்கம் கூறினார்.

அடுத்த நிகழ்வாக செல்வி. லயா அவர்கள் "முத்தைத்தரு பத்தி" என்ற திருப்புகழை அழகுற பாடினார்.

மகளிரணி தலைவி திருமதி. லதா ராஜசேகர் அவர்கள் மகளிரணி செயல்பாடு குறித்து உரை நிகழ்த்தினார். இறுதியாக திருமதி. A. பானுமதி அவர்களின் நன்றியுரையுடன் விழா இனிதே நிறைவுற்றது. மதிய உணவு வருகை புரிந்த அனைவர்க்கும் அளிக்கப்பட்டது.

எஸ். மதியழகன், செயலாளர்.

## திருநெல்வேலி :

16–11–2025 அன்று கார்காத்தார் சங்கம் கட்டிடத்தில் கார்குல கர்ணன் வெங்கடேசன் பிள்ளை அரங்கத்தில் தலைவர் C. சண்முகசுந்தரம் பிள்ளை அவர்கள் தலைமையில் செயற்குழு கூட்டம் நடைபெற்றது. கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

நமது சங்கத்தின் கட்டிட விஸ்தரிப்பு குழு அமைப்பது என்று தீர்மானிக்கப்பட்டது.

வசூல் (கட்டிடம்) அனைத்தும் வங்கி கணக்கு மூலம் செய்யவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

திரு. G. வீரபத்திரன் பிள்ளை அவர்கள் செயலாளர் பதவிக்கு ஏகமனதாக தேர்வு செய்யப்பட்டார்.

இக் கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பித்த வணக்கத்துக்குரிய மேயர் திரு. கோ. ராமகிருஷ்ணன் (என்ற) கிட்டு அவர்களுக்கும் பாராட்டு தெரிவிக்கப்பட்டது. மேலும் மேயர் அவர்கள் மறைந்த முன்னாள் செயலாளர் திரு. ராமசுப்பிரமணியன் பிள்ளை அவர்களின் திருஉருவப் படத்தை திறந்து வைத்து சிறப்புரை ஆற்றினார்கள். நன்றியுரையுடன் கூட்டம் இனிதே நிறைவுற்றது.

## கோவை :

கூட்டம் திரு. M. சண்முகசுந்தரம் BUSY KNIT Garments, திருப்பூர் அவர்களின் இல்லத்தில் 07-12-2025 அன்று சிறப்பாக நடைபெற்றது. கோவையிலிருந்து சங்க நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டு கூட்டத்தை சிறப்பித்தனர்.

திரு. சங்கர சுப்பிரமணியன் மற்றும் திருமதி. சத்தியபாமா அவர்களின் பேரன் இசான் அவர்கள் இறைவணக்கம் பாடி நிகழ்ச்சியை இனிதே தொடங்கி வைத்தார்.

திரு. சிவராஜ் கோபால் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார்.

சங்கத் தலைவர் திரு. அரியநாயகம் அவர்கள் தலைமை உரையாற்றி சங்கத்தின் நோக்கங்களையும் எதிர்கால திட்டங்களையும் எடுத்துரைத்தார்.

திருப்பூரில் 100-க்கும் மேற்பட்ட நம் குடும்பச் சொந்தங்கள் வாழ்ந்து வருகின்ற நிலையில், அவர்களை ஒருங்கிணைக்கும் ஒரு சிறப்பு நிகழ்ச்சி ஏற்பாடு செய்வது குறித்த முதற்கட்ட ஆலோசனைகள் இந்தக் கூட்டத்தில்விவாதிக்கப்பட்டன. இதற்காக திரு. சுவாமிநாதன் அவர்களை நேரில் சந்தித்து, அவர்களின் தலைமையில் ஏற்பாடுகளை முன்னெடுத்து நடத்த உதவுமாறு ஒருமனதாக முடிவு செய்யப்பட்டது. குறிப்பிட்ட கால வரம்பிற்குள் திருப்பூரில் ஒரு சிறப்பு கூட்டம் நடத்த உத்தேசிக்கப்பட்டது. தொழில் நகரமாகிய திருப்பூரில் பணிபுரியும் நம் சொந்தங்கள் அனைவரும் கலந்து கொண்டு பயன்பெறும் வகையில் இந்த கூட்டம் மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என அனைவரும் தங்களது ஆதரவை தெரிவித்தனர்.

திரு. சண்முகசுந்தரம் அவர்களுக்கும் அவர்களின் குடும்பத்தாருக்கும் பொன்னாடை அணிவித்து பயனுள்ள நூல்கள் வழங்கப்பட்டன. திரு. சண்முகசுந்தரம் அவர்கள் சிறந்த முறையில் மதிய உணவு ஏற்பாடு செய்திருந்ததுடன், கலந்து கொண்ட அனைவருக்கும் பொன்னாடை அணிவித்து மகிழ்வித்தார்கள்.

திரு. வள்ளிநாயகம் அவர்கள் நன்றியுரை ஆற்ற விழா கூட்டம் இனிதே நிறைவுற்றது.

திரு. சண்முகசுந்தரம் அவர்களின் சகோதரர் M. சங்கரசுப்ரமணியம் அவர்களின் இல்லத்திற்கும் சங்க உறுப்பினர்கள் அனைவரும் சென்று வந்தனர். அனைவருக்கும் சிற்றுண்டி வழங்கி அன்புடன் உபசரித்தார்கள்.

மேலும் சங்க கௌரவ தலைவர் திரு. சோமசுந்தரம் அவர்களின் ஆலோசனையின்படி ஒவ்வொரு வாரமும் ஞாயிற்றுக்கிழமை இரவு 7.00 முதல் 8.00 மணி வரை, திருமுறைப் பாடல்கள் மற்றும் மாணிக்கவாசகப் பெருமானின் திருவாசகத்தை ஒரு சேர முற்றோதல் வழிபாடாக உறுப்பினர்கள் இணைந்து பாடி வருகின்றனர்.

இந்த நிகழ்வில், திருமதி. வசந்தரத்னா அவர்கள் பாடல்களுக்கான முழுமையான விளக்கங்களை அனைவரும் புரியும் வகையில் எடுத்துரைத்து, மிகவும் சிறப்பாக முன்னின்று நடத்தி வருகிறார். உறுப்பினர்கள் அனைவரும் மிகுந்த ஆர்வத்துடன் இதில் கலந்து கொண்டு ஆன்மீகப் பயன் அடைந்து வருகின்றனர்.

## இரங்கல் செய்தி

தமிழ்நாடு கார்காத்தார் சங்க கூட்டமைப்பின் தலைவர் திரு. K. இராஜசுந்தரம் @ KKR. சுரேஷ் அவர்களின் துணைவியார் திருமதி. ஆனந்தி அவர்கள் 19-12-2025 வெள்ளிக்கிழமை இரவு உடல் நல குறைவினால் இயற்கை எய்தினார்கள் என்பதை ஆழ்ந்த இரங்கலுடன் தெரிவித்துக் கொள்கிறோம். அவரது மறைவால் வாடும் தலைவர் மற்றும் குடும்பத்தினர் அனைவரும் மன தைரியம் பெறவேண்டி இறைவனை மனமார வேண்டுகிறோம்.

மாநில சங்க நிர்வாகிகள்

தமிழ்நாடு கார்காத்தார் சங்க கூட்டமைப்பு.

## நகர கார்காத்த வேளாளர் சங்கம், மயிலாடுதுறை.
## 2025 - 2026-ஆம் ஆண்டின் கல்வி நிதி வழங்கிய நன்கொடையாளர்கள் விபரம்.

| வ. எண் | நன்கொடையாளர் பெயர் | முகவரி | வழங்கிய தொகை |
|---|---|---|---|
| 1 | N. சம்பந்தம் பிள்ளை | பெட்ரோல் பங்க், பூம்புகார் சாலை | 25000 |
| 2 | A. கிருஷ்ணன் | ஆக்கூர் பைனான்ஸ் | 20000 |
| 3 | G. முத்துகிருஷ்ணன் | மதுரா நகர் | 10000 |
| 4 | N. ராமதாஸ் | சின்ன கண்ணாரதெரு | 10000 |
| 5 | Dr. R. ராஜசேகர் | பட்டமங்கலம் தெரு | 10000 |
| 6 | S. கந்தசாமி | சித்ரா சீவல் | 10000 |
| 7 | V. தியாகராஜன் | அட்வகேட் அருண் நகர் | 10000 |
| 8 | Dr. V. முத்து | மகாதான தெரு | 7000 |
| 9 | S. பானுமூர்த்தி | மயூரநாதர் காலனி | 5000 |
| 10 | R. நடராஜன் | திருமலை நகர் | 5000 |
| 11 | S. வேல்கண்ணன் | விஜய் மெடிக்கல் | 5000 |
| 12 | Dr. N. சிவகுமார் | நாச்சிமுத்து நகர் | 5000 |
| 13 | Dr. S. ராஜேஷ் கண்ணா | பெசன்ட் நகர் | 5000 |
| 14 | G.V. மனோகரன் | பெரிய கோவில் தெற்கு வீதி | 5000 |
| 15 | A.R.S. மதியழகன் | பெரிய கோவில் தெற்கு வீதி | 5000 |
| 16 | D. பாஸ்கரன் | சீனிவாசபுரம் | 5000 |
| 17 | தேவி சுகந்தநாதன் | மதுரா நகர் | 5000 |
| 18 | G. திருநாவுக்கரசு | வலம்புரி நகர் | 5000 |
| 19 | A. கோவிந்தராசு | சீனிவாசபுரம் | 5000 |
| 20 | S. குலோத்துங்கன் | K.K.K. நகர் | 5000 |
| 21 | B. ரத்தினகுமார் | சிவப்பிரியா நகர் | 5000 |
| 22 | S. உமாபதி (YES GEE) | மதுரா நகர் | 5000 |
| 23 | Dr. U. மனோகர் | சீனிவாசபுரம் | 5000 |
| 24 | G. ஜெயச்சந்திரன் | சீன்வாசபுரம் | 5000 |
| 25 | Dr. S. சத்யன் | சின்ன கண்ணார தெரு | 5000 |
| 26 | Dr. P. செல்வநாயகம் | மதுரா நகர் | 5000 |
| 27 | P. மோகன் | K.K.K. நகர் | 3000 |
| 28 | B. செல்வராஜ் | நாச்சிமுத்து நகர் | 3000 |
| 29 | T. பன்னீர்செல்வம் | பெரிய மணவள்ளி தெரு | 3000 |
| 30 | கோமதி கணபதி | பெரிய மணவள்ளி தெரு | 3000 |
| 31 | G. திருநாவுக்கரசு | சுப்ரமணியபுரம் | 3000 |
| 32 | G. சிங்காரவேலு | பாரதி நகர் | 3000 |
| 33 | S. திருஞானசம்பந்தம் | சீனிவாசபுரம் | 2500 |
| 34 | S. ராதாகிருஷ்ணன் | சீனிவாசபுரம் | 2500 |
| 35 | M. இளங்கோவன் | துபாஷ் தெரு | 2000 |
| 36 | S. ஜெயம் சத்தியபால் | பெரிய கோவில் மேலவீதி | 2000 |
| 37 | S. முத்துக்குமார் | காந்தி நகர் | 2000 |
| 38 | R. ராமலிங்கம் | பாரதி நகர் | 2000 |
| 39 | G. பாலச்சந்திரன் | சீனிவாசபுரம் | 2000 |
| 40 | M. பாலசுப்ரமணியம் | சீனிவாசபுரம் | 2000 |
| 41 | DR. G. ரவிச்செல்வம் | ஒத்த தெரு வெள்ளாளகரம் | 1500 |
| 42 | P. சுவாமிநாதன் | சீனிவாசபுரம் | 1000 |
| 43 | சுகன்யா கார்த்திகேயன் | சீனிவாசபுரம் | 1000 |

| | | | |
|---|---|---|---|
| 44 | G. கணேசன் | செட்டி தெரு | 1000 |
| 45 | T. பரத்குமார் | தென்னமர சாலை | 1000 |
| 46 | G. வரதராஜன் | மதுரா நகர் | 1000 |
| 47 | S. கலியபெருமாள் | பெசன்ட் நகர் | 1000 |
| 48 | C. தங்கப்பிரகாசம் | கூட்டுறவு நகர் | 1000 |
| 49 | R. தன்ராஜ் | சித்ரா சீவல் | 1000 |
| 50 | இளம்வழுதி | மேலவீதி | 1000 |
| 51 | கோ. வி. சண்முகம் | கூட்டுறவு நகர் | 1000 |
| 52 | R. தியாகராஜன் | காந்தி நகர் | 1000 |
| 53 | G. முருகையன் | பெரிய கோவில் கீழவீதி | 1000 |
| 54 | R. பாலசுப்பிரமணியன் | திருவிழந்தூர் வடக்கு வீதி | 1000 |
| 55 | R. ஆனந்தன் | திருவள்ளுவர் நகர் | 500 |
| | | கூடுதல் | 2,42,000 |

- S. தில்லைநாயகம்,
செயலர்.

## * முக்கிய அறிவிப்பு *

கார்காத்தார் ஒப்புரவுக்கு அனுப்பப்படும் சங்க செய்திகள், கட்டுரைகள், ஒவ்வொரு ஆங்கில மாதத்தின் 25–ஆம் தேதிக்குள் அனுப்பப்பட வேண்டும். அதன் பின்னர் பெறப்படும் செய்திகள் அடுத்து வரும் இதழ்களில் பிரசுரிக்கப்படும். சங்க நிகழ்வுகள் பற்றிய செய்திகள் அனுப்பும் போது கட்டாயமாக சங்கத்தின் தலைவர் / செயலாளரின் கையொப்பம் மற்றும் சங்க முத்திரையிட்டு அனுப்ப வேண்டும்.

- செய்திகள், கட்டுரைகள், கட்டாயமாக 1½ பக்கம் முதல் 2 பக்கங்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும். இதற்கு மேல் வரும் செய்திகள், கட்டுரைகள் மற்றும் கதைகளை குறைக்கவோ அல்லது நிராகரிக்கவோ நிர்வாகத்திற்கு உரிமை உண்டு.
- சங்க நிகழ்வுகள், விழாக்கள் பற்றிய செய்திகளை 3 முதல் 4 பாராக்கள் வரை மட்டுமே எழுதி அனுப்பபட வேண்டும். மேலும் செய்திகள் சுருக்கமாகவும், மிகவும் தெளிவாகவும், முக்கிய கருத்துகளை உள்ளடக்கியதாகவும், பெயர்களை தவிர்த்தும், பொறுப்பாளர்களின் கையொப்பத்துடனும் அனுப்பப்பட வேண்டும்.
- E-mail–ல் செய்திகள் அனுப்புவது தவிர்க்கப்பட வேண்டும்.
- **மணியார்டர், காசோலை, DDகள் அனைத்தும் கார்காத்தார் ஒப்புரவு என்ற பெயரில் அனுப்பபட வேண்டும்.**

இந்த QR CODE/UPI யை SCAN செய்தும் பணம் செலுத்தலாம்

**Online fund Transfer** Account Number : 130801000022149
IFSC Code : IOBA0001308
Account Name : M/S Karkathar Oppuravu
Bank Name and Branch : Indian Overseas Bank/ Choolai Medu - Chennai.

**தொகை செலுத்தியபின்** Name, Amount, subscription - ADVT Details, Date of Payment, Transaction ID/UTR Number, Communication Address, Pincode (must), Phone / WhatsApp Number, Screenshot of Payment / Google form (https://forms.gle/rXkimYPnPMCJwtRi8) **இந்த விவரங்களை "கார்காத்தார் ஒப்புரவு"** Whatsapp No. **8248449204** **க்கு அனுப்பி வைத்தால் மட்டுமே தாங்களது விவரங்கள்** update **செய்யப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.**

- செய்திகள் பிரசுரிப்பது குறித்து தொலைபேசி / கடித போக்குவரத்து இயலாது.

அனைத்து தபால்களையும் **கார்காத்தார் ஒப்புரவு,**
*எண். 64, சௌராஷ்டிரா நகர், 10வது தெரு, சூளைமேடு, சென்னை - 600 094.*
என்ற முகவரிக்கு மட்டுமே அனுப்ப வேண்டும்.

- கார்காத்தார் ஒப்புரவு

## இளமை எனும் பூங்காற்று!

இளைய தலைமுறையினரைப் பார்த்து பெரியவர்கள் ''எழு – விழி, .... சாதித்துப் பார்'' என்பார்கள். இந்த வசனம் இளைஞர்களின் மனதில் 'நம்பிக்கை' என்ற விதையை விதைக்கிறது. இவர்களின் மனதில் நாம் உயர வேண்டும், உன்னத இலக்குகளை அடைவதற்கான தகுதியையும், முன்னடைவுகளையும் பெற்றிருக்க வேண்டும். தங்களை மேம்படுத்திக் கொள்ளவும் வெற்றி என்ற இலக்கை அடையவும் வெறித்தனமான முயற்சியும், வேகமும் மனதில் கொழுந்து விட்டெறிய வேண்டும்.

1931 அக்டோபர் 15–ஆம் நாள் இராமேஸ்வரத்தில் ஒரு குழந்தையின் அழு குரல் கேட்டது. சிறிது நேரத்தில் அழுகையை நிறுத்தி விட்டு அமைதியாக இருந்தது. சுற்றி நின்ற உறவினர்கள் குழந்தையின் தாயிடம் என்ன குழந்தை அமைதியாக இருக்கிறது. பெரிய சிந்தனையாளராக வருமோ? எனச் சிரித்துக் கொண்டே கேட்டனர். அவர்கள் கேட்டது என்னவோ விளையாட்டாகத்தான். ஆனால் அக்குழந்தைதான், ஒழுக்க சீலர், அறிவியல் விஞ்ஞானி, அணுவியல் சாதனையாளர், மதச்சார்பற்றவர், தேசத்தின் முதல் குடிமகன், இளைஞர்களின் வழிகாட்டி என பல அடைமொழிகளால் சிறப்பித்து கூறப்படும், ஏ.பி.ஜெ. அப்துல்கலாம் ஐயா அவர்கள் எளிமையான உருவமும், தியாக சிந்தனையும் உடைய கலாம் அவர்கள் இளைஞர்களின் முன்னோடி. ஒரு மகத்தான கனவுக்காக நான் உழைப்பேன் வியர்வை சிந்துவேன், பாடுபடுவேன் என்ற அவரின் வரிகள் இளைய தலைமுறையினருக்கான முன்னேற்றத்தின் முகவரி.

சாதிக்கும் நோக்கம் : ஆளில்லா ரயில்வே கேட்டை கடக்கிறார் ஒருவர்.அவர் மீது பன்னீர் போல தண்ணீர் பீய்ச்சி அடிக்கிறது. போனில் பேசியபடியே சென்ற அவர் மீது தண்ணீர் பீய்ச்சி அடிக்கிறது. அவர் ஒரு கணம் திகைத்து நிற்கிறார். அடுத்த நொடி தட தடவென்று ரயில் கடந்து செல்கிறது. 'நல்ல வேளை நான் தப்பித்தேன்' என்ற அவர் வானத்தைப் பார்த்து நன்றி சொல்லி விட்டு போகிறார். கடலூர் மாவட்டம் விருத்தாசலம் அருகே உள்ள தீவனூர் என்ற கிராமத்தைச் சேர்ந்தவர் வினோத்ராஜா. இவர் அரசு பள்ளியில் படித்து இளம் அறிவியலாளராக உயர்ந்து நிற்கிறார். ஆளில்லா ரயில்வே கேட்டைக் கடக்கும் போது தண்ணீர் பீய்ச்சி அடிப்பதும், மழை காலங்களில் ஒலி எழுப்புவதுமான கருவிக்காகப் பல்வேறு பரிசுகளையும், விருதுகளையும் பெற்றுள்ளார். ''எங்களைப் போன்றவர்களின் ஒரே நோக்கம் ஏதாவது சாதிப்பது என்பது மட்டுமே என்று அழுத்தமாக கூறுகிறார்.

தன்னம்பிக்கை : 2004–ஆம் ஆண்டு பெல்ஜியம் நாட்டில் உலகளவில் 47 நாடுகள் பங்கேற்ற தடகளப் போட்டியில் ஈட்டி எறிதலில் தங்கப் பதக்கம், வட்டு எறிதலில் வெள்ளிப்பதக்கமும் பெற்று இந்திய நாட்டிற்கு பெருமை சேர்த்தவர் ராஜலெட்சுமி. 2006–ஆம் ஆண்டு மலேசியாவில் நடந்த உலக அளவிலான குண்டு எறிதலிலும் குறிப்பிடத்தக்க சாதனையைச் செய்து தேசத்தின் பெயரை பதிவு செய்தவர், இளம்பெண் இராஜலெட்சுமி. தமிழக முதல்வரின் கரங்களால் ''கல்பனா சாவ்லா'' விருது பெற்ற சாதனைப் பெண் தன்னைப் பற்றி கூறும் போது, ஐந்து வயதிலே போலியோ வந்து ஒரு கால் ஊனமாயிடுச்சு. என் பெற்றோர் பார்க்காத வைத்தியமில்லை. எங்கள் ஊர் உசிலம்பட்டிபத்தி. ஊரில் இருப்பவர்கள் என் அம்மாகிட்ட'' ஏண்டி அப்பவே கொன்று போட்டிருக்கலாம்ல, இப்ப இப்படி கஷ்டபடுறீயேனு'' என் காது பட கேட்டார்கள். இப்ப என் பெற்றோர் இல்லை, என பெருமூச்சு விட்டு, கூறும் இராஜலெட்சுமி ''கால் ஊனம்னா என்ன சார், எனக்கு படிப்புன்னு தன்னம்பிக்கைக் கால் இருக்கு. இலட்சியமும், உறுதியும் என்னிடம் இருக்கிறது. இன்னும் நிறைய சாதிப்பேன் என்று பெருமையாக கூறுகிறார்.

2007–ஆம் ஆண்டு அக்டோபர் 22–ஆம் தேதி மோகன் என்பவரைப் பாராட்டி அன்றைய ஜனாதிபதி அப்துல்கலாம் அலுவலகத்திலிருந்து பாராட்டுக் கடிதம் வந்தது. எதற்கெனில் வேப்பந்தழை, வேப்பஎண்ணெய், யூக்கலிப்டஸ் இலை, நீலகிரித் தைலம் நிறைந்த மூலிகைகளை அரைத்து எண்ணெய் எடுத்து அதை பயன்படுத்தி இயற்கை கொசுவிரட்டித் திரவத்தை கண்டுபிடித்துள்ளார். சிம்கார்டு இல்லாமல் செல்போனை வைத்து வீடியோ, ஆடியோவிற்காகப் பயன்படுத்தினால் கூட கண்டு பிடித்துக் காட்டி கொடுக்கும், சிறைகளில் கைதிகளைக் கண்காணிக்கப் பயன்படும் கருவியை உருவாக்கியவரும் மோகனே! மாநில அளவிலான பரிசுகளையும், இளம் விஞ்ஞானி விருதையும் பெற்ற

மோகன், திருச்சிக்கு அருகில் உள்ள ஒரு கிராமத்தைச் சார்ந்த எளிமையான கல்லூரி மாணவர். "முயற்சி என் முதலீடு" என்பதே மோகனின் வெற்றியின் ரகசியம்.

இளைஞர்களே! நீங்கள் எப்படி ஆக வேண்டும், என்ன படிக்க போகிறீர்கள் என்பதை எல்லாம் சிந்தியுங்கள். பெற்றோர்களுடன், வீட்டில் உள்ள பெரியவர்களிடம் கலந்து பேசுங்கள். அதன் பிறகு உங்களுக்கு ஒரு நல்ல தீர்வு கிடைக்கும். உங்களின் மனது, உடலமைப்பு ஆளுக்கொரு விதமாக மாறுபடும். அந்த மாற்றத்திற்கு ஏற்றபடி சந்தோஷமும், துக்கமும் உங்களை பாதிக்கும். அத் தருணத்தில் சந்தோஷத்தில் மிதக்காமலும், துக்கத்தில் ஒரேயடியாக மூழ்கி விடாமலும், உங்களை நீங்கள் காத்துக்கொள்ளவேண்டும். உங்கள் வழியில் துன்பங்கள் தாக்கலாம். துயரங்கள் தடையாகலாம். எல்லாவற்றையும் மோதித் தூளாக்கி முன்னேறிப் பாருங்கள். துயரங்களாலும், துக்கங்களாலும் அடிக்கடிப் பாதிக்கப்படும் போது, எனக்கு மட்டும் ஏன் இப்படி பிரச்சனை வந்துக்கொண்டே இருக்கிறது என்று எண்ணி சோர்ந்து விடாமல், மன வலிமையோடு போராடி ஜெயிக்க வேண்டும்.

நிறைய சிந்திப்பவரும், கேள்விகள் கேட்பவரும், துணிச்சலுடன் மேடை ஏறுகிறவரும், இவர்கள் தான் தலைவராக முடியும். அமெரிக்காவே, 'நீ வழி தவறி விட்டாய்' என்று சுட்டு விரல் நீட்டி குற்றம் சாட்டிய மார்ட்டின் லூதர் கிங் தன் உழைப்பாலும், திறமையாலும் போராடி வெற்றிப் பெற்று ஒரு தலைமுறையையே தன் பக்கம் திருப்பினார். புறக்கணிக்கப்பட்ட கறுப்பர்களுக்கு அமெரிக்காவில் சம உரிமை பெற்றுத் தந்தார். அவர் தனது அறிவையும், திறமையையும் தனது இனத்தவருக்காக பயன்படுத்தாவிடில் அத்தனை பிரபலம் ஆகி இருக்க மாட்டார். நேர்மையான மன வலிமைக் கொண்ட, எதையும் பகுத்தறிந்து ஆராயும் தன்மையோடு செயலாற்றுங்கள். வெற்றி உங்கள் வசம்! ஒருவர் தன் கையில் வைத்திருக்கும் மின்பொறி விளக்கு அவர் வரைக்குமே உதவும். தெருவிளக்கு போகிற, வருகிற எல்லாருக்கும் உதவும். வானத்து நிலவோ, இந்த வையகம் முழுவதற்கும் ஒளியை வழங்கும். நீங்கள் நிலவாக ஒளித் தாருங்கள். முடியாவிட்டால் தெரு விளக்காகவேனும் திகழுங்கள்.

இளைஞர்களாகிய நீங்கள் உங்கள் உழைப்பாலும், உதவியாலும் மெழுகுவர்த்தி போன்று, மற்றவர்களின் பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பவர்களாக செயலாற்றுங்கள்! அளப்பரிய சக்தியும் திறமையும் உங்களிடம் உள்ளது என்பதை அறியுங்கள்.

இளைஞர்களே! வளர்ச்சியடைந்த நாடுகளான ரஷ்யா, அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகளின் வரிசையில் நம் இந்தியாவும் இடம் பெறும் வகையில் நம் பாரத பிரதமர் மோடி அவர்கள், மற்ற வல்லரசு நாடுகள் திரும்பி பார்க்கும் வகையில் தொழில்துறை, பொருளாதாரம், சுகாதாரம் போன்ற எல்லாவற்றிலும் நம் நாடு முன்னேற்ற பாதையில் சென்றுக் கொண்டிருக்கிறது. 'இந்தியா' மேலும் மேலும் வளர்ச்சியடைந்து வல்லரசு நாடுகளில் முதல் இடத்தை பெற செய்வது இளைஞர்களாகிய உங்களின் கையில் உள்ளது. இளைஞர்களே களத்தில் இறங்கி செயலாற்றுங்கள். இமய மலையில் தீபம் ஏற்றுங்கள்!

நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளந்தரு நாடு. என்ற குறளின்
படி வெற்றி சங்கு ஊதுங்கள்.

நன்றி!

– இரா. திலகம், வையூர்.

## இரங்கல் செய்தி

மயிலாடுதுறை மாவட்டம் வழுவூர் வடக்கு வீதியில் வசித்து வந்த தெய்வத்திரு. நாகராஜன், ஆசிரியர் ஓய்வு அவர்களின் துணைவியாரும், எங்களது தாயாரும் வழுவூர் பள்ளியில் ஆசிரியையாக பணிபுரிந்து ஓய்வு பெற்ற திருமதி. **இராதா** அவர்கள் 10.12.2025 அன்று இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

– அருள் கோவிந்த், வித்யா,
வழுவூர்.

# சந்தர்ப்ப சாட்சியம்
# CIRCUMSTANTIAL EVIDENCE

Melaiyur S.Anbalagan - 9841373184

சந்தர்ப்ப சாட்சியம் என்பது சில விஷயங்களை உறுதியாக பரிந்துரைக்கும். ஆனால் நேரடியாக நிரூபிக்காது அது நேரடியாக ஒரு சம்பவத்தைக் கண்ணால் கண்ட அல்லது காதால் கேட்ட சாட்சியின் நேரடியான சாட்சியம் அல்ல. ஆனால்அதைக் கொண்டு சில உண்மகளை அனுமானிக்க முடியும். உதாரணம்:–

ரகு என்பவன் வீட்டிற்கு சற்று கால தாமதமாக வருகிறான். ஏன் லேட் என்று அவன் தந்தை கேட்கும்போது வழியில் மழை பெய்ததால் சற்று ஒதுங்கி இருந்து விட்டு வந்தேன் அதனால் நேரமாகி விட்டது. அப்போது மழை விட்டிருந்ததால் அவனால் மழை பெய்ததை நிரூபிக்க முடியவில்லை. அப்போது மாடி வீட்டுப் பெண் வெளியில் வந்து துணிகளை உலர்த்துகிறாள் அப்போது அவள் வரும் வழியில் மழையில் நனைந்துவிட்டேன் என்று கூறுகிறாள். இது மழை பெய்ததற்கு சந்தர்ப்ப சாட்சியமாகக் கொள்ளலாம். மேற் கொண்டு சந்தர்ப்ப சாட்சியத்தைப் பார்க்கும் முன்பாக இந்திய சாட்சியங்கள் சட்டத்தில் உள்ள பல் வகை சாட்சியங்களைப் பார்ப்போம்.

**இந்திய சாட்சியங்கள் சட்டம் 1872–ல் உள்ள சாட்சியங்கள்**

**1. வாய் மொழி சாட்சியம் பிரிவு 60**

நீதிமன்றத்தில் ஒருசாட்சி சொல்லும் உண்மைகளைப் பதிவு செய்யச் சொல்லி நீதி மன்றம் கூறுகிறதோ அவை எல்லாம் வாய் மொழி சாட்சியமாகும். அதாவது வாய் மொழி சாட்சியம் என்பது அந்த சாட்சி கூறும் சாட்சியம் அவர் தானே நேரிடையாகப்,பார்த்த அல்லது கேட்ட ஒரு நிகழ்வாக இருக்கும். வாய் மொழி சாட்சியம் என்பது நேரடியாக் இருக்க வேண்டும். நடந்த உண்மைகளைக் கூறுவதாக் இருக்க வேண்டும்.

**2. ஆவண சாட்சியம் பிரிவு 3**

நீதி மன்றத்தின் பரிசீலனைக்காக அங்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் அனைத்தும் ஆவண சாட்சியமாகும். வாய் மொழி சாட்சியத்தை விட ஆவண சாட்சியம் அங்குள்ள வழக்கம் பற்றி சாட்சி சொல்பவரின் சரியான மனப்பான்மை மற்றும் மனச்சாட்சியைக் காட்டகூடியதாக இருக்கும்.

**3. முதன்மை சாட்சியம் பிரிவு 62**

முதன்மை சாட்சியம் என்பது மிகவும் சிறந்த முதல் தரமான சாட்சியம் ஆகும். சர்ச்சைக்குரிய ஒரு பொருள் பற்றிய மிகவும் முக்கியபமான துப்பு கொடுக்கக்கூடிய சாட்சியமாக இருக்கும். ஒரு தீர்ப்பில் ப்ரிவி கவுன்சில் கூறுகையில் முதன்மை சாட்சியம் தான் சட்டம் எதிர்பார்க்கும் முதல் சாட்சியமாக இருக்கும், இரண்டாம் ரக சாட்சியம் என்பது வேறு நல்ல சாட்சியங்கள் கிடைக்காத போது கொடுப்பதாகும் என்று கூறியுள்ளது.

**4. இரண்டாம் ரக சாட்சியம் பிரிவு 63**

இரண்டாம் ரக சாட்சியம் என்பது பெயருக்கு ஏற்றாற் போல் தரத்தில் சற்று குறைவானதாக இருக்கும் எனவே அது இரண்டாம் இடத்தைத்தான் பெறும், அந்த சாட்சியத்தை நீதி மன்றத்தில்,சமர்ப்பிக்கும் போதே அதை விட சிறந்த சாட்சியம் ஒன்று சமர்ப்பிக்கப் படாமல் விடு பட்டுள்ளது என்று தோன்ற வைக்கும். முதன்மை சாட்சியம் இல்லாத நேரத்தில் தான் அது சமர்ப்பிக்கப்படும் எனவே தான் அது இரண்டாம் ரக சாட்சியம் எனப்படுகிறது.

**5. இயற்கையான / நேர்மையான சாட்சியம்**

இயற்கையான/நேர்மையான சாட்சியம் என்றால்போலி யில்லாத யதார்த்தமான சாட்சியம் என்று பொருள். இந்த மாதிரி நேர்மையான சாட்சியம் நீதி மன்றத்தின் நேரடி பார்வைக்கு பொருளாகவே இருக்கும் அதாவது வாய் மொழியாகவோ ஆவணங்களின் மூலமோ விவரிக்காமல் அந்த பொருளையே நேரடியாக நீதி மன்ற பார்வைக்கு வைத்ததாக் இருக்கும் உதாரணம் :– நீதி மன்ற அவமதிப்பு, சாட்சியின் நடத்தை போன்றவைகள். அவை திருப்திகரமான சாட்சிகள் என்று சொல்லப்படும்.

**6. கேள்விப் பட்ட சாட்சியம் வதந்தி**

இது மிகவும் பலஹீனமான சாட்சியம் ஆகும். அதாவது சாட்சியம் கொடுப்பவர் தானே நேரிடையாகப் பார்க்காத அல்லது கேட்காத மற்றவர்கள் சொன்னதைக் கேட்டு சொல்வதாகும் . ஒரு வழக்கில். தீர்ப்பு சொல்லும் போது பம்பாய் உயர் நீதி மன்றம் கேள்விப்பட்ட சாட்சியம் சம்பந்தமற்றது என்று தள்ளுபடி பண்ணப்பட்டிருக்க வேண்டும் என்று கூறியுள்ளது. அதனுடைய நம்பகத்தன்மை பற்றி உறுதி இல்லாத ஒரு சாட்சியம் கிடைத்தால் அதை நம்பி செயல்படுவது மிக ஆபத்தானதாகும்.கேள்விப்பட்ட சாட்சியம் என்பது அந்த வகையைச் சார்ந்ததாகும்.

**7. நீதித்துறை சாட்சியம்**

ஒரு உண்மையை நிரூபிக்கவோ மறுக்கவோ ஒரு நீதி மன்றத்தில் பெறப்பட்ட சாட்சியம் நீதித்துறை சாட்சியம் எனப்படும். நீதி மன்றத்தில் குற்றம் சாட்டப்பட்டவர் கொடுக்கும் ஒப்புதல் வாக்குமூலம் கூட நீதித்துறை சாட்சியத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. சாட்சிகளின் வாக்குமூலங்கள், நீதி மன்றப் பரிசீலனைக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள உண்மைகள் ஆகிய அனைத்தும் நீதித்துறை சாட்சியங்களைச்சாரும்.

**8 நீதி மன்றம் அல்லாத சாட்சியம்.**

நீதி மன்றத்துக்கு வெளியே நீதிபதி/மாஜிஸ்ட்ரேட் அல்லாத வேறு தனி நபர் முன்னால் குற்றம் சாட்டப்பட்டவர் கொடுக்கும் ஒப்புதல் வாக்கு மூலம் நீதி மன்றம் அல்லாத சாட்சியம் ஆகும்.

**9. நேரடி சாட்சியம்**

நேரடி சாட்சியம் என்பது ஒரு உண்மையை உறுதிப்படுத்தும் சாட்சியமாகும். அதற்கு ஒரு நல்ல உதாரணம் நீதி மன்றத்தில் ஒரு சாட்சி கொடுக்கும் வாக்கு மூலம் அல்லது ஒப்புதல் வாக்கு மூலமாகும்.

**10. சந்தர்ப்ப சாட்சியம் அல்லது மறை முக சாட்சியம்**

சந்தர்ப்ப சாட்சியம் அல்லது மறை முக சாட்சியம் என்பது ஒரு சர்ச்சையில் ஒரு உண்மையை நிரூபிக்க வேறு உண்மைகளை கொடுத்து முயற்சி செய்வது ஆகும். சந்தர்ப்ப சாட்சியங்கள் உறுதியான ஆதாரங்கள் அல்ல. ஒரு குற்றவியல் செயலில் என்ன நடந்தது என்பதற்கு அவை ஒரு யோசனையைக் கொடுக்கும்.

**எதற்காக சந்தர்ப்ப சாட்சியங்கள் ?**

சந்தர்ப்ப சாட்சியங்கள் நேரடி சாட்சியம் அல்ல என்ற போதும் சில நேரங்களில் சந்தர்ப்ப சாட்சியங்கள் தேவைப்படுகின்றன. பெரும்பாலான குற்றவாளிகள் குற்றம் செய்யும் போது மிக உஷாராக நேரடி சாட்சியம் ஏதும் இல்லாமல் பார்த்துக் கொண்டு செய்வார்கள். அதன் காரணமாக நீதி மன்றங்கள் பல நேரங்களில் சந்தர்ப்பசாட்சியங்களை ஏற்று முடிவுஎடுக்க வேண்டிய சூழ் நிலையில் உள்ளன. உதாரணம் குற்றம் நடந்த சமயத்தில் பிரதிவாதியின் குற்றம் சாட்டப்பட்டவர் நடத்தை ஏற்கனவே சொன்ன மாதிரி சந்தர்ப்ப சாட்சியம் சில செயல்கள் நடந்துள்ளதைக் குறிக்கிறது ஆனால் அதான் அந்த சந்தர்ப்பத்தை நேரடியாக நிரூபிக்க முடியாது.

**உதாரணம் 1**

ஒரு நபர் அவரது அலுவலகத்தில் நிறைய பணம் கையாடல் செய்துள்ளதாகக் குற்றச்சாட்டு .அதனை நிரூபிக்க நேரடி சாட்சியம் டைரக்ட் எவிடென்ஸ் இல்லை. ஆனால் அந்த நபர் குற்றம் நடந்ததாக சந்தேகப்படும் கால கட்டத்தில் அதிக செலவில் ஆடம்பர பொருட்கள் வாங்கியுள்ளார். அது அவர் குற்றம்புரிந்ததற்கு சந்தர்ப்பசாட்சியமாகக்கருதப்படும். நேரடி சாட்சியம் என்னும் டைரக்ட் எவிடென்ஸ் மற்றும் சந்தர்ப்ப சாட்சியம் என்னும் இனடைரக்ட் எவிடென்ஸ் இவைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதில் சட்டம் பாரபட்சம் அல்லது வித்தியாசம் காட்டுவதில்லை.

**உதாரணம் 2**

கிருஷ்ணன் என்பவர் தன் மனைவி உஷா என்பவருக்கும் ரவி என்பவருக்கும் தொடர்பு இருப்பதாகக் குற்றம் சாட்டி மனைவியிடமிருந்து விவாஹ ரத்து பெற வழக்கு தொடர்கிறார். கிருஷ்ணன் மற்றும் அவர் மனைவி உஷா இவர்களின் படுக்கை அறையில் உள்ள ஒரு புத்தகத்தில் ரவியின் கைரேகை பதிந்துள்ளது. அதனைக் கொண்டு ரவி அந்த படுக்கை அறைக்கு வந்துள்ளதாக நினைக்க முடியும். அந்த புத்தகத்தில் இருந்த ரவியின் கைரேகை இருந்தது அவர் படுக்கை அறைக்கு வந்திருப்பார் என்பதற்கு சந்தர்ப்ப சாட்சியம்தான். ஆனால் சந்தர்ப்ப சாட்சியம் நேரடி சாட்சியம் போல் அவ்வளவு வலுவானதல்ல. அதில் தவறான தகவலைப்புரிந்து கொள்ளவும் வாய்ப்பு உண்டு.

இந்த உதாரணத்தில் உஷா அந்த புத்தகத்தை ரவிக்கு படிப்பதற்குக் கொடுத்து விட்டு பிறகு திரும்பப் பெற்றிருந்தால் அவருடைய கைரேகை அதில் பதிய வாய்ப்பு உண்டு.

**சந்தர்ப்ப சாட்சியம் நீதி மன்றத்தில் ஏற்றுக் கொள்ளப்படுமா ?**

ஒரு வழக்கில் உண்மைக்கும் சந்தர்ப்ப சாட்சியம் கூறும் அனுமானத்துக்கும் உள்ள தொடர்பு மிக பலவீனமாக இருந்து அந்த வழக்கில் எந்த வித உதவிகரமாகவும் இல்லாமல் இருந்தாலொழிய பொதுவாக சந்தர்ப்ப சாட்சியங்கள் நீதி மன்றத்தில் ஏற்றுக் கொள்ளப்படும். பல்வேறு குற்றவியல் வழக்குகளில் சந்தர்ப்ப சாட்சியங்களின் அடிப்படையில் பல தண்டனைகள் வழங்கப்பட்டுள்ளன.

உதாரணம் :- கல்லு என்பவருக்கும் உத்தரப் பிரதேசம் அரசுக்கும் இடையே நடந்த வழக்கில், குற்றம் சாட்டப்பட்டவர், இறந்தவரைத் தன் நாட்டுத் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றதாக வழக்கு நடந்தது. இறந்தவரின் படுக்கைக்கு அருகில் ஒரு

தோட்டாக் குண்டு கண்டு பிடிக்கப்பட்டது. குற்றம் சாட்டப்பட்டவர் சம்பவம் நடந்த கிராமத்தில் இருந்து 14 மைல்களுக்கு அப்பால் கைது செய்யப்பட்டார். அவர் தன் வீட்டிலிருந்து ஒரு கைத்துப்பாக்கியை எடுத்துக் கொடுத்தார், அதிலிருந்து அந்த துப்பாக்கி இருந்த இடம் அவருக்கு மட்டும் தான் தெரியும் என்பது தெரிந்தது. துப்பாக்கி போன்ற ஆயுதங்களின் நிபுணர் அந்த துப்பாக்கியிலிருந்து சுடப்பட்டுத்தான் இறந்தவர் கொல்லப் பட்டார் என்பதை நிரூபித்தார், உச்ச நீதி மன்றம் குற்றம் சாட்டப்பட்டவரை தண்டிக்கும் போது " சந்தர்ப்ப சாட்சியம் இறந்தவரின் மரணம் குற்றம் சாட்டப்பட்டவரால் தான் ஆகியுள்ளது வேறு எவராலும் அல்ல என்பதை நிலை நாட்டியுள்ளது " என்று கூறியுள்ளது.

**மற்று மொரு உச்ச நீதி மன்ற வழக்கு**

சந்தர்ப்ப சாட்சியம் தண்டனை கொடுப்பதற்கு க் காரணமாக இருக்கலாம், ஒரு வழக்கில் தீர்ப்பு கூறுகையில் உச்ச நீதி மன்றம், பல வழக்குகளில் நேரடி சாட்சியங்கள் போதுமானதாக இல்லை என்றால் சந்தர்ப்ப சாட்சியங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன என்று கூறியுள்ளது.

ரூப் தேவி கொலை வழக்கின் மேல் முறையீட்டில் நீதியரசர்கள். மு.கூ.தாமஸ்மற்றும் சு.ஞ.சேதி அடங்கிய உச்ச நீதி மன்ற ஆயம்,, " குற்றம் சாட்டப்பட்டவரின் குற்றத்தைப் பற்றி எந்த வித ஐயத்துக்கும் இடம் இல்லாத முழுமையான சந்தர்ப்ப சாட்சியத்தை அரசு தரப்பு அளித்தால் அதன் அடிப்படையில் விசாரணை நீதிமன்றம் குற்றம் சாட்டப்பட்டவரை தண்டிக்கலாம் எனக் கூறியுள்ளது.

ரூப் தேவிக்கு ஷ்யாம் மோகன் என்பவருடன் 1973 ல் ஜூன் மாதத்தில் திருமணம் ஆனது. ரூப் தேவி 1977 மார்ச் 18 அன்று அவரது தந்தைக்கு ஒரு கடிதம் எழுதி இருக்கிறார். அந்த கடிதம் கிடைத்தவுடன் அவர் தந்தை ரூப் தேவியை பார்க்கச் சென்றுள்ளார். அப்போது அவருடைய மாப்பிள்ளையின் அண்ணன் ஹரி மோகன் என்பவர் ரூப் தேவி காலரா நோயால் 3 நாட்களுக்கு முன்னால் இறந்து விட்டதாக்க் கூறியுள்ளார்.

அதில் ஐயம் கொண்ட ரூப் தேவியின் தந்தை 1997 மார்ச் 20 ஆம் தேதி போலீஸில் புகார் கொடுத்துள்ளார். அதன் பிறகு 2 நாட்கள் கழித்து ரூப் தேவியின் உடல் துப்பாக்கி குண்டு காயத்துடன் ஒரு சாக்கு மூட்டையில் கண்டு பிடிக்கப்பட்டது. விசாரணை நீதி மன்றம் ஹரி மோஹன் மீது கொலைக் குற்றம் சாட்டி ஆயுள் தண்டனை வழங்கியது.

உயர் நீதி மன்றம் மேல் முறையீட்டில் அந்த ஹரி மோஹனை விடுதலை செய்தது. அந்த தீர்ப்பை எதிர்த்து உத்தரப்பிரதேச அரசு உச்ச நீதி மன்றத்தில் மேல் முறையீடு செய்தது.

இறந்துபோன பெண் ரூப் தேவிக்கும் அவரது மாமனார் மாமியாருக்கும் இடையே வரதட்சணை விஷயத்தால் நல்ல உறவு முறை இல்லாதிருந்தது, இறந்து போனவர் தன் தந்தைக்கு எழுதிய கடிதத்தில் தான் தன்னுடைய மாமனார்/ மாமியாரால் கொல்லப்பட்டு விடுவோமோ என்ற அச்சத்தைத் தெரிவித்து இருந்தது, அவருடைய உடலில் இருந்த துப்பாக்கி குண்டு காயம், மற்றும் குற்றவாளி வசம் இருந்த உரிமம் பெறப்பட்ட துப்பாக்கி ஆகிய அம்சங்களைக் கருத்தில் கொண்ட உச்ச நீதி விசாரணை நீதி மன்றத்தின் தீர்ப்பை உறுதி செய்தது.

இந்திய சாட்சியங்கள் சட்டம், மற்றும் சி.ப்.ஐ.நிக்.இன், லான்.காம், லெக்ட்லா.காம் மற்றும் லீகல் இந்தியா. காம் போன்ற இணைய தளங்களிலிருந்து தொகுத்து வழங் கியவர் மேலையூர் ச.அன்பழகன், துரைப்பாக்கம், சென்னை 97. போன் 98413 73184



## இரங்கல் செய்தி

தமிழ்நாடு கார்காத்தார் சங்க கூட்டமைப்பின் மாநில தலைவர் திரு. K. இராஜசுந்தரம் @ KKR சுரேஷ் அவர்களின் துணைவியார் திருமதி. **ஆனந்தி** அவர்கள் 19–12–2025 வெள்ளிக்கிழமை இரவு உடல்நல குறைவினால் இயற்கை எய்தினார்கள். அன்னாரது மறைவினால்வாடும்தலைவர்மற்றும்குடும்பத்தினர்அனைவருக்கும் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்து கொள்கிறோம்.

– கார்காத்தார் ஒப்புரவு
மற்றும் சென்னை கார்காத்தார் சங்கம்.

## சங்கப்பலகை

இடம் : திருமதி. மீராவின் கோடம்பாக்கம் இல்லம்.

பங்கு பெறுவோர் :மீரா, ஆண்டாள், சித்ரா, கௌரி, வசுமதி, பிரியா, மீனா, தீபிகா, கோமதி.

மீரா : வாங்க! வாங்க! உட்காருங்க! தர்பூசணி ஜூஸ் கொண்டு வரேன். குடித்த பின் அரட்டையை ஆரம்பிப்போம்.

ஆண்டாள் : நாங்க வீட்டைச் சுத்திப் பாத்துட்டு வந்து குடிக்கிறோம். தனி வீடா நல்லா இருக்கு! நந்தனம் வீட்டை விட இது பெரிசா தெரியுதுப்பா!

மீரா : பிரியாவுக்கு வீடு நல்லா தெரியும். அவ சுத்திக்காட்டுவா!

கௌரி : தர்பூசணி சாறு ரொம்ப டேஸ்டா இருக்கு!

ஆண்டாள் : எவ்வளவு சீக்கிரமா நாட்கள் ஓடிடுச்சு! இப்பத்தான் நாம தை அமாவாசை, தைப்பூசம், பொங்கல் பண்டிகை குறித்து பேசினால் போல உள்ளது. ஞாபகம் இருக்கா? திருநாங்கூர் கருடசேவை பற்றி பேசினதும், கிராமத்துப் பொங்கல் பற்றி பேசியதும்.

சித்ரா : நல்லா ஞாபகம் இருக்கு! அதனால நாம நேரடியா நம்ம செய்திகளுக்குப் போயிடலாம். சென்னைக்கு வரும் என்று பயமுறுத்திய இந்த டிட்வா புயல் இலங்கையைப் புரட்டி போட்டதுடன், நம் மாநிலத்தின் தென் மாவட்டங்களில் இடைவிடா பெரு மழையையும் கொண்டு வந்துவிட்டது.

கௌரி : ஆமாம்! எவ்வளவு உயிர் சேதம்; பொருள் சேதம்? பல பேர் வீடுகள் இழந்து தவிக்கின்றனர். பல நாடுகள் இலங்கைக்கு உதவிகளை உடனே அனுப்பி சீர்படுத்தியிருப்பது மனித நேயத்தைக் காட்டுகிறது.

வசுமதி : கடந்த நவம்பர் 2–ஆம் தேதி காமராஜர் அரங்கில் ராமானுஜர், தென்னாச்சாரியார் சம்பிரதாய சபை துவக்க விழா நடந்தது. வைணவ ஆச்சாரியார் ராமானுஜர் வானமாமலை, திருக்கோஷ்டியூர் நம்பி, திருக்கோவிலூர், ஆழ்வார் திருநகரி பிள்ளான், தொட்டாசாரி, எம்பார், ஆளவந்தார் உள்ளிட்ட 74 பீடங்களைநியமித்தார். அந்த வம்சத்தில் பல பீடங்களில் ஜீயராகவும், பல பீடங்களில் ஆச்சாரியார்களாகவும் உள்ளனர். இவைகளை ஒருங்கிணைக்கும் முயற்சியாக இச்சபை தொடங்கப்பட்டுள்ளது. சைவத்துக்கு என தருமபுரம், திருப்பனந்தாள், திருவாவடுதுறை, மதுரை என மடங்கள் இருப்பது போல வைணவத்திற்காக இச்சபை ஏற்பட்டுள்ளது.

ஆண்டாள் : நீ ஆரம்பிச்சுட்டே! மார்கழி மாதமாக இருப்பதால் நான் ஒரு பெருமாள் கோவிலைப் பற்றி கூறுகிறேன். 108 திவ்ய தேசங்களில் ஒன்றான தேரழுந்தூர் ஆமருவியப்பன் கோவில் தான் நான் கூறப்போவது. குடந்தை மயிலாடுதுறை சாலையில் கோமல் முக்கூட்டில் இடது புறம் திரும்பினால் இவ்வூர் வரும். இந்த கோவில் கரிகால் சோழனால் கட்டப்பட்டது. சங்க இலக்கியத்தில் இக்கோவில் குறித்து வருவதால், இதன் பழமையை நாம் அறிந்து கொள்ளலாம். ஒரு முறை சொக்கட்டான் ஆடிய போது நேர்ந்த சிறு தவற்றினால், கோபமுற்ற சிவன், உமையைப் பசுவாக பூலோகத்தில் பிறக்க சாபமிட்டார். உமையம்மை பசுவாகவும், அவளுடன் திருமகளும், கலைமகளும் பசுக்களாக மாற, விநாயகர் கன்றாக மாறி பூலோகம் வந்தனர். இடையனாக விஷ்ணு அவர்களைப் பாதுகாக்க பூலோகம் வந்ததாக ஐதீகம். இவ்வூரைச் சுற்றியுள்ள ஊர்களில் பசுக்கள் மேயும் காலத்தில், பெருமாள் ஆமருவியப்பனாக இத்தலத்தில் எழுந்தருளியுள்ளார். தலப்புராணத்தை உறுதிப்படுத்தும் விதமாக அருகிலுள்ள வேதபுரீசுவரர் திருக்கோவிலில் சொக்கட்டான் மண்டபம் உள்ளது. மூலவர் தேவாதிராஜன்; நின்ற திருக்கோலம். தாயார் செங்கமலவல்லி; தீர்த்தம் தர்சன புஷ்கரணி. விமானம் கருட விமானம்; கருடாழ்வார் அளித்தது. 5 நிலைகளைக் கொண்ட கோவிலில், ஆமருவியப்பன் 14 அடி உயரத்தில் காட்சியளிக்கிறார். கருவறை உள்ளேயே தாயாரும், கருடாழ்வாரும் உள்ளதுடன் ஆநிரைகளும், முனிவர்களும் உள்ளனர். பிரகாரத்தில் அகத்தியர், யோக நரசிம்மர், விஷ்வக்சேனர், இராமர், அனுமன், ஆழ்வார்கள் சந்நிதிகள் உள்ளன.

சித்ரா : அக்கா எங்களுக்கு மாசி புனர்பூசம் அன்று ஆமருவியப்பனும், வேதபுரீசுவரரும் சந்திக்கும் உற்சவம் காணும் பேறு கிடைத்தது. திருமால் பசுவடிவில் இருக்கும் அம்பிகையை ஈசனிடம் ஒப்படைக்கும் கோலம் காணலாம்.

வசுமதி : எங்க அம்மா சொல்லிக் கேட்டிருக்கேன். 60, 70 களில் கம்பர் விழா மிகச் சிறப்பாக கொண்டாடப்படும் என்றும், அந்த கோவில் புளியோதரையின் ருசி மிகவும் அற்புதமாக இருக்குமென்றும் கூறி இருக்கிறார்கள்.

மீனா : பிளாஸ்டிக்கை உண்ணும் அதிசயப்புழுவைக் கண்டுபிடித்துள்ளனர். நெகிழிகளால் ஏற்படும் தொல்லையைச் சீர் செய்வது எப்படி என ஆராயும் போது, 'கிரேட்டர் வாக்ஸ்மோத்' எனப்படும் ஓர் அந்துப்பூச்சியின் புழுவுக்கு ஒரு அதிசய ஆற்றல்

இருப்பதை விஞ்ஞானிகள் கண்டறிந்தனர். குறைந்த அடர்த்தி உடைய பாலீதீன்களை 2000 புழுக்கள் 24 மணி நேரத்தில் சாப்பிட்டு விடும். கனடாவில் உள்ள பிராண்டன் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் பிளாஸ்டிக்கை உண்ணும் போது, அவைகளின் ஆரோக்கியம் எவ்வாறு பாதிக்கப்படுகிறது என்பதை ஆராய்ந்ததில், கொழுப்பாக சேமிக்கப்பட்டு, அவை விரைவில் இறந்து விடுகின்றன. என அறிந்தனர். எனவே அவற்றின் வாழ்நாளை நீட்டிக்க முடிந்தால், இப்புழுக்களை வைத்து பெரிய அளவில் நுண்நெகிழிகளை அழிக்க இயலும். மேலும் விஞ்ஞானிகள் இப்புழுக்களை மீன்களுக்கும் உணவாகத் தரலாமென்கின்றனர்.

தீபிகா : கூடிய விரைவில் புழுக்களின் வாழ்நாளை நீட்டிப்பதைக் கண்டறிந்தால் நல்ல பலன் கிடைக்கும். Anyway a long way to go. தென்துருவமான அண்டார்டிகாவில் இந்தியாவின் மூன்று ஆய்வு மையங்கள் உள்ளன. தற்போது 'மைத்ரி2' அதி நவீன ஆய்வுத் தளத்தை கிழக்கு அண்டார்டிகாவில் தேசிய துருவ மற்றும் பெருங்கடல் ஆராய்ச்சி மையம் (NCPOR) ஜனவரி 29–க்குள் 2000 கோடி ரூபாய் முதலீட்டில் அமைக்க உள்ளது. கோடையில் சூரிய ஒளி மூலமும், ஆண்டு முழுதும் காற்றாலை மூலமும் மின்சாரத்தை இந்நிலையம் பெறும். ஆய்வாளர்கள் இருக்க இயலாத மாதங்களில், தட்பவெப்ப தரவுகளைத் தொடர்ந்து அனுப்பும் தானியங்கி கருவிகளும் நிறுவப்படும். தேவையான அனைத்து கருவிகளும் தென் ஆப்ரிக்கா வழியாக கப்பலில் அனுப்பப்படுவதுடன், குளிர்காலத்தில் பனி போர்த்திய தரையில் இழுத்துச் செல்லப்படும். கட்டுமானப் பணிகள் அண்டார்டிகாவின் கோடைக்காலமான அக்டோபர் முதல் மார்ச் வரை நடைபெறும்.

கௌரி : இதை எல்லாம் அறியும் போது நமது தேசம் விஞ்ஞானத்தில் முன்னேறுவது சந்தோஷமா இருக்கு.

சித்ரா : இந்தியர்கள் பாராட்டுக்குரியவர்களாக ஆகும் போது நெஜமா ரொம்ப சந்தோஷமா இருக்கு. இஸ்ரேலில் பாலைவனத்தைச் சோலைவனமாக்கியவர் மத்திய அரசின் வெளிநாடு வாழ் இந்தியர்களுக்கான உயரிய 'பிரவாசி பாரதிய சம்மான்' விருதை வென்ற 95 வயதான எலியாகு பெசலேல் என்பவர். அவர் சமீபத்தில் உடல் நலக் குறைவினால் காலமானார். கேரள மாநிலத்தைச் சேர்ந்த இவர் 1955–ல் இஸ்ரேலுக்குப் புலம் பெயர்ந்து, ஆடு மேய்க்கும் வேலையில் ஈடுபட்டிருந்த போது, 'நெகேவ்' என்ற பாலைவனப்பகுதியில் பயிரிடத் தொடங்கி, இஸ்ரேலை உலகின் இரண்டாவது பெரிய ரோஜா ஏற்றுமதியாளராக உயர்த்தினார். இஸ்ரேலின் முதல் நவீன Green House எனும் பசுமைப் பண்ணையை நிறுவியவரும் இவரே. இந்தியா மீது பற்றுக்கொண்டிருந்த இவர் 'என் தாய்நாடு, என் தந்தை நாடு' என்ற தலைப்பில் ஒரு நூல் ஒன்றையும் எழுதியுள்ளார்.

கௌரி : சவுதி அரேபிய பாலைவனம் குறித்து படித்ததைச் சொல்றேன். ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த க்ரிபித் பல்கலைக்கழகம் சவுதி அரேபிய பாலைவனத்தில் 12,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட 170 பாறை ஓவியங்களைக் கண்டறிந்துள்ளது.

முற்காலத்தில் இங்கே மனிதர்கள் வாழ்ந்தனர் என்பது அதன் மூலம் தெரிய வந்துள்ளது.

கோமதி :பாக் ஆக்கிரமிப்பு காஷ்மீருக்கென தனி சட்டசபை உள்ளது. இதன் பிரதமராக இருந்த பாகிஸ்தான் மக்கள் கட்சியின் காசிம் மஜீத் என்பவருக்கு எதிராக நம்பிக்கை இல்லாத் தீர்மானம் நிறைவேறியதால், 4 ஆவது பிரதமராக அதாவது புதிய பிரதமராக பைசல் முஸ்தாஜ் ரத்தோர் தேர்ந்தெடுக்கப்பட்டு, பதவியேற்றுள்ளார். பாரதத்தில் அமைதி நிலவ ஒத்துழைக்க, இறைவனை வேண்டுவோம்.

பிரியா : மனிதன் சுமக்கும் 5 வகை வெடிகுண்டுகளாவது மன உளைச்சல், மனவேதனை, உயர்ந்த ரத்த அழுத்தம், அதிக கொலஸ்ட்ரால், சர்க்கரை நோய் என மருத்துவர் எஸ் அர்த்தநாரி கூறியுள்ளார். எதிர்மறை சிந்தனை, மன அழுத்தம் ஆகியவை ஆஸ்துமாவை அதிகரிக்கும் என்று இத்தாலிய பல்கலைக்கழகம் மேற்கொண்ட ஆய்வில் தெரிவ வந்துள்ளது.

மீரா : இதிலேந்து என்ன தெரியுது ? எந்த கவலையையும் மனதில் தேக்கி வைத்துக்கொள்ளக்கூடாது. 'இதுவும் கடந்து போகும்' என்ற மொழியை நினைவில் வைத்து வாழவேண்டும். அவர்களெல்லாம் கண்டு பிடித்தது இருக்கட்டும். காற்று மாசுக்கு என்ன விடிவுகாலம் ? சென்னையில் ஓரளவுக்கு குறைவாக உள்ளது. டெல்லியில் சுத்த மோசம். டெல்லியில் இருக்கும் என் மகளுக்கு எப்போதும் சுவாசக் கோளாறு தான். இங்கு வந்தால் இருமல் போன்றவை இருக்காது. அங்கு போனால் உடனே வந்து விடும்.

பிரியா : காற்றில் உள்ள பி.எம்.25 அளவுள்ள நுண்துகள்களால் ஏற்படும் நுரையீரல் வீக்கம்

மற்றும் செல் சிதைவை வைட்டமின் 'சி' கணிசமாக குறைப்பதாக கண்டறிந்துள்ளனர். இந்த எளிய ஆண்டி ஆக்ஸிடன்ட் காற்று மாசு நிறைந்த சூழலில் வசிப்பவர்களுக்கு ஒரு மலிவான பாதுகாப்பு கவசமாக இருக்கும். மீரா அக்கா உங்கள் மகளை வைட்டமின் 'சி' எடுத்துக் கொள்ள சொல்லுங்கள்.

கோமதி :கார்காத்தார் ஒப்புரவில் லலிதா என்பவர் எழுதும் கட்டுரையைப் படிக்கிறீர்களா ? ரொம்ப நல்லா இருக்கு. அதுவும் போன மாதம் ஞானி ஞானேஷ்வர் பற்றி எழுதி இருக்காங்க! நீங்க வாங்கறதுல்லைன்னா கார்காத்தார் ஒப்புரவு Subscribe பண்ணி, கட்டுரைகளைப் படிச்சுப் பாருங்க; நல்லா இருக்குப்பா !

மீரா : நிறைய பேசிட்டோம். இருங்க பைன் ஆப்பிள் கேசரியும், மசால் வடையும் கொண்டு வரேன். அது சரி! அடுத்த மாதம் யார் வீட்டில் சந்திப்பு ? Decide பண்ணுங்க !

தீபிகா : எங்கள் வீட்டில் வைத்துக்கொள்ளலாம். எங்கள் வீடு இந்திரா நகரில் உள்ளது. Address -ம் Location Map-ம் அனுப்பி வைக்கிறேன்.

தோழிகள் அனைவரும் சிற்றுண்டியும், காபியும் குடித்து விடைபெறுகின்றனர்.

நன்றி ! வணக்கம் !

---

## ஊட்டுவதும்... ஊட்டத்தார்...

ஆலய வழிபாடு வாழ்க்கையில் மிகவும் சால சிறந்தது. ஆலய வழிபாட்டில் மிக சிறந்த வகையில் தேவார பாடல் பெற்ற ஆலய வழிபாடு ராசிக்கான ஆலய வழிபாடு. நால்வர்கள் தேவார பாடிய ஆலய வழிபாடு மூவர் பாடிய ஆலய வழிபாடு கூடுதலாக 276 தேவார பாடல் பெற்ற தலத்தினையும்...

ஏழு வகையான ஆலக் கோவில், கொகுடிக் கோவில், மணிக்கோவில், பெருங் கோவில், ஞாழற் கோவில், இளங் கோவில், கரகக் கோவில் ஆகிய தல வழிபாடு செய்தலும், சப்த விட தலங்கள், பின் பஞ்ச சபைகள் தல விருட்ச கோவில்கள் நம் பிறவியில் ஆலய வழிபாடு செய்தால்...

தீராத நோய்களும் நிவர்த்தியாகும். மனித பிறப்பில் நோயற்ற வாழ்வே சிறந்த வாழ்வு, என்பதுபோல, வைப்பு தலம் வழிபாடு செய்தால் நோய் இல்லா வாழ்வளிக்கும். இறைவன் வைப்பு தலம் என்பது என்ன ஒரு தலத்தில் இறைவனை பற்றி பாடும் போது...

அதே பாடலில் வேறொரு தலத்தில் இருக்கும் இறைவனை நினைத்து சேர்த்து பாடும் மரபு உண்டு. அத் தலமே வைப்புத்தலம் 255 வைப்புத் தலங்கள் வரலாற்று சான்று தெரிவிக்கப்படுகிறது. இதில் திருத்தாண்டகம் அப்பர் பாடியதில். சிறு நீரக கோளாறு நோய் குணமாக்க கூடிய திருத்தலம்.

திரு ஊட்டத்தூர் 6–ஆம் திருமுறையில் திரு சேஷத்திரக் கோவையில் பாடிய வைப்புத் தலமாக அமைகின்றது. ராஜ கோபுரம் பார்க்கும் போது நம்மை வியப்பில் மிரள்கிறது நம் மனம் அப்பர் சுவாமிகள் நன்கு உணர்ந்து பாடிய விதம் வியப்பில் சுவேத ரத்தின கிரீஸ்வரர் சுவாமி....

இறைவன் பார்வையில் கிணறு போன்ற சுனை இதுவே பிரம்ம தீர்த்தம். இவ் தீர்த்தமே நம் சிறு நீரக கோளாறு தீர்க்கும் தீர்த்தம். இறைவனை நினைத்து இவ் தீர்த்தம் அருந்தினால் நோய் குணமாகும் என்பது பயன் பெற்றவர்கள் கூறுகிறார்கள். இறைவன் பார்வையில் இவ் தீர்த்தம் அமைந்திருப்பது,

மிகவும் வியப்புதான். இவ் ஆலயம் சென்று வழிபடும் போது உணரலாம். உள் பிரகாரம் வலம் வரும் போது ஸ்ரீ சிவகாம சுந்தரி உடன் ஸ்ரீமத் ஆனந்த நடராஜர் சுவாமி கல் மூலவர் தரிசிக்கும் பேறு கிடைக்கும் இதை விட பேரின்பம் இல்லை என்று சிந்திக்க தோன்றும்...

நமக்காக எங்கோ ஒரு தலத்தில் மற்றொரு தலத்தில் அன்றே உணர்ந்து பாடிய அப்பர் சுவாமிகளை வழிபாடு செய்து.... பாடிய திருத்தாண்டகம் நம் செவியில் பாடுவது போல் உணரலாம். உணர்ந்தால் நோயற்ற வாழ்வே சிறப்பானது.

துறையூர் சோற்றுத்துறை
சூலமங்கை தோணிபுரம்
துருத்தி சோமீச்சரம்
உறையூர் கடலொற்றியூர்
ஊற்றத்தூர்.

கயிலை நாதனை காணலாமே என்கிறார் அப்பர். ஆகையால்...

ஊற்றத்தூர் செல்லுங்கள் இறைவன்
தரும் திருநீறு பூசுங்கள்
இறைவன் பார்வையால் பிரம்ம
தீர்த்தம் அருந்துங்கள் மனம் உணரும்
திரு நீறும், திருநீர் (தீர்த்தம்)
தருபவர் இறைவன்... சிவாய நம.

– வேளா. சுவாமிநாதன், ஆச்சாள்புரம்.
9751730940

## மோட்டார் வாகன எரிவாயு / பெட்ரோல் வரலாறு.

1859–ஆம் ஆண்டு பென்சில்வேனியா – அமெரிக்காவில் முதல் கச்சா எண்ணெய் கிணறு துளையிடப்பட்டது. உலகில் இரண்டாவது கச்சா எண்ணெய் கிணறு இந்தியாவில் 1860–ம் ஆண்டு அஸ்ஸாம் மாநிலத்தில் அஸ்ஸாம் ரயில்வே & வாணிப கழகத்தினால் துளையிடப்பட்டது.

1890–ல் 'மார்க்ரீட்டா' (அஸ்ஸாம்) என்ற இடத்தில் சிறிய அளவில் கச்சா எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் 1901–ம் ஆண்டு "டிக்பாய்" என்ற இடத்தில் முழுமையான சுத்திகரிப்பு நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. "டிக்பாய்" கச்சா எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை ஆரம்பித்து 125 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டது. இந்தியா சுதந்திரம் அடைந்த பின் "எண்ணெய் மற்றும் எரிவாயு வாணிப கழகம் "ஆயில் இந்தியா லிமிடெட்" "எரிவாயு ஆணையம்" என பல அரசு நிறுவனங்கள் ஆரம்பிக்கப்பட்டு இந்த துறை பெரும் வளர்ச்சி அடைய ஆரம்பித்தது. தமிழ்நாட்டில் சென்னை மணலி சென்னை பெட்ரோலியம் கம்பெனி, நாகை நரிமணம் சுத்திகரிப்பு நிலையம், கொச்சின், விசாகப்பட்டிணம், மங்களூர், மும்பை, ஹால்டியா, படின்டா பஞ்சாப், ஜாம்நகர் – குஜராத் ரிலையன்ஸ், எஸ்ஸார், பர்மா ஷெல் என பல கச்சா எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள் அரசு மற்றும் தனியார் நிறுவனங்களால் ஆரம்பிக்கப்பட்டு, தற்போது பெரிய அளவில் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. எஸ்ஸார் – H.P.L. ஆகவும், பர்மா ஷெல் – B.P.C.L. ஆகவும் அரசுடமையாக்கப்பட்டது. கடலூர் நாகர்ஜுனா சுத்திகரிப்பு நிலையம் ஆரம்பித்து இன்னும் முடிவடைய வில்லை. அரசு நிறுவனமான O.N.G.C. தமிழ் நாட்டில் காவிரிப்படுகையில் திருவாரூர், நாகை மாவட்டங்களில் ஆழ்துளை கிணறுகளை துளையிட்டு கச்சா எண்ணெய் எடுக்க ஆரம்பித்தது. மும்பை, குஜராத் கடல் சார்ந்த பகுதிகளில் நடுக்கடலில் எண்ணெய் வளம் கண்டு அறிந்து கச்சா எண்ணெய் எடுத்து நடுக்கடலிலேயே எரிவாயு / எண்ணெய் என தனித்தனியாக பிரித்து எடுக்கும் 100 பேர் தங்கி பணிபுரியும் மேடைகள் அமைத்து 365 நாட்கள் 24 மணி நேரமும் தொழில் நுட்ப வல்லுனர்கள் கச்சா எண்ணெய் கரையில் உள்ள சுத்திகரிப்பு நிலையம் மற்றும் மில்லியன் டன் எடை தாங்கும் கப்பல்களில் எண்ணெய் ஏற்றி அனுப்பி வைக்கின்றனர். அயல்நாடுகளிலிருந்து கொண்டு வரப்படும் கச்சாஎண்ணெய் கப்பல்களிலிருந்து சுத்திகரிப்பு நிலையங்களுக்கு கடல் அடியில் புதைக்கப்பட்டு உள்ள குழாய் மூலம் அனுப்பி வைக்கப்படுகின்றன. கத்தார் நாட்டிலிருந்து வரும் திரவ நிலை நாப்தா எரிவாயு கப்பல் நடுக்கடலில் நிறுத்தப்பட்டு மிதவை மேல் இணைப்பில் இணைத்து கடல் அடியில் உள்ள குழாய் மூலம் திருக்கடையூர் பிள்ளை பெருமாள் நல்லூர் மின் நிலையத்திற்கு கொண்டு வரப்பட்டு மின் உற்பத்தி செய்யப்படுகிறது.

மேல் சொன்ன சுத்திகரிப்பு நிலையங்கள் சமையல் எரிவாயு, கெரோசின், டீசல், பெட்ரோல், விமான டர்பைன் எரிபொருள், மெழுகு, கிரீஸ் போன்றவை மட்டும் அல்லாமல் நோய் தீர்க்கும் மருந்து தயாரிக்கும் மூல பொருட்கள், பெயின்ட் தயாரிக்கும் மூலபொருட்கள், பாலிமர் கெமிக்கல்ஸ், சன்மைக்கா ஒட்டும் பிசின், பெவிகால்/பெவிபாண்ட்/குவிக் பிக்ஸ் மூல பொருட்கள் கட்டுமானத் துறைக்கு நீர் கசிவைத் தடுக்கும் பாலிமர் ரசாயன கலவைகள், பிளாஸ்டிக் சேர், பாலிமர் தரை விரிப்புகள், நைலான் பாலிமர் மழை நீர் தடுப்பு விரிப்புகள், சாலை பணிக்கு தேவைப்படும் தார் போன்ற 150 துணை பொருட்கள் கச்சா எண்ணெய் சுத்திகரிப்பிலிருந்து கிடைக்கிறது. கச்சா எண்ணெய் இல்லையெனில் நமது நாட்டின் பொருளாதார முன்னேற்றமே இல்லை எனலாம். இத்தகைய வளமான சுத்திகரிப்பு நிலையம் / நடுக்கடல் துளையிடும்/ எண்ணெய் பிரித்து எடுக்கும் மேடைகளில் பணி புரிய நம் கார்குல இளைய தலைமுறை முன் வரவேண்டும். நல்ல மேல்நிலையான வருமானம், வசதிகள் மற்ற துறைகளை விட அதிகமான நிலையில் உள்ளது.

கார்குலம் இந்த துறையில் கவனம் செலுத்த வேண்டும்.

– சீ. திருஞானம்.
9500459461

## வாழ்த்துகிறோம்

சீர்காழி தாலுக்கா, திரிபுரசுந்தரி நகர் திரு. G. அமுதன் பிள்ளை – சாந்தி இவர்களின் புதல்வி A. சுவாதி (எ) விஷ்ணு பிரியா B.Com MBA CAக்கும் சீர்காழி தாலுக்கா திரு. S. சௌந்தரராஜன் பிள்ளை – ரேவதி இவர்களின் புதல்வன் S. சுதர்சனன் B.E. க்கும் 30–11–25, ஏஞ்சல் பேலஸ் A/c மஹாலில் நடந்த திருமணத்தில் சீர்காழி சங்கம் சார்பாக மணமக்களுக்கு சந்தனமாலை அணிவித்து வாழ்த்து மடல் வழங்கப்பட்டது.



# சிறுவர் பகுதி



தயாரிப்பு **தஞ்சை தியாகு**
அலைபேசி: 94437 00375
Email: thiagu1943@gmail.com

அகந்தை உறவுகளை முறிக்கும். அன்பு உறவுகளை வளர்க்கும்.

**தேசியக் கொடி கூறுவதென்ன?**



காவிநிறம் பற்றற்ற நிலை அல்லது துறவு நிலையைக் குறிக்கும். நம் தலைவர்கள் அரசியலில் பொருள் சேர்க்கும் நோக்கமின்றி பணிக்காகத் தங்களை அர்ப்பணித்துக்கொள்ள வேண்டும். வெள்ளைநிறம் உண்மையைக் குறிக்கும். இது நம் நடத்தைக்கு வழிகாட்டும் வாய்மை பாதை, பச்சை நிறம் மாநிலத்தில் நமக்குள்ள தொடர்பைக் குறிக்கும். தாவரங்களுக்கும் உயிரினங்களுக்கும் உள்ள தொடர்பைக் குறிக்கும். நம்நாட்டின் வளத்தைக் குறிக்கும். கொடியின் நடுவே உள்ள அசோகச்சக்கரம் தர்மசக்கரம். இக்கொடியின் கீழ் பணியாற்றும் அனைவரும் அறநெறியில் இயங்கவேண்டும். சக்கரம் இயக்கத்தைக் குறிக்கிறது; முன்னேற வேண்டும் என்ற ஆற்றலை இச்சக்கரம் பிரதிபலிக்கிறது. கடவுளுக்கு ஒப்பாக தர்மத்தின் சின்னமாக விளங்கும் சக்கரவடிவிலான அசோகச்சக்கரத்தை நாம் நமது கொடியில் ஏற்றுள்ளோம்.

– டாக்டர்.இராதாகிருஷ்ணன் உரை

**நமது தேசிய கீதம்**

(மகாகவி இரவீந்திரநாத் தாகூர்)

ஜனகண மன அதி நாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல வங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுபநாமே ஜாகே
தவசுப ஆஷிஸ மாகே
காயே தவ ஜயகாதா
ஜனகண மங்கள தாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா
ஜயஹே ஜயஹே ஜயஹே
ஜய ஜய ஜயஹே!

**தேசிய கீதம் பொருள்**

இந்தியத்தாயே! மக்களின் இன்ப துன்பங்களைக் கணிக்கிற நீயே எல்லாருடைய மனதிலும் ஆட்சி செய்கிறாய்.

நின் திருப்பெயர் பஞ்சாபையும், சிந்துவையும், கூர்ஜரத்தையும், மராட்டியத்தையும், திராவிடத்தையும், ஒடிசாவையும், வங்காளத்தையும் உள்ளக் கிளர்ச்சி அடையச் செய்கிறது.

நின் திருப்பெயர் விந்திய இமயமலைத் தொடர்களில் எதிரொலிக்கிறது; யமுனை, கங்கை ஆறுகளின் இன்னொலியில் ஒன்றுகிறது. இந்திய கடலலைகளால் வணங்கப்படுகிறது. அவை நின்னருளை வேண்டுகின்றன.

நின்புகழைப் பரப்புகின்றன. இந்தியாவின் இன்ப துன்பங்களைக் கணிக்கிற தாயே! உனக்கு வெற்றி! வெற்றி! வெற்றி!

**கணிதப் புதிர்**

1. A, B, C ஆகிய எங்களுக்கு சில குழந்தைகள் உள்ளன. Aயின் குழந்தைகளில் பெண்ணைப்போல ஆண் இரு மடங்கு. Bக்கு பெண்ணைப்போல 3 மடங்கு ஆண்குழந்தைகள். Cக்கு பெண் குழந்தைகளைவிட 3 ஆண் குழந்தைகள் அதிகம். எங்கள் மூவருக்கும் உள்ள குழந்தைகள் 25க்கும் குறைவு. இந்த விபரங்களைக் கூறுவது யார்? ஒவ்வொருவருக்கும் எத்தனைக் குழந்தைகள்?
2. ஜப்பான் நாட்டின் நாணயம் யென். கிரீஸ், ஸ்பெயின், ஸ்வீடன் ஆகிய நாடுகளின் நாணயம் என்ன?
3. 4,8,12,16,18 ஆகிய ஐந்து எண்களாலும் மிச்சமின்றி வகுபடக்கூடிய ஓர் எண்ணைக் கூறமுடியுமா?
4. மூன்று எண்கள் உள்ளன. இவற்றுள் முதல் எண், இரண்டாவதைப்போல் இரு மடங்கு. மூன்று எண்களின் சராசரி 100. அந்த மூன்று எண்களும் எவை?

## விடுகதைகள்



1. ஒட்டி வளர்ந்தாலும் அவனை வெட்டி எறிவோம்.அவன்யார் ?
2. ஓராண்டு உயிர் வாழ்வான்.ஒயிலாகக் காட்சி தருவான்.அவன் யார் ?
3. ஒருவனைக் கூப்பிட்டால் ஊரையே கூட்டுவான்.அவன் யார் ?
4. வேகாத வெயிலில் வெள்ளையன் விளைகிறான்.அவன் யார் ?
5. வண்ணத்தில் சிவப்பழகன்.வாய்க்குள் செய்தி வாங்குவான்.அவன்யார் ?
6. அணில் ஏறாத கொம்பு.என்ன கொம்பு ?
7. அழுவேன்,சிரிப்பேன்,அனைத்தும் செய்வேன்.நான்யார் ?
8. அடித்தாலும் ,உதைத்தாலும் அழமாட்டான்.அவன்யார் ?
9. வீட்டிலிருப்பான் காவலாளி,வெளியில் சுற்றுவான் அவன் கூட்டாளி.இவர்கள் யார் ?
10. ஆயிரம் கதை எழுதி அகிலத்தை ஆட்டுவிப்பான்.நாக்கு வறண்டால் வீழ்ந்திடுவான். அவன் யார் ?

## சிரிக்கலாம் வாங்க!



1. கண் டாக்டர்: கண்சிகிச்சை முடிந்து கண்கட்டை கழட்டியவுடன் நோயாளியை அழைத்துக் கொண்டுபோய் வெளியில் நிறுத்தி அங்கே நிற்கிறதே கார் அதன் எண்ணைச் சொல்லுங்கள் என்றார்.

நோயாளி: முதலில் கார் எங்கே நிற்கிறது என்று சொல்லுங்கள் !அப்போதுதான் எண்ணைச் சொல்ல முடியும் என்றார். டாக்டர் நோயாளியை உள்ளே அழைத்துப் போய் விட்டார்.

2. அவசரமாய் சிகிச்சைக்காக நோயாளியை மருத்துவ மனைக்குக் கொண்டு சென்று டாக்டரிடம் காட்டியபோது ஒரு அரைமணி நேரம் முன்னதாக கொண்டுவந்திருந்தால் இவரைப் பிழைக்க வைத்திருப்பேன் என்றார் டாக்டர்.

விபத்து நடந்தே பத்து நிமிடங்கள்தானே ஆகிறது என்றார் கொண்டு வந்தவர்.

3. ஒரு நாள் தேசிய மாணவர்படையில் ஆசிரியர் ஓர் மர நிழலில் வகுப்பெடுத்துக் கொண்டிருந்தார் .அப்போது குரங்கு ஒன்று வகுப்பருகே நடந்து சென்றது.பேராசிரியர் சும்மா இருந்திருக்கலாம்.குரங்கைக் காண்பித்து எல்லாம் நியூ அட்மிஷனா ? என்றுகேட்டார்.

மாணவன் ஒருவர் உடன் எழுந்து, இல்லை ஐயா நியூ அப்பாயின்ட்மெண்ட் என்றான்.ஆசிரியர் பதில் பேசவில்லை.

## இவர்கள் சொன்னார்கள்

இருள் இருள் என்று சொல்லிக் கொண்டு சும்மா இருப்பதைவிட ஒரு சிறிய மெழுகுவர்த்தியை ஏற்ற முயற்சி செய் – கன்பூசயஸ்

வெளியே காட்டிய கோபம் மன்னிப்புக்கு வழி தேடும்.உள்ளே அடக்கிய கோபம் பழிக்கு வழி தேடும். – புல்வெர்

உலகில் ஆற்றமுடியாத செயல்கள் என்று எதுவுமில்லை.அறிவியல் துறையில் நான் ஏதாவது ஆற்றியிருக்கிறேன் என்றால் அதற்குக் காரணம் நான் ஒரு விஷயத்தில் அமைதியாக என் கவனம் முழுவதையும் பகிர்ந்ததைத்தவிர வேறு ஒன்றுமில்லை. – நியூட்டன்

தோல்வியடைவதில் தவறில்லை.அந்தத் தோல்வியிலிருந்து பாடம் ஏதுவும் கற்றுக் கொள்ளாமல் இருப்பதுதான் தவறு. – ஜான்சன்

## நன்றி கூறுங்கள்

ஒருவர் உடல்நலமில்லாமல் மருத்துவமனையில் இருந்தார். அப்போது ஓரிடத்திலேயே படுத்திருப்பது கடினமாக இருந்தது. அவரது டைரியில் இந்த ஆண்டு மிகவும் மோசமானதாக உள்ளது. 94வயது வரை வாழ்ந்த எனது தந்தை இறந்துவிட்டார். எனது மகனோ விபத்தில் அடிபட்டு மருத்துவமனையில் இருக்கிறான் என எழுதி வைத்தவர் உறங்கிவிட்டார். சிறிதுநேரத்தில்வந்த அவரது மனைவி டைரியைப்படித்துவிட்டு சில வரிகளை எழுதினார். இந்த ஆண்டு உங்களுக்கு மிக நல்ல ஆண்டு. 94வயதுவரை வாழ்ந்த உங்கள் தந்தை நோயுற்று வேதனைப்படாமல் இறந்தார். உங்கள் மகன் விபத்தில் சிக்கினாலும் கை, கால்களை இழக்காமல் காயங்களுடன் உயிர் தப்பினார். உங்களது நோயும் தற்காலிகமானதே. விரைவில் குணமாகி வீடுதிரும்புவீர்கள் என்று இறைவனுக்கு நன்றி கூறுங்கள்.

# மணமகள் / மணமகன் தேவை

| | |
|---|---|
| பெயர் | **செல்வன் N. விக்னேஷ்வரன்** |
| படிப்பு | B.E. Mechanical & Automation |
| வேலை | Senior Engineer (RFLY Innnovation - Chennai) |
| | Rs. 50,000 / PM |
| பிறந்த தேதி | 11.11.1999 |
| உயரம் | 175 cm |
| நட்சத்திரம் | மூலம் |
| கோத்திரம் | மருங்கூட |
| பூர்வீகம் | தலைக்குளம் |
| தகப்பனார் | **S. நடராஜன்,** CI ஓய்வு TNSTC |
| தாயார் | **V. சந்திரா,** வளையமாதேவி |
| முகவரி | நெ. 256, கிரஸண்ட் நகர், |
| | பள்ளிப்படை வழி, சிதம்பரம் |
| | கடலூர் மாவட்டம் - 608 001. |
| | Cell : 94428 32836 |
| விருப்பம் | Any Degree, Job or Non Job |



| | |
|---|---|
| பெயர் | **செல்வன் M. Saianand** |
| படிப்பு | B.E. Computer Science<br>M.S. Computer Science, USA |
| வேலை | Software Engineer |
| | Striim Engeenering Services Private Ltd, Guindy, Chennai |
| பிறந்த தேதி | 6-01-1996 |
| உயரம் | 172 cms |
| நட்சத்திரம் | Poonarpoosam |
| கோத்திரம் | Vichuda |
| பூர்வீகம் | தென்பாதி, காட்டுமன்னார்கோவில் |
| தகப்பனார் | **P.Mohan,** Block Development Officer (Retd.) State Government Service |
| தாயார் | **B.Rama** |
| | School Teacher (Tamil) Shri Anand Jain Vidyalaya, Tambaram |
| முகவரி | No 13 Padasalai Street, |
| | Lakshmipuram, Chromepet, |
| | Chennai 600044 |
| | Cell : 9444623775 / 94440 59747 |



| | |
|---|---|
| பெயர் | **செல்வன் N. சாய்கிருஷ்ணா** |
| படிப்பு | B.Tech., |
| வேலை | IT Sector, Bangalore |
| | Rs. 40 LPA |
| பிறந்த தேதி | 11.10.1997 |
| உயரம் | 165 cm |
| நட்சத்திரம் | அவிட்டம் |
| கோத்திரம் | பொன்னமுட |
| பூர்வீகம் | ஸ்ரீமுஷ்ணம் |
| தகப்பனார் | **B. நாராயணசாமி,** Retd. from L&T |
| தாயார் | **N. ரேவதி** (சூரியனார்கோவில்) |
| முகவரி | சப்தரிஷி தெரு, |
| | ஸ்ரீமுஷ்ணம், ஸ்ரீமுஷ்ணம் வட்டம், |
| | கடலூர் மாவட்டம் - 608 703. |
| | Cell : 98251 64037, 94931 70407 |
| | E-mail : bnswamylnt@gmail.com |
| விருப்பம் | நன்கு படித்து வேலையில் உள்ள வரன் |



| | |
|---|---|
| பெயர் | **செல்வி மா. பார்கவி** |
| படிப்பு | MBBS, M.D., |
| வேலை | தென்னிந்திய இரயில்வே |
| பிறந்த தேதி | 29.10.1996 |
| நட்சத்திரம் | ரோகிணி |
| கோத்திரம் | கொங்கராய |
| பூர்வீகம் | திருப்புன்கூர், சீர்காழி வட்டம் |
| தகப்பனார் | **வெ. மாணிக்கவேலு,** M.A., B.Ed., |
| | உதவி தொடக்க கல்வி அலுவலர் (ஓய்வு) |
| தாயார் | **சு. தேன்மொழி,** M.A., B.Ed., |
| | பட்டதாரி ஆசிரியை, அரிகரன்கூடல் |
| முகவரி | 52F, பஜனை மடம் தெற்கு தெரு, |
| | குடவாசல், திருவாரூர் Dt. - 612 601. |
| | Cell : 94881 17102, 94437 09804, |
| | 63824 42680 |
| விருப்பம் | M.B.B.S., MD., மட்டும் |



# மணமகன் தேவை

| | |
|---|---|
| பெயர் | செல்வி C.R. DHIVYA |
| படிப்பு | B.Com., M.Com |
| வேலை | TAX CONSULTANT – DELOITTE - USI |
| பிறந்த தேதி | 21/07/2000 |
| உயரம் | 169 |
| நட்சத்திரம் | Poorattathi |
| கோத்திரம் | Ponnamudaiyan |
| பூர்வீகம் | Arasur, Kudavasal, Kumbakonam |
| தகப்பனார் | CHANDRASEGAR RAMESH |
| | VP-south, Polmann India Ltd, Chennai |
| தாயார் | C.S. VASANTHI (Vanamadevi, Cuddalore) |
| முகவரி | Flat-F2, 74, Brindavan-II, Padmavathy Nagar, |
| | Mangadu, Chennai - 600 122. |
| | Cell : 9444953016 / 8144953016 (WhatsApp) |
| விருப்பம் | Chennai - Working Man |



| | |
|---|---|
| பெயர் | செல்வி M. மகேஸ்வரி |
| படிப்பு | B.E., EEE., |
| வேலை | Service Information Specialist - |
| | Caterpillar India, Chennai |
| | Rs. 80,000/PM |
| பிறந்த தேதி | 11.04.1995 |
| உயரம் | 154 cm |
| நட்சத்திரம் | மகம் |
| கோத்திரம் | தென்னவராய |
| பூர்வீகம் | நத்தம் – மயிலாடுதுறை |
| தகப்பனார் | K. மகேந்திரன், விவசாயம் |
| தாயார் | M. ஆனந்தி. இல்லத்தரசி |
| | ஆத்துக்குடி - மயிலாடுதுறை |
| முகவரி | 4/13, வடக்கு தெரு, |
| | நத்தம், S.S. நல்லூர் (PO), |
| | சிர்காழி வட்டம் – 609 118. |
| | Cell : 80120 83115, 98659 86919 |
| விருப்பம் | சமபடிப்பும், ராகு, கேது தோஷம் உள்ள |
| | சென்னையில் பணிபுரியும் வரன். |



# மணமகன் தேவை

| | |
|---|---|
| பெயர் | செல்வி கு. தருணிகா |
| படிப்பு | B.Tech (Bio Medical Engineering) |
| வேலை | Sr. System Engineer, Infosys, Mahindra City Chennai Rs. 4.0 LPA |
| பிறந்த தேதி | 09.02.1999 |
| உயரம் | 160 cm |
| நட்சத்திரம் | விசாகம் |
| கோத்திரம் | காவனுட |
| பூர்வீகம் | T. நெடுஞ்சேரி, சிதம்பரம் |
| தகப்பனார் | குமாரகுரு, (Staff Engineer , SABIC, KSA) |
| தாயார் | தேவசேனா (Home maker) |
| முகவரி | 28, 6th Main Road, Dhandeeswara Nagar, Velachery, Chennai - 600 042. Cel : 63695 66850, 94433 08238, 89393 53841, 73057 78885, 63851 85685 E-mail : sena.kumar@gmail.com |



| | |
|---|---|
| பெயர் | செல்வி R. ஜெயஸ்ரீ |
| படிப்பு | B.E., EEE |
| வேலை | T.C.S. Bangalore Rs. 4,00,000/PA |
| பிறந்த தேதி | 26.06.2001 |
| உயரம் | 5' - 3" |
| நட்சத்திரம் | பூரம் 2ம் பாதம் |
| கோத்திரம் | செம்பிலியான் |
| பூர்வீகம் | துகிலி, தஞ்சை மாவட்டம் |
| தகப்பனார் | ப. ரவிக்குமார், M.A., D.Ted., H.M. APS Kottur |
| தாயார் | சி. பாரதி, B.Sc., B.Ed., HM PUPS Senniyanallur |
| முகவரி | 65, பஞ்சுக்கார செட்டித் தெரு, குத்தாலம் தாலுக்கா, மயிலாடுதுறை - 609 801. Cell : 94436 43008, 94422 73528, 80728 03709, 86104 04788 |
| விருப்பம் | B.E., B.Tech அரசு பணி (மற்றும்) IT பணி |



| | |
|---|---|
| பெயர் | செல்வி M. தீபதாரணி |
| படிப்பு | B.E. (ECE) |
| வேலை | LTI Mindtree, Chennai Rs. 16.5 Lakhs/PA |
| பிறந்த தேதி | 10.11.1996 |
| உயரம் | 165 cm |
| நட்சத்திரம் | சுவாதி |
| கோத்திரம் | களப்பாள |
| பூர்வீகம் | இறையூர் (பெண்ணாடம்) |
| தகப்பனார் | G. முருகேசன், Design Engineer, Oragadam |
| தாயார் | P. நிர்மலா, ஆசிரியை அரசு மேல்நிலைப் பள்ளி பள்ளிக்கரணை, சென்னை - 100. |
| முகவரி | 1/980, சௌமியா நகர், பெரும்பாக்கம், சென்னை - 600 100. Cell : 94444 25342 (Whatsapp) 81225 88342 |
| விருப்பம் | சமபடிப்பு, சமவேலை, சென்னையில் பணிபுரியும் வரன். |



| | |
|---|---|
| பெயர் | செல்வி A. சாய்லெஷ்மி |
| படிப்பு | B.E., (CSC) |
| வேலை | தனியார் பள்ளி ஆசிரியை (CSC) Rs. 2,00,000/PA |
| பிறந்த தேதி | 07.12.1995 |
| உயரம் | 156 cm |
| நட்சத்திரம் | மிருக சீரிசம் |
| கோத்திரம் | செம்பரியான் |
| பூர்வீகம் | நெடுங்காடு |
| தகப்பனார் | N. ஆனந்தன், அரசு ஊழியர் Rtd. |
| தாயார் | A. மலர்விழி, இல்லத்தரசி |
| முகவரி | 43, கீழ நெடுங்காடு, கோட்டுச்சேரி சாலை, நெடுங்காடு PO - 609 603. Cell : 94863 10739 (W) |
| குறிப்பு | மறுமணம் |



# குரோம்பேட்டை கார்காத்தார் சங்க முப்பெரும் விழா 2025



மாண்புமிகு **நெல்லை மாநகராட்சி மேயர் திரு.G.இராமகிருஷ்ணன் (எ) கிட்டு அவர்களுக்கு எழுச்சி நாயகன் விருது**
Left திரு.J. தீபன், திரு.B.தியாகராஜன், திரு.D திருஞானசம்பந்தம் Right திரு.S.சிவகுமார், திரு.S.மனோகர்



**சிறப்புரை**
மேயர். திரு.G.இராமகிருஷ்ணன்



**சங்க டிஜிட்டல் டைரக்டரி வெளி**யீடு
மேயர் திரு.G.இராமகிருஷ்ணன் வெளியிட
திரு. S.சோமசுந்தரம் பெற்றுக்கொள்கிறார்



**கார்குல பட்டிமன்றம்**
திரு.D.திருஞானசம்பந்தம், நடுவர், திருமதி.S.கிருத்திகா, செல்வி.K. மஹேஸ்வரி
செல்வி.T.யாழினி திருM.சண்முகம்



**பரதநாட்டியம்**
செல்வி.V,ஷர்மிதா

# குரோம்பேட்டை கார்காத்தார் சங்க முப்பெரும் விழா 2025



மனிதநேயம் **திரு.T.N முத்துக்குமாரசாமி அவர்களுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது**



**கார்குல மகளிர் தொழில் முனைவோர் பயிற்சி துவக்க விழா**





**சிறுவர்களுக்கான போட்டிகள் மற்றும் கோல போட்டி**

# கண்ணீர் அஞ்சலி



**தோற்றம்**
22-06-1936

**மறைவு**
17-11-2025

## திரு. S. விஸ்வநாதன் பிள்ளை அவர்கள்

தஞ்சை மாவட்டம் திருவிடைமருதூர் தாலுகா ஆரலூர் பண்ணை திரு. **S. விஸ்வநாதன் பிள்ளை** அவர்கள் **17-11-2025, திங்கட்கிழமை** காலை 7.00 மணியளவில் இறைவனடி சேர்ந்தார்கள் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். அன்னாரது ஆத்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுகிறோம்.

**V. வசந்த கோகிலம்**

**S. சர்மிளா சோமசுந்திரம்** **V. நடராஜன்**

**S. பிரியா சரவணராஜா** **V. பிரேம்குமார்**

**பேரன்கள், பேத்தி** மற்றும் **உறவினர்கள்**

# நெஞ்சிருக்கும் வரை நினைவிருக்கும்



மண்ணுலகிற்கு
11-11-1942

விண்ணுலகிற்கு
08-01-2020

மயிலாடுதுறை மாவட்டம், உளுத்துக்குப்பை
தெய்வத்திரு **முத்தையா பிள்ளை - செல்லம்** அவர்களின் புதல்வரும்
**முன்னாள் கிராம கார்காத்தார் சங்க தலைவரும்**
காலம் சென்ற திருமதி **ராஜேஸ்வரி** அவர்களின் கணவருமான

## திரு M. பாலன் பிள்ளை
(Retd. Assistant Executive Engineer - Agriculture Dept.)

அவர்களுக்கு

## ஆறாம் ஆண்டு நினைவு அஞ்சலி

நாள் 08.01.2026

**குடும்பத்தினர்**


**RAMS COMPUTECH**
Banking & IT Consumables

CDK & ATM ROLL
Passbook printer & Kiosk Ribbons




RIBBONS FOR EPSON PLQ 20 / 30
NCR DIBOLD OKI HITACHI HYOSUNG
ATM ROLLS
TOKEN MACHINE ROLLS
TONER CARTRIDGE




Lipi
Takes two to fly

Call for branch needs : 9940297148 (10 am to 7 pm)
9840019998 (9 to 9) : 044 28253300 – 9444639348 (11am to – 5.30pm)

# கண்ணீர் அஞ்சலி



**தோற்றம் :**
**18.01.1937**

**மறைவு :**
**18.11.2025**

அரியலூர் மாவட்டம், தா.பழூர்,

**தெய்வத்திரு. V. நாகரெத்தினம்பிள்ளை**

**அவர்களின் மனைவியும், எங்களின் தாயாருமாகிய,**

## திருமதி. நா.ஆண்டாள் ஆச்சி
அவர்கள்

**18.11.2025 செவ்வாய்கிழமை** இயற்கை எய்தினார்கள்
என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

### பிரிந்து வாழும்

**N. பாண்டியன் - காமாட்சி**
**N. கல்யாணி - சுப்ரமணியன்**
**N. சாந்தி - ஜெயராமன்**

***பேரன்கள், பேத்திகள்***

**K. ராஜசேகரன் - ரோகினி**
**S.கண்ணன் - பிரியா**
**V.ஆர்த்தி - வினோத்**
**J.விஜய் ஆனந்த் - புவனேஸ்வரி**
**P.பவித்ரா - ஹரிகுமார்**

***கொள்ளு பேரன்கள், பேத்திகள்***

**அதிசயா, ஐஸ்வர்யா, ஹரி, கீர்த்தி, சுருதி, நிலன்**

## சங்கப்பலகை

இடம் : திருமதி. மீராவின் கோடம்பாக்கம் இல்லம்.

பங்கு பெறுவோர் : மீரா, ஆண்டாள், சித்ரா, கௌரி, வசுமதி, பிரியா, மீனா, தீபிகா, கோமதி.

மீரா : வாங்க! வாங்க! உட்காருங்க! தர்பூசணி ஜூஸ் கொண்டு வரேன். குடித்த பின் அரட்டையை ஆரம்பிப்போம்.

ஆண்டாள் : நாங்க வீட்டைச் சுத்திப் பாத்துட்டு வந்து குடிக்கிறோம். தனி வீடா நல்லா இருக்கு! நந்தனம் வீட்டை விட இது பெரிசா தெரியுதுப்பா!

மீரா : பிரியாவுக்கு வீடு நல்லா தெரியும். அவ சுத்திக்காட்டுவா!

கௌரி : தர்பூசணி சாறு ரொம்ப டேஸ்டா இருக்கு!

ஆண்டாள் : எவ்வளவு சீக்கிரமா நாட்கள் ஓடிடுச்சு! இப்பத்தான் நாம தை அமாவாசை, தைப்பூசம், பொங்கல் பண்டிகை குறித்து பேசினால் போல உள்ளது. ஞாபகம் இருக்கா? திருநாங்கூர் கருடசேவை பற்றி பேசினதும், கிராமத்துப் பொங்கல் பற்றி பேசியதும்.

சித்ரா : நல்லா ஞாபகம் இருக்கு! அதனால நாம நேரடியா நம்ம செய்திகளுக்குப் போயிடலாம். சென்னைக்கு வரும் என்று பயமுறுத்திய இந்த டிட்வா புயல் இலங்கையைப் புரட்டி போட்டதுடன், நம் மாநிலத்தின் தென் மாவட்டங்களில் இடைவிடா பெரு மழையையும் கொண்டு வந்துவிட்டது.

கௌரி : ஆமாம்! எவ்வளவு உயிர் சேதம்; பொருள் சேதம்? பல பேர் வீடுகள் இழந்து தவிக்கின்றனர். பல நாடுகள் இலங்கைக்கு உதவிகளை உடனே அனுப்பி சீர்படுத்தியிருப்பது மனித நேயத்தைக் காட்டுகிறது.

வசுமதி : கடந்த நவம்பர் 2–ஆம் தேதி காமராஜர் அரங்கில் ராமானுஜர், தென்னாச்சாரியார் சம்பிரதாய சபை துவக்க விழா நடந்தது. வைணவ ஆச்சாரியார் ராமானுஜர் வானமாமலை, திருக்கோஷ்டியூர் நம்பி, திருக்கோவிலூர், ஆழ்வார் திருநகரி பிள்ளான், தொட்டாசாரி, எம்பார், ஆளவந்தார் உள்ளிட்ட 74 பீடங்களைநியமித்தார். அந்த வம்சத்தில் பல பீடங்களில் ஜீயராகவும், பல பீடங்களில் ஆச்சாரியார்களாகவும் உள்ளனர். இவைகளை ஒருங்கிணைக்கும் முயற்சியாக இச்சபை தொடங்கப்பட்டுள்ளது. சைவத்துக்கு என தருமபுரம், திருப்பனந்தாள், திருவாவடுதுறை, மதுரை என மடங்கள் இருப்பது போல வைணவத்திற்காக இச்சபை ஏற்பட்டுள்ளது.

ஆண்டாள் : நீ ஆரம்பிச்சுட்டே! மார்கழி மாதமாக இருப்பதால் நான் ஒரு பெருமாள் கோவிலைப் பற்றி கூறுகிறேன். 108 திவ்ய தேசங்களில் ஒன்றான தேரழுந்தூர் ஆமருவியப்பன் கோவில் தான் நான் கூறப்போவது. குடந்தை மயிலாடுதுறை சாலையில் கோமல் முக்கூட்டில் இடது புறம் திரும்பினால் இவ்வூர் வரும். இந்த கோவில் கரிகால் சோழனால் கட்டப்பட்டது. சங்க இலக்கியத்தில் இக்கோவில் குறித்து வருவதால், இதன் பழமையை நாம் அறிந்து கொள்ளலாம். ஒரு முறை சொக்கட்டான் ஆடிய போது நேர்ந்த சிறு தவற்றினால், கோபமுற்ற சிவன், உமையைப் பசுவாக பூலோகத்தில் பிறக்க சாபமிட்டார். உமையம்மை பசுவாகவும், அவளுடன் திருமகளும், கலைமகளும் பசுக்களாக மாற, விநாயகர் கன்றாக மாறி பூலோகம் வந்தனர். இடையனாக விஷ்ணு அவர்களைப் பாதுகாக்க பூலோகம் வந்ததாக ஐதீகம். இவ்வூரைச் சுற்றியுள்ள ஊர்களில் பசுக்கள் மேயும் காலத்தில், பெருமாள் ஆமருவியப்பனாக இத்தலத்தில் எழுந்தருளியுள்ளார். தலப்புராணத்தை உறுதிப்படுத்தும் விதமாக அருகிலுள்ள வேதபுரீசுவரர் திருக்கோவிலில் சொக்கட்டான் மண்டபம் உள்ளது. மூலவர் தேவாதிராஜன்; நின்ற திருக்கோலம். தாயார் செங்கமலவல்லி; தீர்த்தம் தர்சன புஷ்கரணி. விமானம் கருட விமானம்; கருடாழ்வார் அளித்தது. 5 நிலைகளைக் கொண்ட கோவிலில், ஆமருவியப்பன் 14 அடி உயரத்தில் காட்சியளிக்கிறார். கருவறை உள்ளேயே தாயாரும், கருடாழ்வாரும் உள்ளதுடன் ஆநிரைகளும், முனிவர்களும் உள்ளனர். பிரகாரத்தில் அகத்தியர், யோக நரசிம்மர், விஷ்வக்சேனர், இராமர், அனுமன், ஆழ்வார்கள் சந்நிதிகள் உள்ளன.

சித்ரா : அக்கா எங்களுக்கு மாசி புனர்பூசம் அன்று ஆமருவியப்பனும், வேதபுரீசுவரரும் சந்திக்கும் உற்சவம் காணும் பேறு கிடைத்தது. திருமால் பசுவடிவில் இருக்கும் அம்பிகையை ஈசனிடம் ஒப்படைக்கும் கோலம் காணலாம்.

வசுமதி : எங்க அம்மா சொல்லிக் கேட்டிருக்கேன். 60, 70 களில் கம்பர் விழா மிகச் சிறப்பாக கொண்டாடப்படும் என்றும், அந்த கோவில் புளியோதரையின் ருசி மிகவும் அற்புதமாக இருக்குமென்றும் கூறி இருக்கிறார்கள்.

மீனா : பிளாஸ்டிக்கை உண்ணும் அதிசயப்புழுவைக் கண்டுபிடித்துள்ளனர். நெகிழிகளால் ஏற்படும் தொல்லையைச் சீர் செய்வது எப்படி என ஆராயும் போது, 'கிரேட்டர் வாக்ஸ்மோத்' எனப்படும் ஓர் அந்துப்பூச்சியின் புழுவுக்கு ஒரு அதிசய ஆற்றல்

இருப்பதை விஞ்ஞானிகள் கண்டறிந்தனர். குறைந்த அடர்த்தி உடைய பாலீதீன்களை 2000 புழுக்கள் 24 மணி நேரத்தில் சாப்பிட்டு விடும். கனடாவில் உள்ள பிராண்டன் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் பிளாஸ்டிக்கை உண்ணும் போது, அவைகளின் ஆரோக்கியம் எவ்வாறு பாதிக்கப்படுகிறது என்பதை ஆராய்ந்ததில், கொழுப்பாக சேமிக்கப்பட்டு, அவை விரைவில் இறந்து விடுகின்றன. என அறிந்தனர். எனவே அவற்றின் வாழ்நாளை நீட்டிக்க முடிந்தால், இப்புழுக்களை வைத்து பெரிய அளவில் நுண்நெகிழிகளை அழிக்க இயலும். மேலும் விஞ்ஞானிகள் இப்புழுக்களை மீன்களுக்கும் உணவாகத் தரலாமென்கின்றனர்.

தீபிகா : கூடிய விரைவில் புழுக்களின் வாழ்நாளை நீட்டிப்பதைக் கண்டறிந்தால் நல்ல பலன் கிடைக்கும். Anyway a long way to go. தென்துருவமான அண்டார்டிகாவில் இந்தியாவின் மூன்று ஆய்வு மையங்கள் உள்ளன. தற்போது 'மைத்ரி2' அதி நவீன ஆய்வுத் தளத்தை கிழக்கு அண்டார்டிகாவில் தேசிய துருவ மற்றும் பெருங்கடல் ஆராய்ச்சி மையம் (NCPOR) ஜனவரி 29–க்குள் 2000 கோடி ரூபாய் முதலீட்டில் அமைக்க உள்ளது. கோடையில் சூரிய ஒளி மூலமும், ஆண்டு முழுதும் காற்றாலை மூலமும் மின்சாரத்தை இந்நிலையம் பெறும். ஆய்வாளர்கள் இருக்க இயலாத மாதங்களில், தட்பவெப்ப தரவுகளைத் தொடர்ந்து அனுப்பும் தானியங்கி கருவிகளும் நிறுவப்படும். தேவையான அனைத்து கருவிகளும் தென் ஆப்ரிக்கா வழியாக கப்பலில் அனுப்பப்படுவதுடன், குளிர்காலத்தில் பனி போர்த்திய தரையில் இழுத்துச் செல்லப்படும். கட்டுமானப் பணிகள் அண்டார்டிகாவின் கோடைக்காலமான அக்டோபர் முதல் மார்ச் வரை நடைபெறும்.

கௌரி : இதை எல்லாம் அறியும் போது நமது தேசம் விஞ்ஞானத்தில் முன்னேறுவது சந்தோஷமா இருக்கு.

சித்ரா : இந்தியர்கள் பாராட்டுக்குரியவர்களாக ஆகும் போது நெஜமா ரொம்ப சந்தோஷமா இருக்கு. இஸ்ரேலில் பாலைவனத்தைச் சோலைவனமாக்கியவர் மத்திய அரசின் வெளிநாடு வாழ் இந்தியர்களுக்கான உயரிய 'பிரவாசி பாரதிய சம்மான்' விருதை வென்ற 95 வயதான எலியாகு பெசலேல் என்பவர். அவர் சமீபத்தில் உடல் நலக் குறைவினால் காலமானார். கேரள மாநிலத்தைச் சேர்ந்த இவர் 1955–ல் இஸ்ரேலுக்குப் புலம் பெயர்ந்து, ஆடு மேய்க்கும் வேலையில் ஈடுபட்டிருந்த போது, 'நெகேவ்' என்ற பாலைவனப்பகுதியில் பயிரிடத் தொடங்கி, இஸ்ரேலை உலகின் இரண்டாவது பெரிய ரோஜா ஏற்றுமதியாளராக உயர்த்தினார். இஸ்ரேலின் முதல் நவீன Green House எனும் பசுமைப் பண்ணையை நிறுவியவரும் இவரே. இந்தியா மீது பற்றுக்கொண்டிருந்த இவர் 'என் தாய்நாடு, என் தந்தை நாடு' என்ற தலைப்பில் ஒரு நூல் ஒன்றையும் எழுதியுள்ளார்.

கௌரி : சவுதி அரேபிய பாலைவனம் குறித்து படித்ததைச் சொல்றேன். ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த க்ரிபித் பல்கலைக்கழகம் சவுதி அரேபிய பாலைவனத்தில் 12,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட 170 பாறை ஓவியங்களைக் கண்டறிந்துள்ளது.

முற்காலத்தில் இங்கே மனிதர்கள் வாழ்ந்தனர் என்பது அதன் மூலம் தெரிய வந்துள்ளது.

கோமதி :பாக் ஆக்கிரமிப்பு காஷ்மீருக்கென தனி சட்டசபை உள்ளது. இதன் பிரதமராக இருந்த பாகிஸ்தான் மக்கள் கட்சியின் காசிம் மஜீத் என்பவருக்கு எதிராக நம்பிக்கை இல்லாத் தீர்மானம் நிறைவேறியதால், 4 ஆவது பிரதமராக அதாவது புதிய பிரதமராக பைசல் முஸ்தாஜ் ரத்தோர் தேர்ந்தெடுக்கப்பட்டு, பதவியேற்றுள்ளார். பாரதத்தில் அமைதி நிலவ ஒத்துழைக்க, இறைவனை வேண்டுவோம்.

பிரியா : மனிதன் சுமக்கும் 5 வகை வெடிகுண்டுகளாவது மன உளைச்சல், மனவேதனை, உயர்ந்த ரத்த அழுத்தம், அதிக கொலஸ்ட்ரால், சர்க்கரை நோய் என மருத்துவர் எஸ் அர்த்தநாரி கூறியுள்ளார். எதிர்மறை சிந்தனை, மன அழுத்தம் ஆகியவை ஆஸ்துமாவை அதிகரிக்கும் என்று இத்தாலிய பல்கலைக்கழகம் மேற்கொண்ட ஆய்வில் தெரிவ வந்துள்ளது.

மீரா : இதிலேந்து என்ன தெரியுது ? எந்த கவலையையும் மனதில் தேக்கி வைத்துக்கொள்ளக்கூடாது. 'இதுவும் கடந்து போகும்' என்ற மொழியை நினைவில் வைத்து வாழவேண்டும். அவர்களெல்லாம் கண்டு பிடித்தது இருக்கட்டும். காற்று மாசுக்கு என்ன விடிவுகாலம் ? சென்னையில் ஓரளவுக்கு குறைவாக உள்ளது. டெல்லியில் சுத்த மோசம். டெல்லியில் இருக்கும் என் மகளுக்கு எப்போதும் சுவாசக் கோளாறு தான். இங்கு வந்தால் இருமல் போன்றவை இருக்காது. அங்கு போனால் உடனே வந்து விடும்.

பிரியா : காற்றில் உள்ள பி.எம்.25 அளவுள்ள நுண்துகள்களால் ஏற்படும் நுரையீரல் வீக்கம்

மற்றும் செல் சிதைவை வைட்டமின் 'சி' கணிசமாக குறைப்பதாக கண்டறிந்துள்ளனர். இந்த எளிய ஆண்டி ஆக்ஸிடன்ட் காற்று மாசு நிறைந்த சூழலில் வசிப்பவர்களுக்கு ஒரு மலிவான பாதுகாப்பு கவசமாக இருக்கும். மீரா அக்கா உங்கள் மகளை வைட்டமின் 'சி' எடுத்துக் கொள்ள சொல்லுங்கள்.

கோமதி :கார்காத்தார் ஒப்புரவில் லலிதா என்பவர் எழுதும் கட்டுரையைப் படிக்கிறீர்களா ? ரொம்ப நல்லா இருக்கு. அதுவும் போன மாதம் ஞானி ஞானேஷ்வர் பற்றி எழுதி இருக்காங்க! நீங்க வாங்கறதுல்லைன்னா கார்காத்தார் ஒப்புரவு Subscribe பண்ணி, கட்டுரைகளைப் படிச்சுப் பாருங்க; நல்லா இருக்குப்பா!

மீரா : நிறைய பேசிட்டோம். இருங்க பைன் ஆப்பிள் கேசரியும், மசால் வடையும் கொண்டு வரேன். அது சரி! அடுத்த மாதம் யார் வீட்டில் சந்திப்பு? Decide பண்ணுங்க!

தீபிகா : எங்கள் வீட்டில் வைத்துக்கொள்ளலாம். எங்கள் வீடு இந்திரா நகரில் உள்ளது. Address -ம் Location Map-ம் அனுப்பி வைக்கிறேன்.

தோழிகள் அனைவரும் சிற்றுண்டியும், காபியும் குடித்து விடைபெறுகின்றனர்.

நன்றி ! வணக்கம் !

---

## ஊட்டுவதும்... ஊட்டத்தார்...

ஆலய வழிபாடு வாழ்க்கையில் மிகவும் சால சிறந்தது. ஆலய வழிபாட்டில் மிக சிறந்த வகையில் தேவார பாடல் பெற்ற ஆலய வழிபாடு ராசிக்கான ஆலய வழிபாடு. நால்வர்கள் தேவார பாடிய ஆலய வழிபாடு மூவர் பாடிய ஆலய வழிபாடு கூடுதலாக 276 தேவார பாடல் பெற்ற தலத்தினையும்...

ஏழு வகையான ஆலக் கோவில், கொகுடிக் கோவில், மணிக்கோவில், பெருங் கோவில், ஞாழற் கோவில், இளங் கோவில், கரகக் கோவில் ஆகிய தல வழிபாடு செய்தலும், சப்த விட தலங்கள், பின் பஞ்ச சபைகள் தல விருட்ச கோவில்கள் நம் பிறவியில் ஆலய வழிபாடு செய்தால்...

தீராத நோய்களும் நிவர்த்தியாகும். மனித பிறப்பில்நோயற்றவாழ்வேசிறந்தவாழ்வு,என்பதுபோல, வைப்பு தலம் வழிபாடு செய்தால் நோய் இல்லா வாழ்வளிக்கும். இறைவன் வைப்பு தலம் என்பது என்ன ஒரு தலத்தில் இறைவனை பற்றி பாடும் போது...

அதே பாடலில் வேறொரு தலத்தில் இருக்கும் இறைவனை நினைத்து சேர்த்து பாடும் மரபு உண்டு. அத் தலமே வைப்புத்தலம் 255 வைப்புத் தலங்கள் வரலாற்று சான்று தெரிவிக்கப்படுகிறது. இதில் திருத்தாண்டகம் அப்பர் பாடியதில். சிறு நீரக கோளாறு நோய் குணமாக்க கூடிய திருத்தலம்.

திரு ஊட்டத்தூர் 6–ஆம் திருமுறையில் திரு சேஷத்திரக் கோவையில் பாடிய வைப்புத் தலமாக அமைகின்றது. ராஜ கோபுரம் பார்க்கும் போது நம்மை வியப்பில் மிரள்கிறது நம் மனம் அப்பர் சுவாமிகள் நன்கு உணர்ந்து பாடிய விதம் வியப்பில் சுவேத ரத்தின கிரீஸ்வரர் சுவாமி....

இறைவன் பார்வையில் கிணறு போன்ற சுனை இதுவே பிரம்ம தீர்த்தம். இவ் தீர்த்தமே நம் சிறு நீரக கோளாறு தீர்க்கும் தீர்த்தம். இறைவனை நினைத்து இவ் தீர்த்தம் அருந்தினால் நோய் குணமாகும் என்பது பயன் பெற்றவர்கள் கூறுகிறார்கள். இறைவன் பார்வையில் இவ் தீர்த்தம் அமைந்திருப்பது,

மிகவும் வியப்புதான். இவ் ஆலயம் சென்று வழிபடும் போது உணரலாம். உள் பிரகாரம் வலம் வரும் போது ஸ்ரீ சிவகாம சுந்தரி உடன் ஸ்ரீமத் ஆனந்த நடராஜர் சுவாமி கல் மூலவர் தரிசிக்கும் பேறு கிடைக்கும் இதை விட பேரின்பம் இல்லை என்று சிந்திக்க தோன்றும்...

நமக்காக எங்கோ ஒரு தலத்தில் மற்றொரு தலத்தில் அன்றே உணர்ந்து பாடிய அப்பர் சுவாமிகளை வழிபாடு செய்து.... பாடிய திருத்தாண்டகம் நம் செவியில் பாடுவது போல் உணரலாம். உணர்ந்தால் நோயற்ற வாழ்வே சிறப்பானது.

துறையூர் சோற்றுத்துறை
சூலமங்கை தோணிபுரம்
துருத்தி சோமீச்சரம்
உறையூர் கடலொற்றியூர்
ஊற்றத்தூர்.

கயிலை நாதனை காணலாமே என்கிறார் அப்பர். ஆகையால்...

ஊற்றத்தூர் செல்லுங்கள் இறைவன்
தரும் திருநீறு பூசுங்கள்
இறைவன் பார்வையால் பிரம்ம
தீர்த்தம் அருந்துங்கள் மனம் உணரும்
திரு நீறும், திருநீர் (தீர்த்தம்)
தருபவர் இறைவன்... சிவாய நம.

– வேளா. சுவாமிநாதன், ஆச்சாள்புரம்.
9751730940

## மோட்டார் வாகன எரிவாயு / பெட்ரோல் வரலாறு.

1859–ஆம் ஆண்டு பென்சில்வேனியா – அமெரிக்காவில் முதல் கச்சா எண்ணெய் கிணறு துளையிடப்பட்டது. உலகில் இரண்டாவது கச்சா எண்ணெய் கிணறு இந்தியாவில் 1860–ம் ஆண்டு அஸ்ஸாம் மாநிலத்தில் அஸ்ஸாம் ரயில்வே & வாணிப கழகத்தினால் துளையிடப்பட்டது.

1890–ல் 'மார்க்ரீட்டா' (அஸ்ஸாம்) என்ற இடத்தில் சிறிய அளவில் கச்சா எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் 1901–ம் ஆண்டு "டிக்பாய்" என்ற இடத்தில் முழுமையான சுத்திகரிப்பு நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. "டிக்பாய்" கச்சா எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை ஆரம்பித்து 125 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டது. இந்தியா சுதந்திரம் அடைந்த பின் "எண்ணெய் மற்றும் எரிவாயு வாணிப கழகம் "ஆயில் இந்தியா லிமிடெட்" "எரிவாயு ஆணையம்" என பல அரசு நிறுவனங்கள் ஆரம்பிக்கப்பட்டு இந்த துறை பெரும் வளர்ச்சி அடைய ஆரம்பித்தது. தமிழ்நாட்டில் சென்னை மணலி சென்னை பெட்ரோலியம் கம்பெனி, நாகை நரிமணம் சுத்திகரிப்பு நிலையம், கொச்சின், விசாகப்பட்டிணம், மங்களூர், மும்பை, ஹால்டியா, படின்டா பஞ்சாப், ஜாம்நகர் – குஜராத் ரிலையன்ஸ், எஸ்ஸார், பர்மா ஷெல் என பல கச்சா எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள் அரசு மற்றும் தனியார் நிறுவனங்களால் ஆரம்பிக்கப்பட்டு, தற்போது பெரிய அளவில் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. எஸ்ஸார் – H.P.L. ஆகவும், பர்மா ஷெல் – B.P.C.L. ஆகவும் அரசுடமையாக்கப்பட்டது. கடலூர் நாகர்ஜூனா சுத்திகரிப்பு நிலையம் ஆரம்பித்து இன்னும் முடிவடைய வில்லை. அரசு நிறுவனமான O.N.G.C. தமிழ் நாட்டில் காவிரிப்படுகையில் திருவாரூர், நாகை மாவட்டங்களில் ஆழ்துளை கிணறுகளை துளையிட்டு கச்சா எண்ணெய் எடுக்க ஆரம்பித்தது. மும்பை, குஜராத் கடல் சார்ந்த பகுதிகளில் நடுக்கடலில் எண்ணெய் வளம் கண்டு அறிந்து கச்சா எண்ணெய் எடுத்து நடுக்கடலிலேயே எரிவாயு / எண்ணெய் என தனித்தனியாக பிரித்து எடுக்கும் 100 பேர் தங்கி பணிபுரியும் மேடைகள் அமைத்து 365 நாட்கள் 24 மணி நேரமும் தொழில் நுட்ப வல்லுனர்கள் கச்சா எண்ணெய் கரையில் உள்ள சுத்திகரிப்பு நிலையம் மற்றும் மில்லியன் டன் எடை தாங்கும் கப்பல்களில் எண்ணெய் ஏற்றி அனுப்பி வைக்கின்றனர். அயல்நாடுகளிலிருந்து கொண்டு வரப்படும் கச்சாஎண்ணெய் கப்பல்களிலிருந்து சுத்திகரிப்பு நிலையங்களுக்கு கடல் அடியில் புதைக்கப்பட்டு உள்ள குழாய் மூலம் அனுப்பி வைக்கப்படுகின்றன. கத்தார் நாட்டிலிருந்து வரும் திரவ நிலை நாப்தா எரிவாயு கப்பல் நடுக்கடலில் நிறுத்தப்பட்டு மிதவை மேல் இணைப்பில் இணைத்து கடல் அடியில் உள்ள குழாய் மூலம் திருக்கடையூர் பிள்ளை பெருமாள் நல்லூர் மின் நிலையத்திற்கு கொண்டு வரப்பட்டு மின் உற்பத்தி செய்யப்படுகிறது.

மேல் சொன்ன சுத்திகரிப்பு நிலையங்கள் சமையல் எரிவாயு, கெரோசின், டீசல், பெட்ரோல், விமான டர்பைன் எரிபொருள், மெழுகு, கிரீஸ் போன்றவை மட்டும் அல்லாமல் நோய் தீர்க்கும் மருந்து தயாரிக்கும் மூல பொருட்கள், பெயின்ட் தயாரிக்கும் மூலபொருட்கள், பாலிமர் கெமிக்கல்ஸ், சன்மைக்கா ஒட்டும் பிசின், பெவிகால்/பெவிபாண்ட்/குவிக் பிக்ஸ் மூல பொருட்கள் கட்டுமானத் துறைக்கு நீர் கசிவைத் தடுக்கும் பாலிமர் ரசாயன கலவைகள், பிளாஸ்டிக் சேர், பாலிமர் தரை விரிப்புகள், நைலான் பாலிமர் மழை நீர் தடுப்பு விரிப்புகள், சாலை பணிக்கு தேவைப்படும் தார் போன்ற 150 துணை பொருட்கள் கச்சா எண்ணெய் சுத்திகரிப்பிலிருந்து கிடைக்கிறது. கச்சா எண்ணெய் இல்லையெனில் நமது நாட்டின் பொருளாதார முன்னேற்றமே இல்லை எனலாம். இத்தகைய வளமான சுத்திகரிப்பு நிலையம் / நடுக்கடல் துளையிடும்/ எண்ணெய் பிரித்து எடுக்கும் மேடைகளில் பணி புரிய நம் கார்குல இளைய தலைமுறை முன் வரவேண்டும். நல்ல மேல்நிலையான வருமானம், வசதிகள் மற்ற துறைகளை விட அதிகமான நிலையில் உள்ளது.

கார்குலம் இந்த துறையில் கவனம் செலுத்த வேண்டும்.

– சீ. திருஞானம்.
9500459461

## வாழ்த்துகிறோம்

சீர்காழி தாலுக்கா, திரிபுரசுந்தரி நகர் திரு. G. அமுதன் பிள்ளை – சாந்தி இவர்களின் புதல்வி A. சுவாதி (எ) விஷ்ணு பிரியா B.Com MBA CAக்கும் சீர்காழி தாலுக்கா திரு. S. சௌந்தரராஜன் பிள்ளை – ரேவதி இவர்களின் புதல்வன் S. சுதர்சனன் B.E. க்கும் 30–11–25, ஏஞ்சல் பேலஸ் A/c மஹாலில் நடந்த திருமணத்தில் சீர்காழி சங்கம் சார்பாக மணமக்களுக்கு சந்தனமாலை அணிவித்து வாழ்த்து மடல் வழங்கப்பட்டது.



# சிறுவர் பகுதி



தயாரிப்பு **தஞ்சை தியாகு**

அலைபேசி: 94437 00375

Email: thiagu1943@gmail.com

அகந்தை உறவுகளை முறிக்கும். அன்பு உறவுகளை வளர்க்கும்.

### தேசியக் கொடி கூறுவதென்ன?



காவிநிறம் பற்றற்ற நிலை அல்லது துறவு நிலையைக் குறிக்கும். நம் தலைவர்கள் அரசியலில் பொருள் சேர்க்கும் நோக்கமின்றி பணிக்காகத் தங்களை அர்ப்பணித்துக்கொள்ள வேண்டும். வெள்ளைநிறம் உண்மையைக் குறிக்கும். இது நம் நடத்தைக்கு வழிகாட்டும் வாய்மை பாதை, பச்சை நிறம் மாநிலத்தில் நமக்குள்ள தொடர்பைக் குறிக்கும். தாவரங்களுக்கும் உயிரினங்களுக்கும் உள்ள தொடர்பைக் குறிக்கும். நம்நாட்டின் வளத்தைக் குறிக்கும். கொடியின் நடுவே உள்ள அசோகச்சக்கரம் தர்மசக்கரம். இக்கொடியின் கீழ் பணியாற்றும் அனைவரும் அறநெறியில் இயங்கவேண்டும். சக்கரம் இயக்கத்தைக் குறிக்கிறது; முன்னேற வேண்டும் என்ற ஆற்றலை இச்சக்கரம் பிரதிபலிக்கிறது. கடவுளுக்கு ஒப்பாக தர்மத்தின் சின்னமாக விளங்கும் சக்கரவடிவிலான அசோகச்சக்கரத்தை நாம் நமது கொடியில் ஏற்றுள்ளோம்.

– டாக்டர்.இராதாகிருஷ்ணன் உரை

### நமது தேசிய கீதம்

(மகாகவி இரவீந்திரநாத் தாகூர்)

ஜனகண மன அதி நாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல வங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுபநாமே ஜாகே
தவசுப ஆஷிஸ மாகே
காயே தவ ஜயகாதா
ஜனகண மங்கள தாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா
ஜயஹே ஜயஹே ஜயஹே
ஜய ஜய ஜயஹே!

### தேசிய கீதம் பொருள்

இந்தியத்தாயே! மக்களின் இன்ப துன்பங்களைக் கணிக்கிற நீயே எல்லாருடைய மனதிலும் ஆட்சி செய்கிறாய்.

நின் திருப்பெயர் பஞ்சாபையும், சிந்துவையும், கூர்ஜரத்தையும், மராட்டியத்தையும், திராவிடத்தையும், ஒடிசாவையும், வங்காளத்தையும் உள்ளக் கிளர்ச்சி அடையச் செய்கிறது.

நின் திருப்பெயர் விந்திய இமயமலைத் தொடர்களில் எதிரொலிக்கிறது; யமுனை, கங்கை ஆறுகளின் இன்னொலியில் ஒன்றுகிறது. இந்திய கடலலைகளால் வணங்கப்படுகிறது. அவை நின்னருளை வேண்டுகின்றன.

நின்புகழைப் பரப்புகின்றன. இந்தியாவின் இன்ப துன்பங்களைக் கணிக்கிற தாயே! உனக்கு வெற்றி! வெற்றி! வெற்றி!

### கணிதப் புதிர்

1. A, B, C ஆகிய எங்களுக்கு சில குழந்தைகள் உள்ளன. Aயின் குழந்தைகளில் பெண்ணைப்போல ஆண் இரு மடங்கு. Bக்கு பெண்ணைப்போல 3 மடங்கு ஆண்குழந்தைகள். Cக்கு பெண் குழந்தைகளைவிட 3 ஆண் குழந்தைகள் அதிகம். எங்கள் மூவருக்கும் உள்ள குழந்தைகள் 25க்கும் குறைவு. இந்த விபரங்களைக் கூறுவது யார்? ஒவ்வொருவருக்கும் எத்தனைக் குழந்தைகள்?
2. ஜப்பான் நாட்டின் நாணயம் யென். கிரீஸ், ஸ்பெயின், ஸ்வீடன் ஆகிய நாடுகளின் நாணயம் என்ன?
3. 4,8,12,16,18 ஆகிய ஐந்து எண்களாலும் மிச்சமின்றி வகுபடக்கூடிய ஓர் எண்ணைக் கூறமுடியுமா?
4. மூன்று எண்கள் உள்ளன. இவற்றுள் முதல் எண், இரண்டாவதைப்போல் இரு மடங்கு. மூன்று எண்களின் சராசரி 100. அந்த மூன்று எண்களும் எவை?

**விடுகதைகள்**



1. ஒட்டி வளர்ந்தாலும் அவனை வெட்டி எறிவோம்.அவன்யார் ?
2. ஓராண்டு உயிர் வாழ்வான்.ஒயிலாகக் காட்சி தருவான்.அவன் யார் ?
3. ஒருவனைக் கூப்பிட்டால் ஊரையே கூட்டுவான்.அவன் யார் ?
4. வேகாத வெயிலில் வெள்ளையன் விளைகிறான்.அவன் யார் ?
5. வண்ணத்தில் சிவப்பழகன்.வாய்க்குள் செய்தி வாங்குவான்.அவன்யார் ?
6. அணில் ஏறாத கொம்பு.என்ன கொம்பு ?
7. அழுவேன்,சிரிப்பேன்,அனைத்தும் செய்வேன்.நான்யார் ?
8. அடித்தாலும் ,உதைத்தாலும் அழமாட்டான்.அவன்யார் ?
9. வீட்டிலிருப்பான் காவலாளி,வெளியில் சுற்றுவான் அவன் கூட்டாளி.இவர்கள் யார் ?
10. ஆயிரம் கதை எழுதி அகிலத்தை ஆட்டுவிப்பான்.நாக்கு வறண்டால் வீழ்ந்திடுவான். அவன் யார் ?

**சிரிக்கலாம் வாங்க!**



1. கண் டாக்டர்: கண்சிகிச்சை முடிந்து கண்கட்டை கழட்டியவுடன் நோயாளியை அழைத்துக் கொண்டுபோய் வெளியில் நிறுத்தி அங்கே நிற்கிறதே கார் அதன் எண்ணைச் சொல்லுங்கள் என்றார்.

நோயாளி: முதலில் கார் எங்கே நிற்கிறது என்று சொல்லுங்கள் !அப்போதுதான் எண்ணைச் சொல்ல முடியும் என்றார். டாக்டர் நோயாளியை உள்ளே அழைத்துப் போய் விட்டார்.

2. அவசரமாய் சிகிச்சைக்காக நோயாளியை மருத்துவ மனைக்குக் கொண்டு சென்று டாக்டரிடம் காட்டியபோது ஒரு அரைமணி நேரம் முன்னதாக கொண்டுவந்திருந்தால் இவரைப் பிழைக்க வைத்திருப்பேன் என்றார் டாக்டர்.

விபத்து நடந்தே பத்து நிமிடங்கள்தானே ஆகிறது என்றார் கொண்டு வந்தவர்.

3. ஒரு நாள் தேசிய மாணவர்படையில் ஆசிரியர் ஓர் மர நிழலில் வகுப்பெடுத்துக் கொண்டிருந்தார் .அப்போது குரங்கு ஒன்று வகுப்பருகே நடந்து சென்றது.பேராசிரியர் சும்மா இருந்திருக்கலாம்.குரங்கைக் காண்பித்து எல்லாம் நியூ அட்மிஷனா ? என்றுகேட்டார்.

மாணவன் ஒருவர் உடன் எழுந்து, இல்லை ஐயா நியூ அப்பாயின்ட்மெண்ட் என்றான்.ஆசிரியர் பதில் பேசவில்லை.

**இவர்கள் சொன்னார்கள்**

இருள் இருள் என்று சொல்லிக் கொண்டு சும்மா இருப்பதைவிட ஒரு சிறிய மெழுகுவர்த்தியை ஏற்ற முயற்சி செய் – கன்பூசியஸ்

வெளியே காட்டிய கோபம் மன்னிப்புக்கு வழி தேடும்.உள்ளே அடக்கிய கோபம் பழிக்கு வழி தேடும். – புல்வெர்

உலகில் ஆற்றமுடியாத செயல்கள் என்று எதுவுமில்லை.அறிவியல் துறையில் நான் ஏதாவது ஆற்றியிருக்கிறேன் என்றால் அதற்குக் காரணம் நான் ஒரு விஷயத்தில் அமைதியாக என் கவனம் முழுவதையும் பகிர்ந்ததைத்தவிர வேறு ஒன்றுமில்லை. – நியூட்டன்

தோல்வியடைவதில் தவறில்லை.அந்தத் தோல்வியிலிருந்து பாடம் ஏதுவும் கற்றுக் கொள்ளாமல் இருப்பதுதான் தவறு. – ஜான்சன்

**நன்றி கூறுங்கள்**

ஒருவர் உடல்நலமில்லாமல் மருத்துவமனையில் இருந்தார். அப்போது ஓரிடத்திலேயே படுத்திருப்பது கடினமாக இருந்தது. அவரது டைரியில் இந்த ஆண்டு மிகவும் மோசமானதாக உள்ளது. 94வயது வரை வாழ்ந்த எனது தந்தை இறந்துவிட்டார். எனது மகனோ விபத்தில் அடிபட்டு மருத்துவமனையில் இருக்கிறான் என எழுதி வைத்தவர் உறங்கிவிட்டார். சிறிதுநேரத்தில்வந்த அவரது மனைவி டைரியைப்படித்துவிட்டு சில வரிகளை எழுதினார். இந்த ஆண்டு உங்களுக்கு மிக நல்ல ஆண்டு. 94வயதுவரை வாழ்ந்த உங்கள் தந்தை நோயுற்று வேதனைப்படாமல் இறந்தார். உங்கள் மகன் விபத்தில் சிக்கினாலும் கை, கால்களை இழக்காமல் காயங்களுடன் உயிர் தப்பினார். உங்களது நோயும் தற்காலிகமானதே. விரைவில் குணமாகி வீடுதிரும்புவீர்கள் என்று இறைவனுக்கு நன்றி கூறுங்கள்.

**இன்றைய மாணவர்கட்கு குறிப்பாக இருக்கவேண்டிய நற்பண்புகள்**



1. எங்கும், எதிலும் நேரம் தவறாமை என்பது நற்பண்புகளில் சிறந்த ஒன்று.

2.புதிய விஷயங்களை கற்றுக்கொள்ள ஆர்வம் வேண்டும்.

3.தான் எடுத்துக்கொண்ட துறையில் நிறைய சாதிக்க வேண்டும் என்ற விடாமுயற்சி வேண்டும்.

4.நமக்குக்கிடைக்கும் ஒவ்வொரு வாய்ப்பையும் நன்கு பயன்படுத்தி உயர்ந்த நிலைக்கு வரவேண்டும் .

5.மாணவர்கள் பள்ளிப்பருவத்தில் முழு ஈடுபாட்டுடன் படிப்பில் மற்றும் தனது தகுதியை வளர்த்துக் கொள்ளக்கூடிய சுய முன்னேற்றப் பயிற்சிகளில் ஈடுபடவேண்டும்.

**இலக்கு சாத்தியமாகும்**

ஒரு இளைஞன் மின்னல்வேகத்தில் காட்டுப்பாதையில் நடந்து கொண்டிருந்தான். ஓரிடத்தில் ஒரு துறவி அவனைப்பார்த்தார். அவன் போகும் இடத்தைத் தெரிந்து கொண்டார். தம்பி ! நானும் நீ செல்லும் இடத்திற்குத்தான் வரவேண்டி உள்ளது சற்று பொறு. சேர்ந்து போகலாம் என்றார்.

ஆனால் அவனோ அவரை ஒரு மாதிரியாகப் பார்த்துவிட்டு,மின்னல் வேகத்தில் போய்விட்டான். குறிப்பிட்டதூரம் தான் அவனால் வேகமாகச் செல்லமுடிந்தது. அவ்வளவுதான்! கால்கள் வலிக்க ஆரம்பித்தன. ஒரு கட்டத்தில் , கால்கள் கடுமையாக வீங்கி நடக்க முடியவில்லை. அங்கேயே படுத்துவிட்டான். நாக்கு வறண்டது. குவளையை எடுத்துக்கொண்டு சற்று தூரத்தில் தெரிந்த குளத்துக்குக்கூட போகமுடியவில்லை.

பின்னால் வந்த துறவி அந்த இடத்தைக்கடந்தார். தன்னை ஊதாசீனம் செய்துவிட்டு நடந்த இளைஞனின் நிலைமையைப் புரிந்துகொண்டார். தண்ணீரைக் கொடுத்தார். இளைஞனுக்கு மூச்சு வந்தது.

தம்பி நாம் அடையவேண்டிய இலக்கை எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் எட்ட வேண்டியது அவசியம்தான்! உன் வேகம் பாராட்டத் தக்கது. ஆனால் , நம்மைச் சார்ந்துள்ளவர்களை அனுசரித்து செல்லும் விவேகத்தைக் கற்றுக்கொண்டால்தான், அந்த இலக்கு சாத்தியமாகும்என்றார்.

**உறுதி கொள்ளுங்கள்**

1.நான் எவரையும் ஏமாற்றமாட்டேன்.

2.எவருக்கும் சிரமங்கள் கொடுக்கமாட்டேன்.

3.எவருக்கும் தீயதை சொல்லமாட்டேன்.

4.நன்றாக இருப்பவர்களைப் பார்த்து பொறாமைப்படமாட்டேன்.

5.மற்றவர்களைக் கிண்டலாகப்பேசி மற்றவர்கள் தவறுகளைப் பெரிதாக்கி வீண் அரட்டை அடிக்கமாட்டேன். மனதைப் புண்படுத்த மாட்டேன்.

6.தவறான வழிகளில் வரும் பணத்துக்கு ஆசைப்படமாட்டேன்.

7.எந்த தவறான வழிக்கும் போகமாட்டேன்.

8.என் வேலையை ஒழுங்காகச் செய்வேன்.

9.என் வேலையை உண்மையாய் செய்வேன்.

10.வேலைசெய்யும்போது தேவையின்றி அடிக்கடி பேசமாட்டேன்.

11.பிறருக்கு எவ்விதத்திலும் தீங்கு தராது நன்மை தருமாயின் அவசியமானால் பொய் சொல்வேன்.

12.அம்மா அப்பாவிற்கு மரியாதையாய் இருப்பேன்.

13.வயதில் பெரியவர்களுக்கு மரியாதை தருவேன்.

14.இன்றைக்கு என்னால் முடிந்த ஒரு சின்ன உதவி மற்றவர்களுக்கு செய்வேன்.

15.கடவுளை வணங்கிக் கொண்டு இதையெல்லாம் சொல்லிவிட்டு அதன்படி நடக்கவில்லை யென்றால் அதற்கும் பெரிய தண்டனை பின்னர் கிடைக்கும் என்பது எனக்குத் தெரியும். சொன்னபடி நடப்பேன்.

மேற்கூறிய உறுதிமொழியை வீட்டில் உள்ள கடவுள் படத்தின் முன்னின்று கூறிவாருங்கள் உங்கள் வாழ்வில் நன்மையே நடக்கும்.

## கவனமாய் இருப்போம்

(படித்தில் பிடித்தது)

வழி நெடுகிலும் வாகனங்கள்
பயணங்களில் கவனமாய் இருப்போம்!

வார்த்தைகள்வாழ்க்கையை தீர்மானிக்கின்றன
பேசுவதில் கவனமாய் இருப்போம்!

சிந்தனையே செயலை முடிவு செய்கிறது
எண்ணங்களில் கவனமாய் இருப்போம்!

எழுத்துக்கள் எப்போதும் ஆதாரம்
கையெழுத்தில் கவனமாய் இருப்போம்!

சாதிக்க குணங்களே சந்தர்ப்பம் தருகின்றன
நடத்தையில் கவனமாய் இருப்போம்!

வறுமையில் பணத்தின் அருமை தெரிகிறது
சேமிப்பில் கவனமாய் இருப்போம்!

பிரிவில்தான் பாசத்தின் பெருமை தெரிகிறது
நேசத்தில் கவனமாய் இருப்போம்!

கல்விதான் அறிவை தீர்மானிக்கிறது
படிப்பில் கவனமாய் இருப்போம்!

முகம்தான் நினைப்பதை வெளியே காட்டுகிறது
அக அழகினில் கவனமாய் இருப்போம்!

பொய்தான் நம்பகத் தன்மையை அடையாளப் படுத்துகிறது
உண்மையில் கவனமாய் இருப்போம்!

வேலையின் விளைச்சலே பதவியை உயர்த்திடும்
உழைப்பதில் கவனமாய் இருப்போம்!

தயக்கத்தில்தான் வெற்றிகள் தள்ளிப்போகிறது
தைரியத்தில் கவனமாய் இருப்போம்!

வாழ்க்கை என்பது நிரந்தரமற்றது
மகிழ்ச்சியில் கவனமாய் இருப்போம்!

எனது என்பது நிரந்தரமற்றது
ஈகையில் கவனமாய் இருப்போம்!

புகழ் ஒன்றே காலத்தால் அழியாதது
சாதனையில் கவனமாய் இருப்போம்!

என்.எகம்பவாணன்,சென்னை

## வேலைகளல்ல வேள்விகளே!

வெறுங்கை என்பது மூடத்தனம் உன்
விரல்கள் பத்தும் மூலதனம்!
கருங்கல் பாறையும் நொறுங்கி விழும் உன்
கைகளில் பூமி சுழன்று வரும்!
கால்நகம் கீறிய கோடுகள் வழியே
கங்கையும் சிந்துவும் ஓடிவரும் உன்
தோள்க ளிரண்டும் தெற்கு வடக்காய்த்
துருவங் களுக்குப் பாலமிடும்!
மண்புழு வல்ல மானிடனே உன்
மாவலி காட்டு வானிடமே!
விண்ணிலும் மண்ணிலும் விளைவுகளே
இவை வேலைகளல்ல வேள்விகளே!

கவிஞர் தாரா பாரதி

## தெரிந்துகொள்வோம்!

எல்லாம் தெரியும்! நமக்குதான் எல்லாம் தெரியும்.மற்றவர்களுக்கு எதுவும் தெரியாது என்றுநினையாதீர்கள! நமக்கு அனைத்தையும் கற்றுக்கொடுத்தவர்கள் மற்றவர்கள்தான்!

நேரம்! நேரத்தை , வீணாக்கும்போது கடிகாரத்தைப் பாருங்கள். ஓடுவது முள் அல்ல. உங்கள் வாழ்க்கைதான்.

நேரத்தின் மதிப்பு!ஒரு பவுண்ட் தேனை சேகரிக்க, தேனீ இருபது லட்சம் மலர்களைத் தேடிச்செல்கிறது.

புகழ்ச்சி! நண்பனை அவன் இல்லாதபோது மனமாரப் புகழவேண்டும்.

நல்வழிகாட்டிய ஆசிரியரை வந்த இடத்திலும் புகழவேண்டும்.மைந்தர்களை நெஞ்சுக்குள் புகழவேண்டும். வேலையாட்களை வேலை முடிந்தபின் புகழவேண்டும்.

அம்மா! சிந்திக்கத் தெரிந்த மனிதன் அம்மாவை மம்மி! என்கிறான். சிந்திக்கத் தெரியாத விலங்கினமோ அம்மாவை அம்மா! என்றே அழைக்கின்றன.

## நீங்கள்!

நீங்கள் நீங்களாக இருங்கள். மற்றவர்கள் என்ன நினைப்பார்களோ என்ற கவலை உங்களுக்கு இருக்கும் வரை நீங்கள் நீங்களாக இருக்க முடியாது. மற்றவர்களின் அடிமையாகத்தான் இருந்தாகவேண்டும்.

## கணிதப் புதிர்விடைகள்.

1)A- 6,B- 4.C-9, மொத்தம் குழந்தைகள். 2) கிரீஸ்டிராமா, ஸ்பெயின்பிஸெடா ஸ்வீடன்குரோனர், 3) 1008
4) 180,90,30

## விடுகதை விடைகள்

1.நகம் 2.காலண்டர் 3.காகம் 4.உப்பு 5.தபால்பெட்டி 6.மாட்டுக்கொம்பு
7.முகம்பார்க்கும் கண்ணாடி 8.பந்து 9.பூட்டும் சாவியும் 10.பேனா

# மணமகன் / மணமகள் தேவை

**முக்கிய குறிப்பு :** எங்களுக்கு வரும் விபரங்களின் அடிப்படையில் இப்பகுதியில் வரும் விளம்பரங்கள் தொகுக்கப்படுகின்றன, கொடுக்கப்பட்டிருக்கும் தகவல்களைச் சரிபார்த்து தீர விசாரித்து முடிவுகள் எடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறோம்.

| பெயர்<br>நட்சத்திரம் | பிறந்த தேதி<br>உயரம் | படிப்பு | வேலை | முகவரி |
|---|---|---|---|---|
| **B 1/11** செல்வி<br>**Dr. V. Priyadharshini**<br>Uthradam 4th Patham<br>Koodaluda<br>பூர்வீகம் : MA. Melvanniyur, Chidambaram<br>விருப்பம் : Middle / Upper Middle Class Caring, Supportive and Family oriented, Well educated, preferably Doctor. | Jan. 1995<br>5' - 2" | Internal Medicine M.D., | Sr. Resident Doctor at a Private Medical College, Chennai<br>Rs. 12-18 Lakhs/PA | திரு. J. Venugopalan,<br>B-703, Solitaire Appartments,<br>Mount Poonamallee High Road,<br>Porur, Chennai - 600 116<br>Cell : 99404 77263, 98949 28283<br>E-mail : venugopalan_ j@yahoo.com |
| **B 2/1** செல்வி **B. அனிதா**<br>மூலம் – 4ம் பாதம்<br>காலிங்கராய<br>பூர்வீகம் : அருகேரி<br>விருப்பம் : நன்கு படித்த பணியில் உள்ள வரன். | **12.11.99**<br>160 cm | B.Com., | | திரு. G. பாஸ்கர்,<br>மேற்கு தெரு, அருகேரி,<br>கொத்தட்டை அஞ்சல்,<br>திட்டக்குடி வட்டம்,<br>கடலூர் மாவட்டம் – **606 105.**<br>Cell : **99769 64604** |
| **B 3/1** செல்வி **T. ஜனனி**<br>உத்திராடம்<br>வங்காரமுட<br>பூர்வீகம் : சூரியனார் கோவில்<br>விருப்பம் : படித்த வேலையில் உள்ள வரன் | **2.3.2000**<br>162 cm | B.Com., | Accenture Solutions India<br>Rs. 20,000/- PM | திரு. S. Thiruselvam<br>MIG 96, 1st Cross Street,<br>Mogappair Eri Scheme,<br>Chennai - 600 037.<br>Cell : **93617 69167, 94448 92845**<br>E- Mail : stselvam1963@gmail.com |
| **B 4/1** செல்வி **S. பத்மபிரியா**<br>உத்திரம்<br>குருகுலராய<br>பூர்வீகம் : பெண்ணாடம்<br>விருப்பம் : சென்னை (அ) பெங்களூர் (அ) ஹைதராபாத் பணியில் உள்ள வரன். | **18.6.2002**<br>5' - 6" | B.Sc. Optometry | ராஜன் கண் மருத்துவமனை | திரு. K. சண்முகநாதன்,<br>49/1, காமராஜர் தெரு,<br>பெண்ணாடம் – **609 105.**<br>Cell: **97158 61571, 97155 50815** |
| **B 5/1** செல்வி **சு. நிவேதா**<br>மகம்<br>தூதுகுடையான்<br>பூர்வீகம் : கும்பகோணம் | **25.08.95** | B. Arch.,<br>M. Plan (Transport)<br>SPA Delhi | Transport Planer, MNC, Nature of Work In system only | திரு. தி. சுப்பராயன், Rtd. SE TNEB<br>No. 4C, ஜெயலட்சுமி அபார்ட்மெண்ட்,<br>சுபஷ்ரி நகர் விரிவாக்கம்,<br>முகலிவாக்கம், சென்னை–600116<br>Cell : **94431 24630, 94453 75681** |
| **B 6/1** செல்வி **R. அபிநயா**<br>ஆயில்யம் 4ம் பாதம்<br>வங்காரமுட<br>தலைச்சங்காடு | **15.12.2000**<br>152 cm | B.Sc., MCA., | Ex. Sutherland Pursuing New Career Path | திரு. R. சந்திரா,<br>**1/4**, வெள்ளாளர் தெரு,<br>தலைச்சங்காடு,<br>தரங்கம்பாடி தாலுகா,<br>மயிலாடுதுறை – **609 107.**<br>Cell : **98941 83648, 90426 72827**<br>E-mail :arulselvan.m1983@gmail.com |
| **B 7/1** செல்வி **P. தேவதர்ஷினி**<br>விசாகம் 3ம் பாதம்<br>செஞ்சலுட<br>பூர்வீகம் : திருவிடைமருதூர் | **19.7.2002**<br>175 cm | B.E. (ECE) | ZOHO Company, Chennai | திரு. R. பொன்னரசன்,<br>90/A, தெற்கு வீதி, திருவிடைமருதூர்,<br>தஞ்சாவூர் மாவட்டம் – **612 104.**<br>Cell : **88380 01039,**<br>**94428 61136** (W) |

| பெயர்<br>நட்சத்திரம் | வயது<br>உயரம் | படிப்பு | வேலை | முகவரி |
|---|---|---|---|---|
| **B 8/1** செல்வி **M. தனலட்சுமி**<br>உத்திரம் 4ம்பாதம்<br>பழுவுட<br>பூர்வீகம் : பெண்ணாடம்<br>விருப்பம் : சமபடிப்பு | **07.05.98**<br>154 cm | B.Tech (CS) | Software<br>Professional<br>EPSILON<br>Bangalore<br>Rs. 12 Lakhs/PA | திரு. K. மணிகண்டன்,<br>G1, Ashok Manor, Ruby Builders,<br>5/2, Kalamegam Street,<br>East Tambaram, Chennai - 600 059.<br>Cell : **94447 11045, 99416 20355** |
| **B 9/1** செல்வி **வி. உதயா**<br>விசாகம் 1ம் பாதம்<br>நெப்புட<br>பூர்வீகம் : விருத்தாசலம் | 7.5.2001<br>158 cm | B.E. (EEE) | Accenture Solutions<br>Pvt. Ltd.,<br>Software Developer<br>Chennai<br>Rs. 6 Lakhs/PA | திரு. ப. விருத்தகிரி,<br>எண். 38, வடக்கு கோட்டை வீதி,<br>விருத்தாசலம் – **606 001.**<br>கடலூர் மாவட்டம்.<br>Cell : **94871 39898, 94439 88336** |
| **B 10/1** செல்வி **S. சத்யா**<br>சதயம்<br>பஞ்சதரிய<br>பூர்வீகம் : கெளுத்தூர் | **20.05.98**<br>5' - 6" | B.Sc.<br>(Computer<br>Science)<br>MBA., | Welfare Officer<br>(Young Brand<br>Apparel Pvt. Ltd.,)<br>Rs. 3,00,000/PA | திரு. A. செந்தில்,<br>23, அ. கரையான் தோப்பு,<br>ராஜா தெரு, திருவிழந்தூர்,<br>மயிலாடுதுறை – **609 001.**<br>Cell: **94873 32726, 94454 53251, 94452 97413** |
| **B 11/1** செல்வி **S. Sivasangari**<br>Sadayam<br>Kothanuda<br>பூர்வீகம் : Kothatai<br>விருப்பம் : IT துறையில் பணிபுரியும் வரன். | **20.9.2002** | B.Tech (IT) | Associate Software<br>Developer in<br>Accenture<br>Chennai | திரு. T. Sivanesan,<br>No. 2, North Street,<br>Srimushnam,<br>Cuddalore District - 608 703.<br>Cell : **76676 66897** |

## கும்பகோணம் மண்டல கார்காத்தார் சமூக நலச்சங்கம்
## 30வது மங்கல சந்திப்பு

கும்பகோணம் மண்டல கார்காத்தார் சமூக நலச்சங்கம் சார்பாக வருகின்ற **05-04-2026 ஞாயிற்றுக்கிழமை** மங்கல சந்திப்பு நடைபெற உள்ளது. மங்கல சந்திப்பு நிகழ்ச்சி வெண் திரை மூலம் வரன்கள் அறிமுகம் செய்யப்பட இருப்பதால் விண்ணப்பத்துடன் புகைப்படம் அவசியம் இணைக்கவும்.

**பதிவு ஒன்றுக்கு ரூ. 600/-**

விண்ணப்பம் வேண்டுவோர் கீழ்கண்ட வாட்ஸ் அப் எண்ணிற்கு தொடர்பு கொண்டு பெற்று கொள்ளவும். **வெளியூர் கார்குல சொந்தங்கள் கீழ்க்கண்ட முகவரிக்கு பூர்த்தி செய்த விண்ணப்பத்தை கொரியர் வாயிலாக அனுப்பவும்.**

முகவரி : திரு. **M.R.K. பாண்டியன்** (அ) **R. சுகுமார்,**

17/18, பெரிய அப்பாவு தெரு, கும்பகோணம். செல் : 7598073235 / 9442013459

மங்கல சந்திப்பு பதிவு ரூ. 600/–ஐ **A.S. பழனி** என்ற பெயரில் வரையோலையாக மட்டும் அனுப்பி வைக்கவும் அல்லது நேரில் செலுத்தவும். மங்கல சந்திப்புக்கான இடம் வரன் பதிவு செய்பவர்களுக்கு வாட்ஸ் அப் வாயிலாக தெரிவிக்கப்படும். பதிவு இல்லாமல் புத்தகம் தர இயலாது.

மேலும் விவரங்களுக்கு **S. விஜயகுமார்** – 9443984770

**A.S. பழனி** – 8870342493, **M. சாமிநாதன்** – 9443662462

**T.S. சூரியநாராயணன்** – 9443589510

சுயம்வர பார்வதி கலா ஹோமத்துடன் இனிதே ஆரம்பம் ஆகிறது. அன்றைய தினம் பதிவு செய்பவர்களுக்கு புத்தகம் கிடைப்பது அரிது. புத்தகம் வேண்டுவோர் வரன் விவரப் பட்டியலுடன் 31–03–2026–க்குள் பதிவு செய்யவும். பதிவு செய்தவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.

– **S. விஜயகுமார்,**
செயலாளர்.

| பெயர்<br>நட்சத்திரம் | வயது<br>உயரம் | படிப்பு | வேலை | முகவரி |
|---|---|---|---|---|
| **G 1/1** செல்வன் **சி. அட்சயாபாலன்**<br>பூசம்<br>குளத்துட<br>பூர்வீகம் : தில்லைவிடங்கன்–சீர்காழி தாலுக்கா | 10.11.98<br>5' - 7" | B.E. (EEE)<br>P.G.D. (P.P.E.) | Assistant Manager<br>ENOC - Adani Power Ltd.,<br>Ahmedabad, Gujarat<br>Rs. 8.5 Lakhs/PA | திரு. பா. சிவகுமார்,<br>73, ஜே.ஜே. நகர், 1வது தெரு,<br>மருத்துவக் கல்லூரி சாலை,<br>தஞ்சாவூர் – 613 007.<br>Cell : 94897 57677, 96293 81975 |
| **G 2/1** செல்வன் **சி. சிவானந்தம்**<br>உத்திரம்<br>முள்ளுட<br>பூர்வீகம் : வரிச்சிக்குடி, காரைக்கால்<br>விருப்பம் : பணியில் உள்ள வரன் | 21.06.99<br>178 cm | B.Tech (ECE),<br>M.Tech (NIS) | Network Engineer<br>(RAN) LMJ<br>Innovations Amentum<br>Bengalure | திரு. குமார் (எ) சிவ. சிதம்பரம்,<br>1, பங்களா தெரு,<br>தேவானூர் சாலை,<br>வரிச்சிக்குடி,<br>காரைக்கால் மாவட்டம்<br>Cell : 97873 10010, 91509 16765 |
| **G 3/1** செல்வன் **பா. மதுபாலன்**<br>புனர்பூசம்<br>பொன்னாமுட<br>பூர்வீகம் : முத்துசேர்வாமடம்<br>விருப்பம் : டிகிரி படித்த வரன் | 05.11.93<br>5' - 6" | B.E.<br>(Mechanical), | கனடாவிற்கு<br>2 முறை டூரிஸ்ட்<br>விசாவில் சென்று<br>வந்தவர் | திரு. C. பாண்டியன் பிள்ளை,<br>மேல வெள்ளாளர் தெரு,<br>முத்துசேர்வாமடம் அஞ்சல்,<br>உடையார் பாளையம் தாலுகா,<br>அரியலூர் மாவட்டம் – 612 903.<br>Cell : 97159 63640, 80987 71252 |
| **B 4/1** செல்வன் **M. INIYAN**<br>Mirugasreesam<br>Kaaruda | 12.04.97<br>5' - 7" | MBA in<br>Finance<br>Management | Chola General<br>Insurance Finance<br>& Accounts<br>Rs. 4.2 Lakhs/PA | திருமதி. M. Vijayalakshmi,<br>No. 1231, 3rd Floor, Block 12,<br>NPL Anjali Apartment, 108, MTH Road,<br>Villivakkam, Chennai - 600 049.<br>Cell : 99624 47639, 91718 58499 |
| **G 5/1** செல்வன் **வே. சிவகணேஷ்**<br>அஸ்தம்<br>காலிங்கராய<br>கே. ஆடூர், சிதம்பரம் Tk.<br>விருப்பம் : படித்த பணியில் உள்ள வரன் | 13.12.98<br>5' - 10" | B.Tech<br>(EEE) | Account Executive<br>Kovai. Co<br>கோவை<br>Rs. 10 Lakhs.PA | திரு. ந. வேல் மாணிக்கம்,<br>64, சாரதாராம் நகர்,<br>சீர்காழி மெயின் ரோடு,<br>சிதம்பரம் – 608 001.<br>Cell : 96293 30395, 84892 51160 |
| **G 6/1** செல்வன் **பா. ஆதித்யன்**<br>உத்திரட்டாதி 4ம் பாதம்<br>பஞ்சதரிய<br>பூர்வீகம் : கெளுத்தூர்<br>விருப்பம் : சமபடிப்பு, வேலையில் உள்ள வரன் | 17.08.92<br>5' - 11" | B.E.,<br>(ECE) | ராம்கோ சிஸ்டம்<br>சென்னை<br>Rs 14 Lakhs/PA | திரு. A. பாலசுப்ரமணியன்,<br>23A, கரைலயான் தோப்பு,<br>ராஜா தெரு,<br>திருவிழுந்தூர்,<br>மயிலாடுதுறை – 609 001.<br>Cell : 94873 32726, 94454 53251 |
| **G 7/1** செல்வன் **S. ஞானமுருகன்**<br>உத்திரட்டாதி<br>விழுப்பதரிய<br>பூர்வீகம் : K.ஆடூர்<br>விருப்பம் : பட்டதாரி பெண் | 18.12.96<br>165 cm | B.Sc.,<br>MBA (HR) | Camp Saudi Arabia<br>HR Asst.<br>Rs 12 Lakhs/PA | திரு. N. சண்முகம்,<br>34, 3வது கிராஸ்,<br>வைகை நகர்,<br>சி.தண்டேஸ்வரநல்லூர்<br>சிதம்பரம்<br>Cell : 97867 98656, 93456 43523 |
| **G 8/1** செல்வன் **அரவிந்த்தராஜ்**<br>சுவாதி<br>குழுமுடையான்<br>பூர்வீகம் : நாகமங்கலம் | 20.05.97<br>165 cm | B.E. (EEE), | துபாய்<br>Rs 1,00,000/PM | திரு. க. சந்திரசேகரன் பிள்ளை,<br>வடக்கு தெரு,<br>நாகமங்கலம் – 621 701.<br>அரியலூர் மாவட்டம்<br>Cell : 90477 50297 |

## கோபூஜை செய்வோம்.... நற்பலன்களை பெறுவோம்....

கோ என்றால் உலகம். உலகில் உள்ள சகல ஜீவன்களுக்கும் தன் பாலை கொடுக்கும் தாய் போல் விளங்குவதால் பசுவை கோமாதா என்கிறோம்.

பகவான் பிரம்மா தனது சிருஷ்டியில் உலகம் உய்ய முதலில் பசுவை படைத்து அதன் உடலின் பதினான்கு உலகையும் முப்பத்து முக்கோடி தேவர்களையும் இருக்கச் செய்தார். அதில் முதலில் வந்தவர்களான தர்மராஜனையும், காலதேவனையும் முகத்தில் இருக்க செய்தார். மற்றவர்கள் உடல் எங்கும் குடியேற செய்தார். அதில் கங்கையும், மகாலட்சுமியும் தாமதமாக வந்தார்கள். இதனால் மஹாலட்சுமிக்கும், கங்கைக்கும் பசுவின் உடலில் இருக்க இடம் இல்லை என்கிறது தேவிபாகவதம்.

கோமாதாவின் உடலில் இடம்பெற லட்சுமியும், கங்கையும் மிகவும் வேண்டினார்கள். எங்கேயாவது இருக்க ஓர் இடம் கொடுத்தால் போதும் என்றனர். கோமாதாவும், உடலிலிருந்து வரும் சாணம், கோமூத்ரம் இரண்டும் யாருக்கும் சொந்தமாகவில்லை, நீங்கள் விரும்பினால் அதில் இருக்கலாம் என்று சொல்ல.... லட்சுமியும், கங்கையும் மிகுந்த சந்தோஷத்துடன் அந்த இடத்தில் இருக்க சம்மதித்தார்கள். அதனால் இன்றைக்கும் பசுவின் பின்புறத்தில் லட்சுமியும், கங்கையும் இருப்பதாக சாஸ்திரம். அதனால் பசுவின் சாணமும், கோமூத்ரமும் சகல பாபங்களையும் போக்கி லட்சுமி கடாட்சம் அளிக்கக் கூடியது என்கிறது தர்ம சாஸ்திரம். பிரம்மஹத்தி தோஷம் இருப்பவர்கள் பசுவைத் தானமாகக் கொடுத்தால் அந்த தோஷம் எல்லாம் விலகும் என்று அதர்வண வேதம் சொல்கிறது.

கோபூஜை சகல வித தோஷத்தையும் நீக்கும். அதனால் தான் கோபூஜை மிகவும் பிரசித்தி பெற்று விளங்குகிறது. பசுவை வழிபாட்டால் எல்லா தெய்வங்களையும் வழிபட்ட பலனை அடையலாம் என்கின்றது புராணங்கள். பல கோடி யாகங்கள் செய்த பலனும், ஏழேழு ஜென்மங்கள் தவம் இருந்த புண்ணியமும் ஒரே ஒரு முறையில் கிடைத்து விடும்.

அந்த காலத்தில் முனிவர்கள் கோபூஜையை விரும்பிச் செய்தார்கள். ஆதிசங்கரர் பசு தான் இந்த உலகிற்கு அன்னை என்று சொல்லி அதன் பெருமையை உலகிற்கு சொல்லி இருக்கிறார்.

பசு நுழைந்த வீட்டில் தீய சக்திகள் அண்டாது. முன்பு அரசர்களின் ஊர்வலங்களில், பசுதான் முதலில் செல்லும். அதிகாலையில் பசுவை தரிசனம் செய்தால், எல்லா தீர்த்தங்களிலும் நீராடிய பலன் கிடைக்கும் என்பது ஐதீகம்.

வீட்டில் கிரகப்பிரவேசம் செய்யும் பொழுது, கோபூஜை செய்து... பசுவும், கன்றும் வீட்டிற்குள் நுழைந்த பிறகே, வீட்டினர் குடியேறுவர். இவ்வாறு செய்வதால் சகல தோஷங்களும் விலகி, சகல சம்பத்தும் கிடைக்க அது வழிகாட்டும் என்பது நம்பிக்கை.

'பஞ்சகவ்யம்' – பால், தயிர், வெண்ணெய், கோமியம், சாணம் இந்த ஐந்தும் கலந்த கலவையே 'பஞ்சகவ்யம்' என்று அழைக்கப்படுகிறது. வீட்டில் குழந்தை பிறந்து புண்ணியாகவாசனம் சடங்கு செய்யும் போது பஞ்சகவ்யம் தம்பதியருக்கும் மற்றவர்களுக்கும் கொடுக்கப்படும்.

**கோபூஜை :** பசுவின் வாலைத் தொட்டுக் கும்பிட்டாலே வந்த தடைகள் விலகும். கோவில்களில் அதிகாலை நேரம் நடைபெறும் கோபூஜையில் கலந்து கொண்டால், சகல ஐஸ்வர்யங்களும் இல்லத்தில் குடிகொள்ளும். மேலும் கிரக தோஷங்கள், பாவங்கள், சாபங்கள் அகல எளிய வழிபாடு கோபூஜை தான்.

கோபூஜையை வீட்டில் செய்தால், சகல சௌபாக்கியங்களும் கிடைக்கும். பசுவின் உடம்பில் அனைத்து விதமான தெய்வங்களும், தேவர்களும், முனிவர்களும், நவக்கிரகங்களும் குடியிருப்பதால், கோபூஜை செய்யும் பொழுது அனைவருடைய பரிபூரணமான அருளும் நமக்கும் கிடைப்பதோடு, அனைத்து விதமான தோஷங்களும் நிவர்த்தியடைகின்றன.

பசுவை கன்றுடன் சேர்ந்து மூன்று முறை வலம் வந்து நமஸ்காரம் செய்து கீழ் உள்ள மந்திரத்தை சொல்ல நற்பலன்கள் கிடைக்கும்.

ஓம் காமதேனுவே நமஹ, ஓம் சகல தேவதா ரூபிணியே நமஹ, ஓம் மகா சக்தி ஸ்வரூபியே நமஹ, ஓம் மகாலட்சுமி வாசின்யை நமஹ, ஓம் வ்ருஷப பத்னியே நமஹ, ஓம் சௌபாக்ய தாரிண்யை நமஹ, ஓம் சர்வ ரட்சிண்யை நமஹ, ஓம் ரோஹ நாசின்யை நமஹ, ஓம் ஜய வல்லபாயை நமஹ, ஓம் க்ஷீர தாரிண்யை நமஹ, ஓம் பயிலாயை நமஹ, ஓம் சுரப்யை நமஹ, ஓம் சுசீலாயை நமஹ, ஓம் மகா ரூபிண்யை நமஹ, ஓம் சகல சம்பத் தாரிண்யை நமஹ, ஓம் சர்வ மங்களாயை நமஹ.

பின்னர் அகத்திகீரையை பசுவிற்கு கொடுக்கலாம். இதனால் சகல தெய்வங்களின் ஆசியும் பரிபூரணமாக கிடைக்கும். எல்லா திருக்கோயில்களுக்கும் சென்று வந்த புண்ணியமும் கிட்டும்.

ஒவ்வொருவரும் பூஜையறையில் கோமாதா அல்லது பசுவும் கன்றும் இணைந்த படம் அல்லது விக்ரகத்தை வைத்து வழிபட்டு நற்பலன்களை பெறுவோம். கோபூஜை செய்து வாழ்வில் அனைத்துச் செல்வங்களையும் குறைவில்லாமல் பெறுவோமாக!!!

– அர்ச்சனா சுவேதாரண்யம்,
பெசன்ட் நகர், சென்னை–90.
செல் : 9943702054

## இயலாமை (Disability)

Dr. D. Kalyanakumar

முடியும் என்றால் விடியும் உடலில் ஏற்படும் பலவீனங்களோ, பாதிப்புகளோ, அங்க கோளாறுகளோ இயலாமை அல்ல. அது மனதின்றி முயற்சியில் ஈடுபடுவதும், நம்பிக்கை இன்றி செயல்களில் ஈடுபடுவதுமாகும். இயலாமை என்பது ஒரு உடல் குறைபாடு அல்ல. அது எதிர்மறை எண்ணங்களால் மனதைத் தாக்கி அது இயலாமல் செய்வதாகும். பாதிக்கப்பட்ட உடல் அல்ல. பாதிக்கப்பட்ட மனமே இயலாமை ஆகிறது. நம் மனதில் என்ன ஓடுகிறது. மனதை எந்த கோணத்தில் இட்டுச் செல்கிறோம். மனதால் தோல்வி ஒப்புக்கொள்கிறோமா என்பதைப் பொறுத்து நம் இயலாமை தீர்மானிக்கப்படுகிறது. முயலாமை (முயற்சி செய்யாமை) என்பது இயலாமைக்கான (முடியாமல்போவதற்கு) மிகமுக்கியக் காரணம். முயற்சி இல்லாமல் வெற்றி, வளர்ச்சி, கற்றல் போன்றவை சாத்தியமில்லை. மேலும் இது ஒருவரின் திறமையையும் வாய்ப்புகளையும் வீணடிக்கிறது.

இயலாது என்பது முட்டாள்களின் அகராதியில் உள்ள சொல் என்றார் புகழ் பெற்ற பிரான்ஸ் நாட்டு அரசர் நெப்போலியன் போனபார்ட். இயலாது என்ற கோணத்தில் எந்த செயலை நோக்கினாலும் அச்செயலைசெய்துமுடிக்கதடையாகஇருப்பவைகளே கண்களுக்கு தெரியும். ஒரு செயலை செய்து முடிக்க முடியும் என்ற எண்ணமும், அதே செயலை செய்து முடிக்க முடியாது என்ற எண்ணமும் மனதின் பிரதிபலிப்புகளே இயலாது என்று மனம் கூறும்போது அச்செயலை செய்து முடிக்க சிந்தனைகளும் உடலும் துணிவதில்லை. சக்தி குன்றியவர்களாகவே நாம் மாறிவிடுகிறோம்.

ஒவ்வொரு உயிரினமும், ஏதோ ஒரு பயன்பாட்டிற்காகத்தான் உலகில் இருக்கிறது. பரிணாம வளர்ச்சியின்படி வெவ்வேறு திறமைகள், வெவ்வேறு உயிரினங்களிடம் உள்ளன. அனைத்து திறமைகளும், ஒருங்கே உள்ள உயிரினம் என்பது கிடையாது. கழுதை பொதி சுமக்கும்; நாய் மோப்பம் பிடிக்கும். இவை திறமை; அதாவது இயன்ற விஷயங்கள். கழுதையால் மோப்பம் பிடிக்க முடியாது. நாயால் பொதி சுமக்க முடியாது. அதேபோல்தான் மனிதர்களிடமும், சில விஷயங்கள் சிலரால் முடியும், பலரால் முடியாது. உதாரணம், திறமையாக சமைப்பவரால், இனிமையாக பாட முடியாது. எல்லாரும், எல்லாவற்றிலும், திறமையாக இருக்க வேண்டிய அவசியம் இல்லை. எல்லாம் இயலும் என்று நம்புவது அறிவீனம்.

பலர் தங்களின் உடல் நலத்தையும், சமூகச் சூழலையும், வசதி வாய்ப்பு குறைவுகளையும் குற்றம் கூறி முன்னேற்றத்திற்கான பாதையை மூடிவிடுகின்றனர். தங்கள் இயலாமைக்குமற்றவர்களை காரணம் காண்பது முன்னேற்றத்திற்கான வழி அல்ல. இருக்கும் நிலை எதுவாக இருந்தாலும், மனம் துணிவு பெற்றால் மிகக் கடின இலக்குகளையும் எட்ட முடியும். இதைத்தான் ஸ்டீபன் ஹாக்கிங் "வெற்றிகள் குவிப்பதற்கு உடலின் குறைபாடுகள் ஒரு தடையாக இருக்க முடியாது" என்று கூறினார்.

தடைகளை மீறி வெற்றி குவித்தவர்களின் சரித்திரங்கள் வரலாற்று ஏடுகளில் நிரம்பியுள்ளது. சூழல் கடினமாகும் போது முயற்சியின் கடுமை அதிகரிக்க வேண்டுமே, தவிர முயற்சியின்மை அதிகரிக்க கூடாது. நம் குறிக்கோள்களை எட்ட வேண்டியது நம் கடமை. அதற்கு தேவையான உந்துதல் மனதில் இருந்து வரும் போது வெற்றிகள் அருகில் வந்து விடுகிறது.

இயலாமை என்ற மாயையை மனதைவிட்டு அகற்ற முடியாத காரணத்தால், நல்ல உடல்வாகு உள்ளவர்கள் கூட திறன்கள் அற்றவர்களாக மாறிவிடுகின்றனர். மனதை கட்டுப்படுத்தி, நெறிப்படுத்தி உயர்வை நோக்கி இட்டுச் செல்பவர்களுக்கு, சாதனைகள் நிகழ்த்துவதற்கு உடலின் வலிமை குன்றல் ஒரு பெரிய தடையல்ல என்பது உண்மையே அதே நேரத்தில் மனதினை தாழ்வு மனப்பான்மையினால் கறைபடுத்தினால் பாதகங்களும் கூடவே தொடரத்தான் செய்யும்.

நம்பிக்கை உயர்வாக உள்ள போதும், முடியும் என்று உறுதியாக நம்பும் போதும் பயம் கலைந்து போகும்.. எதிர்பாராத துணிவு மனதில் பிறக்கும். உடலின் குறைபாடும், திறமையின் குறைபாடும், வசதி வாய்ப்பின் குறைபாடும், நம் குறிக்கோள் நோக்கிய பயணத்தை தடுத்து விட முடியாது. விட்டு விட்டு வெளியேற வேண்டும் என்று மனம் கூறினால் விட்டு விட்டு வெளியேறக்கூடாது என்று மனதிற்கு கட்டளையிட வேண்டும். காரணம் இயலாமை என்பது வெறும் ஒரு மனநிலையே. உங்கள் வாழ்க்கையை நீங்கள் விரும்பியபடி சிறப்பாக கொண்டு செல்வது உங்கள் கையில் உள்ளது என்பதை ஆணித்தரமாக நம்பி செயலாற்றினால் வெற்றி என்பதை கண்டு உணர்வீர்கள். வாழ்க்கையில் ஒவ்வொரு நொடியும், நமக்கு முக்கியமானது, சில சமயம் எதிர்மறை எண்ணங்களால் நம் எண்ணம் தடைபடுகிறது. நமது இயலாமை நம்மை திசை திருப்பிவிடுகிறது. இயலாமையை வெற்றி கண்டால் வாழ்வில் இனிமையை பெறலாம்.

## கம்பன் கண்ட பாசப்பசுவும் கன்றும்

சென்ற இதழ் தொடர்ச்சி...

கோபம் அடையாத இராமனைப் பாடிப் பற! சீதையின் கணவனாகிய இராமனைப் பாடிப் பற என்ற கருத்திலே,

'மாற்றுத் தாய் சென்று வனம் போகே என்றிட
ஈற்றுத்தாய் பின் தொடர்ந்து எம்பிரான் என்றழ
கூற்றுத்தாய் சொல்லக் கொடிய வனம் போன
சீற்றமிலாதானைப் பாடிப் பற; சீதை
மணாளனைப் பாடிப் பற!

என்ற பாசுரத்தின் மூலம் விளக்குவார். (மாற்றுத்தாய் – சுமித்திரை

ஈற்றுத்தாய் – கோசலை, கூற்றுத்தாய் – கைகேயி)

ஆனால் கம்பனோ இக் காட்சியினைக் காட்டுகின்ற போது, கைகேயி தசரதனிடம் வரம் பெற்றவுடன், தசரதன் தன் வாயால் இராமனிடம் காட்டுக்குப் போ! எனக்கூறமாட்டான் என்பதனை உணர்ந்து தானே இராமனிடம் சொல்ல முற்பட்டு வருகின்றாள். இக் காட்சியினைக் கம்பர். தன் சொந்த மகனைப் போல வளர்த்த கைகேயியைக் காண இராமன் ஆர்வத்தோடு வருகின்றான். கைகேயியின் தூய சிந்தனை கூனியால் திரிந்துவிட்டது என்பது அவனுக்குத் தெரியாதல்லவா! இதனைக் கம்பர், 'தாயென நினைவான் முன்னே கூற்றமெனத் தமியள் நின்றாள்' என்ற ஒரே வரியில் விளக்கிக் காட்டுவார்.

(கூற்றம் – இயமன்)

ஆனாலும் இராமன் எத்தகைய மனநிலையில் கைகேயியைக்காண வந்தான்என்பதனைக்காட்டுவது கம்பனின் கடமையல்லவா? அதனைக் காலையில் கன்றினுக்கு பால்கொடுத்துவிட்டு மேய்ச்சலுக்குச் சென்ற பசுவானது மாலையில் திரும்ப வருகின்ற சமயத்தில் அந்த இளங்கன்றினுக்கு பசுவினைக் கண்டவுடன் எத்தகைய ஆர்வம் இருக்குமோ? அத்தகைய ஆர்வத்துடன் இராமன் இருந்தான் என்பதனைக் கம்பர், 'அந்தி வந்தடைந்த தாயினைக் கண்ட ஆன் கன்றின் அன்னான்' என்ற அழகான கவிதை வரியின் மூலம் விளக்கிக் காட்டுவார். (அந்தி – மாலைப்பொழுது) ஆனால் கொடிய மனம் கொண்ட கைகேயியோ, நீ பதினான்கு ஆண்டுகள் வனம் போக வேண்டுமென்றும், பரதன் நாடாள வேண்டுமென்றும் உன் தந்தை கூறினார் எனக் கூறினாள். இப்பொழுதே கானகம் செல்கிறேன் எனக் கூறி, இராமன் மகிழ்ச்சியோடு அவளிடம் விடை பெற்றுக்கொண்டு, தாய் கோசலை இருப்பிடம் நோக்கிச் சென்றான்.

இராமன் கோசலையிடம் காடு செல்ல விடைகேட்டவுடன் கோசலை துயரத்தில் இளைத்தாள். திகைத்தாள். வருந்தினாள், வீழ்ந்தாள். நான் இனி உயிர் பிழைப்பேனா? என்று அழுதாள். இத்தகைய சூழ்நிலையில் கம்பர் இங்கும் பசுவினையும் கன்றினையும் காட்டி வேறு விளக்கம் கொடுக்கின்றார். இதனை, கோசலையானவள் வறுமையில் வாழ்ந்த ஒருவனுக்கு பொன் கிடைத்து இழந்ததனைப் போல வருந்தினாள் எனக் கூறுவதோடு, தாய்ப்பசுவுடன் கூடவே இருந்த கன்றானது நிலையாகப் பிரிந்து சென்றால் தாய்ப்பசு எப்படி கண்ணீர் சிந்தி அழுமோ? அதனைப் போல அழுதாள் என்பதனைக் கம்பர்.

"கன்று பிரிந்துழிக் கறவை ஒப்பக் கரைந்து நின்றாள்" என்ற கவிதை வரி மூலம் விளக்குவார். இன்றும் கிராமங்களில் கூட கன்று இறந்து விட்டால் அக் கன்றினை தாய்ப்பசுவின் அருகில் கொண்டு சென்று, மோப்பம் பிடித்து உணருமாறுச் செய்து அதன் பின்னரே அக் கன்றினை அடக்கம் செய்வர்.

இராமன் ஒருவாறாக கோசலையைத் தேற்றியவனாக தாய் சுமித்திரை இருப்பிடம் நாடிச் செல்கின்றான். அங்கு சுமித்திரை சோகமாக இருந்தாலும், இராமன் உடன் செல்லும் தன் மகன் இலக்குவனிடம், இராமன் இருக்கும் இடமே உனக்கு அயோத்தி அவனே உனக்கு மன்னவன் மற்றும் அச் சீதையே உனக்கு உயிர்த்தாய் என்றாள். மேலும் மகனே இராமனின் பின்னால் தம்பியாகச் செல்லாதே! அடியாரினைப் போல தொண்டு செய்ய வேண்டும். அது மட்டுமல்ல இராமன் அயோத்திக்கு வந்தால் நீ வா! இல்லையேல் அவனுக்கு முன்னால், நீ உன்னை முடித்துக்கொள் எனக் கண் கலங்கிச் சொன்னாள்.

இராமனும் இலக்குவனும் சுமித்திரையைத் தொழுது கிளம்பிய நிலையில் இங்கும் கம்பர் இக்காட்சியினை தாய்ப்பசுவினையும் கன்றினையும் வைத்து வேறு வகையில் விளக்குவார். சுமித்திரை, தாய்ப்பசுவின் இரண்டு கன்றுகள் ஒரே நேரத்தில் வேறு இடத்திற்குப் பிரிந்து சென்றால் எவ்வாறு பசு வருந்துமோ? அவ்வாறு மிக வருந்தினாள் என்பார். இதனைக் கம்பர், 'இரண்டு கன்று ஒஇரி வெருவரும் ஆவினின் தாயும் விம்மினாள்' என்ற வரியின் மூலம் கூறி வெளிப்படுத்துகின்றார்.

இவ்வாறாக, பாசப்பசுவினையும் கன்றினையும் வைத்து கருத்துகளை கம்பர் வெவ்வேறு நிலையில் வெவ்வேறு பார்வையில் வெளிப்படுத்துகின்ற பாங்கே பாங்காகும். தசரதன் மந்தராலோசனைக் கூட்டத்தில் இருந்தவர்களின் நிலையினையும், கைகேயியிடம் இராமனிடம் இருந்த மனநிலையினையும் கோசலை மற்றும் சுமித்திரை ஆகியவர்களின் மனநிலையினையும் பாசப்பசுவினையும் கன்றினையும் வைத்து பல கோணங்களில் வெவ்வேறாகக்காட்டி, கம்பன் தன் கவித்திறத்தினைக் காட்டுவது, இலக்கிய இன்பம் தரும். இனிய நினைவாக நமக்கு அமைந்து மகிழ்ச்சியைத் தருகின்றது அல்லவா!

அரங்க. தியாகராசன், மயிலாடுதுறை.
9486718234

# விட்டலனின் ஒப்பற்ற பக்தர் - ஸ்ரீ பக்த துக்காராம் சுவாமிகள்.

– லலிதா வேலாயுதம்.

17–ஆம் நூற்றாண்டு மராத்திய பக்தி இயக்கத்தைச் சேர்ந்தவர். இவர் விட்டல பாண்டுரங்கனின் தீவிர பக்தர். 'அபங்கம்' எனப்படும் பக்திப் பாடல்களுக்காக பெரிதும் மதிக்கப்படுபவர். இவர் பக்தர் நாமதேவரின் மறுபிறப்பு என்று கூறப்படுகிறது. அவர் இப்பூவுலகில் விட்டுச் சென்ற பணியினை முடிக்கவே இவர் பிறப்பெடுத்தார். சமூக சீர்திருத்தங்களை வலியுறுத்தினார். சாதீய பாகுபாட்டை எதிர்த்தார். மேலும் அவரது வாழ்க்கை எளிமையான பக்தியுடனும், ஆன்மீக ஞானத்துடனும் இருந்தது. அவர் மராத்திய சத்ரபதி வீர சிவாஜியின் குரு ஆவார். 'வர்காரி' சம்பிரதாயத்தின் முக்கியமானவராவார். இவரது வாழ்க்கை திரைப்படமாகவும் பல மொழிகளில் வெளி வந்தள்ளது. அவரது வாழ்க்கை வரலாற்றை அறிந்து கொள்வோம்.

தற்போது தேஹு என்றழைக்கப்படும் சிற்றூர் அக்காலத்தில் தேவநகரம் என்றழைக்கப்பட்டது. இவ்வூர் மராத்திய மாநிலம் புனே நகருக்கு அருகில் உள்ளது. அவ்வூரில் வாழ்ந்து வந்த வணிகர் மாதவராவ் பண்டரிநாதனிடம் எல்லையில்லா பக்தி கொண்டவர். அத்தம்பதிகளுக்கு 1608–ஆம் ஆண்டு மகவாகப் பிறந்தவர் ஸ்ரீ துக்காராம் அவர்கள் குழந்தைப் பருவத்திலேயே கவிதைப் புனையும் திறமையும், இனிமையான குரலையும் கொண்டிருந்தார். மாதவராவின் இரண்டு நெருங்கிய நண்பர்கள் தங்களது புதல்விகளை துக்காராமுக்கு மணமுடிக்க தயாராக இருந்தனர். துக்காராம் தந்தையிடம் திருமணமே வேண்டாமென்ற போதிலும், பெற்றோர்களின் கட்டாயத்தினால் இரு பெண்களையும் மணந்தார். ஒரு மனைவிக்கு இரு குழந்தைகள் பிறந்தன. இன்னொரு மனைவி தனக்கு குழந்தை இல்லை எனினும் மற்றவளின் குழந்தைகளைத் தனது குழந்தையாக பாவித்தாள்.

சில வருடங்களில் பெற்றோரையும், ஒரு மனைவியையும் இழந்தார். தாயில்லாக் குழந்தைகளை அடுத்த மனைவி கமலாபாய் நன் முறையில்



வளர்த்து வர, அவருக்கும் குழந்தைகள் பிறந்தன. ஸ்ரீ துக்காராம் தேஹுவிலும் பண்டரிநாதனுக்கு ஒரு ஆலயம் எழுப்ப வேண்டும் என்ற எண்ணத்தில் தமது செல்வத்தின் பெரும்பகுதியைச் செலவு செய்ததுடன், பக்தகோடிகள், பிரமுகர்கள் அளித்த பொருள் உதவி, சரீர உதவியுடன் மின்னல் வேகத்தில் இரவு பகலாக நடந்து கும்பாபிஷேகமும் நடைபெற்றது. அக்கோவிலின் நித்திய பூஜையும், திருவிழாக்களும் அவரது சொந்த செலவிலேயே சீரோடும், சிறப்போடும் நடத்தி வந்தார்.

சில வருடங்களில் நாட்டில் பஞ்சம் தலை விரித்தாடியது. பஞ்சத்தால் மக்கள் தவிப்பது கண்டு மனது பொறுக்காது, வியாபாரத்துக்காக சேமித்து வைத்திருந்த நெல், கோதுமை, சோளம் போன்ற தானியவகைகளைத் தானமாக வாரி வாரி வழங்கி வர, துக்காராம் வீட்டிற்கும் பஞ்சம் வந்துவிட்டது. ஆனாலும் அவர் அது குறித்து கவலையின்றி, தமது வீட்டிலுள்ள பொருள்களையும், பவுன் நகைகளையும் விற்று தருமம் செய்யலானார். மனைவி, மக்கள் எத்தனை நாட்கள் பொறுமையுடன் இருப்பர்? இரு மைந்தர்களும் பசியின் கொடுமை தாங்காமல் கமலாபாயிடம் கூறிவிட்டு க்ஷேத்திராடனம் கிளம்பிவிட்டார்கள். பெற்ற பாசத்தை விட வளர்த்த பாசம் அவளின் மனத்தை நெகிழச் செய்ய தன்னிடம் இருந்த இரண்டு மூன்று பவுன்களை வழிச்செலவுக்கு கொடுத்தனுப்பினாள். அன்று இரவு வீட்டுக்கு வந்த துக்காராம், 'எங்கே குழந்தைகள்' எனக் கேட்க, மனைவி கோபம் கொண்டு இந்த நிலை நீடித்தால். இன்னும் கொஞ்ச நாளில் நானும் மடிந்து விடுவேன்

எனக் கூற, குழந்தைகளைப் பிரிந்த ஏக்கம் அவரது கண்களிலே கண்ணீரைப் பெருக்கியது.

அவரின் கவலையைக் கண்ட கமலாபாய் அவர் மீது அனுதாபம் கொண்டு அவளின் தந்தைக்குத் தெரிந்த ஒரு வட்டிக்கடைக்காரரிடம் நூறு பவுன் கடனாக வாங்கி துக்காராமிடம் கொடுத்து, முன் போல் தானிய வியாபாரத்தை நடத்தும்படி கூறினாள். அவரும் மனம் மகிழ்ந்து பணத்துடன் வியாபாரத்திற்குப் புறப்பட்டார். பொதிமாடுகள் இரண்டை வாடகைக்கு எடுத்து, அரிசி, சோளம், கம்பு முதலிய தானியங்களுடன் அடுத்துள்ள கிராமத்திற்கு வியாபாரம் செய்வதற்காகப் புறப்பட்டார். ஒரு அடர்ந்த காட்டின் வழியே பகவத் நாம சங்கீர்த்தனம் செய்தவாறு மாடுகளை ஓட்டிக்கொண்டு செல்லும் போது, பயங்கரமான பேய்மழை பெய்யத் தொடங்கியது. மாடுகள் சுமந்து கொண்டிருந்த தானியங்கள் அனைத்தும் சேதமாயின. உப்பு மூட்டைகள் கரைந்தன. பருப்பு மூட்டைகள் நீரில் மூழ்கின. குளிரில் துக்காராம் நடுங்க, மாடுகள் விறைத்துப் போயின. ஓர் ஆலமரத்தடியில் ஸ்ரீ துக்காராம் ஒதுங்கினார். அங்கேயே தியானத்தில் ஆழ்ந்து விட்டார். புலி ஒன்று அங்கு வந்து மாடுகளை அடித்து தின்றுவிட்டுச் சென்றது.

பொழுதும் புலர்ந்தது; மழையும் ஓய்ந்தது. ஸ்ரீ துக்காராம் தியானம் கலைந்து கண்களைத் திறந்தார். அவர் கண்ட காட்சி! தானியங்கள் மழையில் அடித்துச் செல்லப்பட்டன. மாடுகள் புலியால் கொல்லப்பட்டதென்றும் உணர்ந்தார். பாண்டுரங்கனை வழிபட்டு, மனைவியின் முன் செல்ல முடியாமல், குன்றின் மீது அமர்ந்து நிஷ்டையில் ஆழ்ந்தார். ஆனால் துக்காராம் இல்லத்திலோ, கவலையில் ஆழ்ந்திருந்த கமலாபாய் கணவனைக் கண்டு மனமகிழ்ந்தாள். அவளிடம் துக்காராம் வடிவில் வந்திருந்த பண்டரிநாதன் வியாபாரம் மிகவும் நன்றாக நடந்ததெனக் கூறி நிறைய பணம் கொடுத்தார். அதன் பின் தீர்த்தக்கரைக்குச் சென்று தீர்த்தமாடி வருவதாக கூறிச் சென்றார். கமலாபாய் அசலும் வட்டியும் எடுத்துக்கொண்டு வட்டிக்கடைக்காரரைக் காணச் சென்றாள். அவர் கமலாபாயிடம், துக்காராம் வந்து அசலையும், வட்டியையும் கொடுத்து விட்டு, ரசீது பெற்றுச் சென்றதாக கூறினார்.

நீராடச் சென்றவர் வெகு நேரமாகியும் இல்லம் வராதது கண்டு அஞ்சி, கணவரைத் தேடிப் புறப்பட்டாள். வீதி வீதியாகத் தேடியும் அவரைக் காணவில்லை என்பதால் பார்ப்பவர்களிடம் விசாரித்தார். ஆயர்குலச் சிறுவர்கள் மாடுகளை மேய்த்து விட்டு வீட்டிற்குத் திரும்பிக் கொண்டிருந்தனர். கமலாபாய் அவர்களிடம் கணவனைப்பற்றி விசாரித்தாள். அவர்கள் குன்றின் மீது ஒரு பெரியவர் தவம் செய்து கொண்டிருப்பதாக கூறினர். அவள் கணவனின் அடையாளங்களைக் கூறவும் ஆயர்குலச் சிறுவர்கள் ஆமோதிக்கவும், மின்னல் வேகத்தில் குன்றினை அடைந்தாள். மலைமீது ஒரு மரத்தடியில் இருந்த பெரும் பாறை மீது கண்களை மூடிக்கொண்டு தியானத்தில் அமர்ந்திருந்தார். கமலாபாய் கணவனின் கால்களில் வீழ்ந்து வணங்கினாள். அவர் கண்களைத் திறந்தார். நீராடிவிட்டு வருகிறேன் எனக் கூறி வந்து இங்கு அமர்ந்து தியானம் செய்கிறீர்களே! எதற்காக? என்று கேட்டாள். துக்காராமோ, வியப்பு மேலிட, கண்களில் நீர் பெருக, நடந்தவற்றைக் கூறவும் கமலாபாயும் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தாள். கமலாபாய் கணவனின் பக்தியைப் போற்றிப் புகழ்ந்து ஒரு பிரசங்கமே செய்துவிட்டாள். பிறகு கணவனிடம் மன்னிப்புக் கோரி, வீட்டிற்கு வரும்படி அழைக்க, தான் முற்றும் துறந்து விட்டதாக கூறி வீட்டிற்கு வர மறுத்து விடுகிறார். கமலாபாய் அவரை வீட்டிற்கு வரச் செய்வது மிகவும் கஷ்டம் என தெளிந்து, தான் தினமும் சாப்பாடு எடுத்து வருவதாக கூறிச் சென்றாள். மறுநாள் முதல் சில நாட்கள் தினமும் உணவு எடுத்து வந்த கமலாபாய், இங்கு அமர்ந்து தியானம் செய்வதைப் போலவே வீட்டிலேயே இருந்து தியானிக்கலாமே எனக் கூறி, அவரை வீட்டிற்கு திரும்ப வரச் செய்வதில் வெற்றி கண்டாள்.

(தொடரும்)

---

## வருந்துகிறோம்

சீர்காழி தாலுக்கா, தென்பாதி, காமராஜ் நகர், திரு. T. ஜெயராமன் பிள்ளை 20–10–25 அன்று இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்து கொள்கிறோம்.

## திருவிளையாடற் புராணம்

### 45. பன்றிக் குட்டிக்கு முலை கொடுத்த படலம்.

– 'சிவகாமியின் செல்வன்'

டாக்டர் தி. பாலசுப்பிரமணியன்.

தேவ குருவின் தவம் :

சொக்கலிங்கப் பெருமான் எழுந்தருளியுள்ள மதுரைக்கு நிறைய முத்துக்களை கொணரும் ஆறு வைகை. அதன் தெற்கே உள்ளது குருவிருந்த துறை – இன்றைக்கு இவ்வூர் குருவித்துறை எனப்படுகின்றது. அவ்வூரில் பிரகஸ்பதி (தேவகுரு) சிவனை நோக்கித் தவம் புரிகின்றார் . பெருமான் வரமளித்தார். அவ்விடம் குருநாதர் என்ற பெயருடன் விளங்கினார் பெருமான்.

தறிகெட்ட பிள்ளைகள் :

அவ்வூரில் சுகலன் என்ற வேளாளன் சுகலை என்னும் தன் மனைவியுடன் வாழ்ந்து வந்தான். அவர் தம் இல்லறத்தின் பயனாக 12 பிள்ளைகள் பிறந்தனர். செல்வச் செழிப்புச் செருக்கில் வளர்ந்த அப் பிள்ளைகள் கண்டித்துத் திருத்தப்படாமல் வளர்ந்தனர். நாளடைவில் பெற்றோரை இழந்த அப்பிள்ளைகள் வேடர்களுடன் சகவாசம் கொண்டனர். கானகம் சென்று வேட்டைத் தொழிலை மேற்கொண்டனர்.

சாவம் பெற்ற பிள்ளைகள் :

ஒரு நாள் வெயில் புகாத அடர் நிழற் புதர் ஒன்றின் கீழ் தவமிருக்கும் தேவகுருவான பிரகஸ்பதியைக் கண்டனர். அக்காட்சியைக் கண்ட அவர்கள் கைகொட்டிச் சிரித்தனர். பகடி செய்தனர். பழித்து இழித்துப் பேசினர். கற்களை வாரி அவர் மீது போட்டனர். தவம் கலைந்தார் தேவகுரு. பன்னிருவரையும் சினத்துடன் நோக்கினார். "பெரியோர்களைக் கண்டால் அடக்கத்துடன் வணங்க வேண்டும் என்பதனைக் கூட அறியாத வேடர்களாகிய நீங்கள் நிலம் உழுதொழிலர் ஆயிற்றே! எனவே நீங்கள் அனைவரும் பன்றிக்குட்டிகளாகப் பிறந்து தாய் தந்தையரை இழந்து வருந்தக் கடவீர்களாக"! என்று சாபமிட்டார்.

அப்பொழுதுதான் சாவத்தின் தன்மையை உணர்ந்தனர். அஞ்சினர். சாவத்தை ஏற்றனர். உடனே "இச்சாவம் எப்பொழுது நீங்கும்" என்றனர். அவர்களின் அஞ்சிப்பணிந்து குறையிரந்து வேண்டியநிலையினைக் கண்ட முனிவர் இரக்கமுற்றார். "என்னை ஆளும் சோமசுந்தரர் கடவுளே உங்களுக்குத் தாயாக வந்து முலை கொடுத்து உங்களைக் காத்துப் பாண்டியனுக்கு அமைச்சர்களாக ஆக்கியருள்வார் அதன் பின்னர் உங்களுக்கு முத்திப்பேற்றினை அருள்வார்" என்றார்.

பன்றிக் குட்டிகளாகப் பிறந்த சுகலன் புதல்வர்கள் :

சுகலன் புதல்வர்கள் பன்னிருவரும் தேவகுருவின் சாவப்படி குருவிருந்த துறையின் புறத்தே உள்ள காடுகளில் வாழும் பன்றிகளுக்கெல்லாம் அரசனாகிய பன்றியின் துணைவி வயிற்றில் குட்டிகளாக கருவுற்று உருப்பெற்று வெளிப்பட்டனர்.

இராசராசபாண்டியன் வேட்டைக்குச் செல்லுதல் :

காட்டு விலங்குகளின் தொல்லைகளை அகற்ற வேண்டி பாண்டிய மன்னன் காட்டுக்கு வேட்டைக்குச் சென்றான். என்னற்ற விலங்குகளைக் கொன்று குவித்தான். பன்றி அரசனும் அரசியும் பாண்டியனை எதிர்த்துப் போரிட்டு மடிந்தன. அவ்விடம் ஒரு மலையானது. அன்று முதல் அம்மலை பன்றிமலை என்று வழங்கலாயிற்று.

பெற்றவரைத் தேடிய பன்றிக்குட்டிகள் :

பன்னிரண்டு பன்றிக்குட்டிகளும் தமது பெற்றோரைத் தேடித் தேடி அலைந்தன. அவை இறந்ததை அறியாமல் அழுது தவித்தன. நிழலைத் தேடின. பசிக்குப் பால் இல்லை. துடித்தன. தாகம், பசி, வெயில் இம் மூன்றாலும் வாடி வதங்கின. ஏதும் செய்யத் தோன்றாமல் மதுரைச் சோமசுந்தரக் கடவுளை நினைத்து கதறி அழுது வேண்டின.

பன்றியாக வடிவெடுத்த சோமசுந்தரர் :

சோமசுந்தரக் கடவுள் மீனாட்சியுடன் அக்கானகத்தில் எழுந்தருளி தம்மிச்சையாய்த் திருவிளையாடல் கொண்டிருந்தார். அப்பொழுது அழுது வேண்டிய பன்றிக்குட்டிகளின் துன்பம் களைய, தாமே ஒரு தாய்ப் பன்றியானார். குட்டிகளின் அருகே சென்றருளினார்.

பாலமுது அளித்த பரமன் :

பன்றிக்குட்டிகள் பசியோடு விரைந்தோடி அதனை முட்டின. முகர்ந்தன. முதுகின் மீது தாவி ஏறிக் குதித்தன. விரைந்து ஓடி மீண்டன. தாய்ப்பன்றியாக வந்த இறைவன் தனது அருட்பெருக்கால் பாலினைச் சுரக்க குட்டிகள் குடித்து மகிழ்ந்தன. பின்னர் அக்குட்டிகளுக்கு முகம் ஒன்றை மட்டும் பன்றி முகமாக வைத்து ஏனைய உறுப்புகள் எல்லாவற்றையும் மாந்த உடலுறுப்புகளாக மாற்றி அருளினார் பெருமான். தாமெடுத்த பன்றி வடிவை அகற்றியவாறு மறைந்தருளினார்.

பரம்பொருளின் அருட்திறம் :

தாய்ப்பன்றியாகிப் பாலூட்டி, அறிவற்ற பன்றிக்குட்டிகளை அறிவுடை மாந்தர்களாக்கினார். அத்தகைய கடவுள் இவ்வுலகில் உள்ள எவ்வுயிர்க்கும் தாயும் தந்தையுமாய் நின்று காத்தருளுகின்றார். பெரியோரை இகழ்தல் பெரும்பாவம். அதனால் வருவது கடும் சாவம். சாவம் தருவது பெருந்துன்பம். துன்பம் வேண்டாம் எனில் இறைவனை வேண்ட வேண்டும். பெரியோரை வணங்கிப் போற்றி வாழ்த்தினைப் பெறவேண்டும்.

# இரண்டாம் ஆண்டு நினைவு அஞ்சலி








தோற்றம் :
11–09–1951

மறைவு :
04–01–2024

*நீங்கள் இல்லாத இடம் வெற்றிடமாக தெரிகிறது. ஆனால் என்றென்றும்
உங்களுக்கான இடம் எங்கள் இதயத்தில் இருக்கின்றது.*

*நீங்கள் இல்லாத வீட்டில் உங்கள் நினைவுகள்
மட்டுமே உயிர்ப்புடன் இருக்கின்றது.*

*நீங்கள் பாசமிகு குடும்பத்தலைவராய் கடமையில் சிறந்த
அதிகாரியாய் உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் சிறந்த
வழிகாட்டி மற்றும் ஆலோசகராக இருந்தீர்கள்.*

*உங்களின் பிரிவால் துயரில் ஆழ்ந்துள்ள எங்களை இறைவனாய்
இருந்து என்றென்றும் நல்வழி காட்டுமாறு இறைஞ்சுகிறோம்.*

உங்கள் நினைவுடன் வாழும் குடும்பத்தினர்.

மனைவி – **செல்வி.**

மகள் – **ஆர்த்தி M.**

மகள் – **காவியா M.**

மருமகன் – **முத்துகுமரன் P.**

மருமகன். **வேணு கோபால் M.**

பேரன்கள் – **விஷ்ணு, ரித்திக்**

பேத்தி – **லக்ஷ்சயா.**

# 8ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் :
1–1–1936

மறைவு :
28–12–2017

## *பெண்ணாடம்* கு. வேலாயுதம் பிள்ளை

**(Retd. Asst. Secretary S.A.C.C. Bank)**

*தங்கள் வழியிலேயே என் பயணம் தொடர்கிறது.*
*அதற்கான தைர்யத்தையும் தன்னம்பிக்கையும்*
*எனக்கு அளித்து வழி நடத்த வேண்டுகிறேன்.*

அன்புடன்

உங்கள் **மணிக்கொடி**

மற்றும்

**உங்களை கொண்டாடி மகிழ்வித்த சொந்தமும் பந்தமும்**



8-ஆண்டு நினைவஞ்சலி
தோற்றம்:
1954
மறைவு:
02.01.2018
தெய்வத்திரு
மெட்ராஸ் (எ) R.மூர்த்தி பிள்ளை
அவர்கள்
உரிமையாளர், மெட்ராஸ் ஆட்டோ ஒர்க்ஸ்
கச்சேரி ரோடு, மயிலாடுதுறை
மீளாத்துயரில் கொண்டு, எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி சென்றீரே!
கலையாத நினைவுகளுடன் உதிரும் கண்ணீர் பூக்களாய் அர்ச்சித்து
உங்கள் ஆத்மா சாந்தியடைய எங்கள் கண்ணீர் துளிகளைக் காணிக்கையாக்குகிறோம்.
என்றும் தங்கள் நினைவில் வாழும்
மனைவி: M.பிரேமா
மகன்கள்:
M.திருமலைராஜன் பிள்ளை
திருமலை ஆட்டோ ஒர்க்ஸ், கூறைநாடு
M.ஜோதிராஜன் பிள்ளை
நிறுவனர், ஜோதி பவுண்டேஷன்,
மெட்ராஸ் ஆட்டோ ஒர்க்ஸ்
மருமகள்கள்:
T.கருணாவதி
J.கிருபாலெட்சுமி
பேத்திகள்:
Dr.T.பிரியதர்ஷினி
T.காவியா
J.சுபஸ்ரீ
முகவரி: 12/6, ஆராயத்தெரு, கூறைநாடு, மயிலாடுதுறை
பசியை போக்குவோம்!
Regd No.50/2020
மனிதம் காப்போம்!
JOTHI FOUNDATION
ஜோதி ஃபவுண்டேஷன்
தன்னார்வ தொண்டு நிறுவனம்
TAX EXEMPTED US 2A(1) (A) (III) (URN:AADTJ8052E22CHO) AND US
80G(5)(III) URN : AADTJ802E22CHOT) OF THE INCOME TAX ACT 1961.
செல்: 9788042324
Off: கச்சேரி ரோடு, நெ-3, மலைக்கோயில்
மயிலாடுதுறை-609 0011.

# வானத்தில் மேலும் ஒரு நட்சத்திரம்...!



தோற்றம்:
06.08.1969





மறைவு:
19.12.2025

## திருமதி R. ஆனந்தி

பூர்வீகம் எடுத்துக்கட்டி சாத்தனூர் - சென்னை K.K. நகரில் வசித்து வரும் தமிழ்நாடு கார்காத்தார் சங்க கூட்டமைப்பின் தலைவர் முனைவர் திரு. **K. சுரேஷ் @ திரு. KKR. K. ராஜசுந்தரம் பிள்ளை** அவர்களின் துணைவியார் திருமதி **R. ஆனந்தி** அவர்கள் 19.12.2025, வெள்ளிக்கிழமை இரவு 11.45 மணியளவில் இறைவனடி சேர்ந்தார்கள் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

"மென்மை, பொறுமை, அன்பு, சேவை ஆகியவற்றின் உருவாக வாழ்ந்து, உறவுகளையும் சுற்றத்தாரையும் பாசம் கொண்டு இணைத்தவர்"

"அமைதியில் வலிமையும், பார்வையில் கருணையும் வாழ்க்கையில் தியாகமும் கொண்டவர். தன் தேவைகளை மறந்து, பிறரின் சந்தோஷத்தை நிறைவேற்றிய ஒரு மௌனப் பேரன்பு கொண்டவர், ஒரு பெண்ணாக பிறந்து, ஒரு உலகமாக வாழ்ந்தவர்."

என்றும் நீங்கா நினைவில் வாழும்

**KKR குடும்பத்தினர்**

# கண்ணீர் அஞ்சலி





மலர்ந்தது
09–04–1949
கோடாலி கருப்பூர்



உதிர்ந்தது
02–11–2025
திருவிளையாட்டம்

# பேபி (எ) ராஜேஸ்வரி

மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி வட்டம் திருவிளையாட்டம்

**பாசக் கூட்டின் முதல் பறவை, நல்முத்துக்கள் சுமந்த சிப்பி**
**சிற்பியாக உழைத்து, உயர்த்தி, உடல்நலமிழந்து**
**கண்ணுறங்கும் நேரத்தில் கடவுளடி தேடி காற்றில் கரைந்தாயோ!**
**எம்மையெல்லாம் கண்ணீரில் மிதக்கவிட்டு**

எங்களது தாயாரும் திரு. P. இராசமாணிக்கம் அவர்களது மனைவியுமாகிய திருமதி. **பேபி (எ) இராஜேஸ்வரி அம்மாள்** அவர்கள் 02–11–2025 ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 5 மணியளவில் சிவலோக பதவி அடைந்தார்கள். அன்னாரது இறுதிச் சடங்கில் பங்கேற்று எங்களுக்கு ஆறுதல் கூறிய கார்காத்தார் சங்கத்தினருக்கும், நண்பர்கள் மற்றும் உறவினர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

நன்றியுடன்

**பேரன்கள் :**
செல்வன். **R. சிவப்பிரியன்**
செல்வன். **R. சிவராம்**
செல்வன். **R. அட்சயகுமார்**
செல்வன். **R. அனிருத்குமார்**

**பேத்திகள் :**
திருமதி. **ஓவியா - அரவிந்து**
திருமதி. **சுவேதா - பிரகாஷ்**
செல்வி. **திவ்யா**

**கொள்ளுப்பேரன் :** செல்வன். **நீரவ் வேத்**
**கொள்ளுபேத்தி :** செல்வி. P. **சைந்தவி**

திருமதி. **உஷா - இரமேஷ்** – மயிலாடுதுறை
திருமதி. **ஷீலா - செந்தில்குமார்** – ஓதாரி
திருமதி. **கீதா - இராஜசேகரன்** – மயிலாடுதுறை
திரு. **இராம்குமார் - கிருத்திகா** – சென்னை

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் :
15–06–53

மறைவு :
1–1–2024

# இந்திரா

திருச்சங்காட்டாங்குடியில் பிறந்த திருமகளே
தெய்வ திருவாளர்கள் இரத்தினம் பிள்ளை, தங்கத்தம்மாள்
இவர்களின் மூத்த மருமகளே. கணவனுக்கும், குடும்பத்திற்கும்
உறுதுணையாக நின்ற உத்தமியே.
நீ எங்களை விட்டு பிரிந்தாலும், எங்கள் நெஞ்சம் மறப்பதில்லை
உன் நினைவை இழக்கவில்லை. ஆண்டு இரண்டு கடந்தாலும்
எப்போதும் எங்கள் மனதில் வாழும் **இந்திரா**வே.
உன் ஆன்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுகின்றோம்.

கணவர்
**R. இராதாகிருஷ்ணன்,** M.Sc., M.Ed
முதுகலை ஆசிரியர் ஓய்வு – SHS மேலையூர்
மேலப்பெரும்பள்ளம் – 609107

மகன் – மருமகள்
**R. சாயிகிருஷ்ணன்,** B.E.,
TANCEM – அரியலூர்.
**R. அகிலா சாயிகிருஷ்ணன்**
அரியலூர்.

பெயர்த்திகள்
**S. சாரு ரூபா,** B.E.,
இன்போசிஸ் – மைசூர்.
**S. சாரு பாலா,** XII Std

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
**16–02–1951**



மறைவு
**12–01–2025**

## V.S. சந்தானம், B.Sc., B.Ed., M.A. (தமிழ்)

ஆசிரியர் ஓய்வு – SHSS – மேலையூர்

**பூம்புகார் வெள்ளையனிருப்பு தெய்வதிருவாளர்கள்**
**சிங்காரம் சாரதத்தின் இளையமகன் நீ**
**தமிழ்தாய் தத்தெடுத்த கலைமகன் நீ**
**ஆசிரியர் குலத்துதித்த அரும் புதல்வன் நீ**
**எம் குலம் தழைக்க இறைக்கொடுத்த வரம் நீ**
**உள்ளம் உருகுகின்றோம் உங்கள் உறுதுணையின்றி**
**வாழ்வாங்கு வாழ எமை வானின்று வாழ்த்துங்கள்**

என்றென்றும் நீங்கா நினைவுகளுடன்

மனைவி. திருமதி. **S. விசாலாட்சி,** B.A

மகன் – மருமகள் : **S. பாலாஜி,** B.E., **V. மங்களகௌரி,** MCA

மகள்கள் – மருமகன்கள் :

**M. கோதை,** B.E.,
**A. மூர்த்தி,** MBA
சேலையூர் – சென்னை.
**V. சாருமதி,** M.Sc
**G. வெங்கடேஷ்,** M.Tech
உளுந்துக்குப்பை

பெயரன் – பெயர்த்திகள் :

**M.K. பிரஜ்த்ராஜ்,** B.Tech
**M.K. மாதேஷ்ராஜ்**
**B. ஜீவிக்ஷா**
**B. அமிர்தேஷ்**
**V. ஆருத்ரன்**
**V. குருபரன்**

# பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி



**திரு. கோ. ராஜகோபால் பிள்ளை**
ம. மேலவன்னியூர்
குமராட்சி ஒன்றியம் திமுக
முன்னாள் ஒன்றிய துணை செயலாளர்

**திருமதி. ரா. சிவதனுசு**
ம. மேலவன்னியூர்

தங்களின் பிரிவால் துயரில் ஆழ்ந்த எங்களை தெய்வமாக
வானின்று வாழ்த்தி நல்வழிகாட்டிட வேண்டுகிறோம்.

என்றும் உங்கள் நினைவோடு வாழும்

மகன் : **R. கண்ணன்,** ஓய்வு – தமிழ்நாடு மின்சார வாரியம்

மருமகள் : தெய்வத்திருமதி **K. விமலா,** சிதம்பரம் முன்னாள் நகர் மன்ற உறுப்பினர்

பேத்தி : **K. கவிதா,** HCL Technologies, Chennai

பேரன் : **N. வெங்கடேஷ்,** RENAULT NISSAN, Oragadam, Chennai

மற்றும் **உறவினர்கள், நண்பர்கள்**

8A, திருவள்ளுவர் தெரு, சிதம்பரம் – **608 001.**

# கண்ணீர் அஞ்சலி







தோற்றம்
**06–07–1949**

மறைவு
**02–12–2025**

## VPS என்னும் V. பெரியசாமி பிள்ளை

கடலூர் மாவட்டம் திட்டக்குடி வட்டம் கிளிமங்கலம் கிராமத்தில் வாழ்ந்து வந்த **VPS என்னும் V. பெரியசாமி பிள்ளை** அவர்கள் கடந்த **2–12–2025** செவ்வாய்க்கிழமை மதியம் **3** மணி அளவில் இறைவனடி சேர்ந்தார் என்பதனை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்னாரின் எண்ணமும் ஆன்மாவும் எங்களுடனே பயணிக்கும்.

மனைவி : **சேது பெரியசாமி**

மகள் :

**P. கலைவாணி - மணிகண்டன்**

மகன்கள் :

**P. வேல்முருகன் - கவிதா**

**P. ராஜ்குமார் - ஆர்த்திகா**

பேரக்குழந்தைகள்

**M. தனலட்சுமி**

**M.K. ரமணா**

**V. சிவகார்த்திகேயன்**

**V. ஆதீசன்**

**R.K. ஆருத்**

**R.K. ஆதவ்**

மற்றும் **உறவுகளும் நண்பர்களும்**

# MAGIZH

FERTILITY & WOMEN'S HOSPITAL
&
STONE UROLOGY & ANDROLOGY CENTRE

**No.16, 3rd Main Road, State Bank of India Colony, Chitlapakkam, Chennai**

**(Near Chrompet Varadharaja Cinemas)**



## MEDICAL SERVICES

- Fertility Services
- Obstetrics Services
- Gynaecology / Laproscopic / Hysteroscopy Services
- Andrology
- General Surgery Services
- Operation Theatre Services
- Pediatrician
- Lab / Blood Test
- Laparoscopic Surgeries
- Urology stone services
- Ultrasound scans
- All vaccination available





**Dr.C.Abi Anand**

MD(PGI) MEDALIST, DNB, FMAS (Laparoscopy), FRM, ADRM (Germany), Diplomate in Cosmetic Gynaecology

Senior Consultant Fertility Specialist, Laparoscopic Surgeon, Cosmetic Gynecologist



**Dr.K.Anand**

MS (Gen.surgery) Mch( Urology ) FMAS (Laparoscopy)

Senior Consultant Urologist & Andrologist

Laparoscopic Surgeon

Posted at Egmore RMS, Pathrikachanel, Chennai - 08.
RNI No. TNTAM / 2009 / 30435 Regn. No. TN/CH( C) / 405 /2025 - 2027 & WPP. No. TN/PMG (CCR)/WPP-161/2025-2027
Date of Publication : 15th of Every Month
13th January 2026

CHOZHA HOTELS

# HOTEL KANAKABHISHEGAM

## First Hotel From The Temple

**Hotel Kanakabhishegam is proud to give back to society by sponsoring food for all the doctors and crew members who volunteered at the recent eye camp organized at Guruganasamandar Mission School.**

DHINA PUYAL ENGLISH AND TAMIL Daily — PRGI.NO: TNBIL/25/A0820

தமிழ்நாடு முழுவதும் மாவட்டம் மற்றும் தாலுக்கா வாரியாக பணிபுரிய செய்தியாளர்கள் தேவை
9442392229
04364266666

தினபுயல் DHINAPUYAL தினசரி நாளிதழ்

தமிழ்நாடு முழுவதும் விளம்பரம், சந்தா மற்றும் சர்குலேஷன் தொடர்புக்கு
7598779000

Volume: 01 Issue: 173 Sunday 21.12.2025 ENGLISH & TAMIL DAILY Price: 5.00

## குருஞானசம்மந்தர் மிஷன் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில்
## இலவச கண் பரிசோதனை முகாம் நடைபெற்றது

செம்பனார்கோவில்.டிச.21.

திருக்கடையூர் குருஞானசம்மந்தர் மிஷன் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் திருக்கடையூர் டெம்பிள் சிட்டி லயன் சங்கம், பாண்டிச்சேரி அரவிந்த் கண் மருத்துவமனை, மயிலாடுதுறை மாவட்ட பார்வை இழப்பு தடுப்பு சங்கம் ,மற்றும் அர்ச்சகர்கள் சங்கம் உதவியுடன் இலவச கண் பரிசோதனை முகாம் நடைபெற்றது. முகாமில் திருக்கடையூர், பிள்ளை பெருமாள் நல்லூரர்,



**The initiative reflects the hotel's commitment to community welfare and gratitude towards the medical professionals and support staff who dedicated their time and expertise to serve the public. By providing meals, Hotel Kanakabhishegam ensured that the volunteers were well cared for while they carried out this noble mission of restoring vision and bringing hope to many.**

Means The Best Food

Amirtham A\C Veg Restaurant
Best Food @ Thirukadaiyur
Web : www.chozhahotels.com
Mob:7299078191

**Published by : K. SHANMUGAM,** on behalf of The Karkarthar Association (Madras), From 64, 10th Street, Sowrashtra Nagar, Choolaimedu, Chennai - 600 094 and **Printed by : M. NATARAJAN** at **Mayur Printers,** No. 72/88, Kamaraj Colony 8th Street, (Palayakaran Street) Kodambakkam, Chennai, Tamil Nadu - 600 024. **Editor : S. ANBALAGAN**